கீர்ஸுமிருத கானங்கள்! பக்திரசமிகு நடனங்கள்!!

மனோஹர

மஹாலிங்கம்

ரஞ்சித **ருக்மணி**

மதுர-நகைச்சுவை-ஹாஸ்ய
நடன நக்ஷத்ரம் ஜொலிக்கும்

ப்ரகதி


ஸ்ரீ வள்ளீ

இப்பொழுது 4 வது வாரமாக
நடைபெறுகிறது

S.C.F. LTD PRODUCTION

டைரக்ஷன்
A.V.மெய்யப்பன் & A.T.கிருஷ்ணஸ்வாமி


அவளுக்கு பெருமையே
ஆம். பெருமைப்படத்தான் செய்வாள் அவள்
அழகி, கலாநாகரிகப் பெண். எல்லாவற்றிற்கும்
மேலாக அவள் தன் கணவனை வசப்படுத்தும்
ரகசியத்தை கண்டறிந்திருக்கிறாள். அந்த ரகசியம்
தான் என்ன? காலையிலிருந்து மாலை வரை வேலை
செய்து களைத்து வரும் கணவனை ஒரு கப்
நரசூஸ் காபி அளித்து திருப்தி செய்வதே.
நரசூஸ்
இந்திய தயாரிப்பில் தலை சிறந்தது
IN1TM.
B




சாக்கின் மேன்மையைக் குறிப்பது
கரும் பூனை மார்க்
AROMATIC CHEMICAL & OIL CO
சோப்பு, வாசனை சாமான்கள், சோடா பானம், பெப்பர்மிண்டு தயாரிப்பவர்கள். கரும் பூனை மார்க் பொருள்கள், தங்கள் தயாரிப்புகளுக்கு மிகச் சிறந்தவை என்பதைத் தெரிந்து கொண்டிருக்கிறார்கள்.
AROMATIC CHEMICALS
AMINJIKARAI, MADRAS.
FAD/73



RHEUMATISM CURED IN ONE WEEK
with "RUMASA"
கீல்வாதங்களுக்கான - ரத்த புஷ்டி பில்லைகள்
டாக்டர் பான் (வியன்னா ஸ்பெஷலிஸ்ட்) கண்டு பிடித்த இந்த அதிசய மருந்து கீல்வாதம், தசைவலிகள் சுறு மூட்டுகளில் - வாயு வியாதி முதலியவைகளால் பீடிக்கப்பட்ட கோடிக் கணக்கானவர்களை சௌக்கியமாக்கி வருகிறது.
கீல் வியாதியினால் முடமான டாக்டர் ஒருவர் கூறுகிறார்:—
நான் செய்து கொண்ட சிகிச்சை ஒன்றுகூட வெற்றி தராததால் எல்லா நம்பிக்கையையும் இழந்தேன். கடைசியாக ருமாஸா சீக்கிரமாக என் கீல்வாத நோயை குணப்படுத்தி புத்துயிர் அளித்தது. கீல் வாதத்தினால் கஷ்டப்படுகிறவர்களுக்கு இதை சிபாரிசு செய்கிறேன்.
H. D. வாடா, எம். பி. பி. எஸ்.
ஒவ்வொரு பாக்கெட்டிலும் உத்தரவாதம் அடக்கம் செய்யப்பட்டிருக்கிறது.
பாக்கெட் 1-க்கு ரூ. 7/4/- தபால் செலவு அணா 12 தனி
டிஸ்டிரிப்யூடர்கள்: பி. ஸி. டிகேஜ் & கோ., த. பெ. நெ. 169. பம்பாய் 1

சினிமா நட்சத்திரங்களைப் போல, நீங்களும் உங்கள் சருமத்தைக் காப்பாற்றுங்கள்!



சாதனா போஸ்



என் சருமத்தைப் பாதுகாக்கும் பொறுப்பை நான் லக்ஸ் டாய்லட் சோப்பிற்கே விட்டு விட்டேன் என்று கீர்த்திவாய்ந்த அழகிய சாதனா சொல்லுகிறார். மணமுள்ள இந்த அழகிய சோப்பைத்தான் அவர் தவறாமல் உபயோகிக்கிறார். அதன் நுரைபரந்த அவருடைய சருமத்தை மிருதுவாகவும், இளமையாகவும், கெடுதல்வராமலும் வைத்துக் கொள்கிறது. அநேக அழகிய இந்திய சினிமா நட்சத்திரங்கள் தங்கள் சருமத்தை பாதுகாக்கும் பொருட்டு லக்ஸ் டாய்லட் சோப்பை நம்பியிருக்கிறார்கள்.

லக்ஸ் டாய்லட் ஸோப்

LTS. 140-50-50 TA

LEVER BROTHERS (INDIA) LIMITED



மலர் 4 | 1945 மே 6 | பார்த்திப௵
இதழ் 39 | | சித்திரை 24

"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் வரும் பெயர்களும், சம்பவங்களும் கற்பனையே.

ருஷிய ஆசிரியர் மாக்ஸிம் கார்க்கி தாம் எழுதிய கதை ஒன்றை ஸ்டாலினுக்கும் மொலடாவுக்கும் படித்துக் காட்டிக் கொண்டிருக்கிறார்



இவ்வருஷத்திய மகோன்னத படம்!



FOR ANDHRA, CEDED & NIZAMS: CHAMRIA TALKIE DISTRIBUTORS.

கல்கி

மலர் 4 | தமிழ்த்திரு நாடு தன்னைப் பெற்ற தாயென்று கும்பிடடி பாப்பா —பாரதியார் | இதழ் 39

என்ன சேதி?

வல்லார் ஒருவர் உளரேல்......?

"நல்லார் ஒருவர் உளரேல் அவர் பொருட்டு எல்லார்க்கும் பெய்யும் மழை" என்னும் முதுமொழியில், "நல்லார்" என்பதை "வல்லார்" என்று மாற்றிப் படிக்க வேண்டுகிறோம். ஏனெனில், அதற்கிணங்கச் சென்ற வாரத்தில் ஒரு சம்பவம் நடந்திருக்கிறது. ஸான் பிரான் ஸிஸ்கோவில் தற்போது நடைபெற்றுவரும் சர்வதேச(?) தேச — ஐக்ய (?) நாடுகளின் — மகாநாடானது, ஆரம்பிக்கும் போதே, ஒரு தகராறுடன் ஆரம்பமாயிற்று. அந்தத் தகராறு மேற்படி மகாநாட்டுக்கு யார் தலைமை வகிப்பது என்பது பற்றித்தான். தகராறைக் கிளப்பியவர் ருஷியப் பிரதிநிதியான மொலடாவ். (தொந்தரவை விலைக்கு வாங்குவது என்பார்களே, அதுபோல் பிரஸிடெண்ட் ட்ரூமன், தோழர் ஸ்டாலினுக்கு விசேஷ விண்ணப்பம் அனுப்பி மொலடாவை மேற்படி மகாநாட்டுக்கு வரும்படி செய்தார்!) மகாநாட்டுக்கு ஆரம்பம் முதல் இறுதி வரையில் அமெரிக்காவின் பிரதிநிதி ஸ்டெட்டினியஸே தலைமை வகிக்க வேண்டுமென்று செய்திருந்த ஏற்பாட்டை மொலடாவ் ஆட்சேபித்தார். கடைசியில் சமரசம் ஏற்பட்டது. மகாநாட்டைக் கூட்டிய அமெரிக்கா, பிரிட்டன், ருஷியா, சீனா ஆகிய நாலு தேசப் பிரதிநிதிகளும் வரிசைக் கிரமமாக மகாநாட்டுக்குத் தலைமை வகிக்க வேண்டுமென்று முடிவு செய்யப்பட்டது. ஆகவே, வல்லார் ஒருவர் போட்ட சண்டையின் பயனாக, பலம் குறைந்த ஏழைச் சைனா தேசத்தின் பிரதிநிதிக்கும் ஸான் பிரான் ஸிஸ்கோ மகாநாட்டில் அக்கிராசனம் வகிக்கும் பாக்கியதை கிடைத்தது!

நாமும் சந்தோஷிக்கிறோம்

சீனாவுக்குக் கிடைத்த பெருமையை எண்ணி நாமும் சந்தோஷிக்கிறோம். சீனா ஒரு ஆசிய நாடு; இந்தியாவுடன் சிநேக உரிமை பூண்ட நாடு; அதோடு இந்தியாவில் நாமும் சீனாவுக்காக எத்தனையோ அநுதாபத் தீர்மானங்கள் நிறைவேற்றியிருக்கிறோம். மேலும் ஸான்பிரான் ஸிஸ்கோ மகாநாட்டைக் குறித்து வேறு எந்த விதத்திலும் நாம் சந்தோஷப்படக் காரணம் இருப்பதாய்த் தெரியவில்லை. உண்மையில், வெட்கப்பட்டுத் தலைகுனிவதற்கு வேண்டிய காரணம் இருக்கிறது. மேற்படி மகாநாட்டில் நாற்பத்தாறு தேசங்களின் பிரதிநிதிகள் வந்திருக்கிறார்கள் அல்லவா? அவர்களில் நாற்பத்தைந்து தேசங்களின் பிரதிநிதிகள், அந்தந்த நாட்டுச் சுதந்திர தேசிய அரசாங்கங்களின் பிரதிநிதிகள். ஆனால் நமது இந்தியா தேசத்திலிருந்து, மேற்படி மகாநாட்டுக்குச் சென்றிருக்கும் மும்மணிகளோ, — சொல்ல வேண்டியதில்லை! அவர்களுடைய தலைப்பாகைகளை மட்டும் இந்தியத் தலைப்பாகைகள் என்று சொல்லலாமே தவிர, மற்றப்படி அவர்களை இந்தியாவின் பிரதிநிதிகள் என்று எந்த விதத்திலும் கூற முடியாது.

சென்னைக்குப் பெருமைதான்!

மேற்படி மும்மணிகளில் ஒருவரான ஸர் ஏ. ராமசாமி முதலியார் அவர்கள் ஸான்பிரான்ஸிஸ்கோ மகா நாட்டில் நிகழ்த்திய அரிய பெரிய சொற்பொழிவைக் குறித்துச் செய்தி வந்திருக்கிறது. சொற்பொழிவின் முடிவில் 'பலமான கை தட்டல்' நிகழ்ந்ததாகவும் தெரி

கிறது. இதுவரையில் மேற்படி மகாநாட்டில் பேசியவர்களுக்குள்ளே ஸர் ராமசாமி முதலியார் தான் 'வாக்கு வன்மை'யில் பெயர் எடுத்தார் என்னும் செய்தியும் வந்திருக்கிறது. சபாஷ்! அதுதான் சரி! சென்னை மாகாணம் பெற்றெடுத்த இரண்டு அரிய பெரிய வாசாலகர்களில், பாவம், ஸ்ரீ சத்தியமூர்த்தி காலமாகி விட்டார். ஸர் ராமசாமி முதலியார் இப்போது ஸான் பிரான்ஸிஸ்கோ மகாநாட்டுக்குச் சென்று, சென்னை மாகாணம் வேறு எதில் பின் வாங்கினாலும் வாக்கு வன்மையில் மட்டும் முன் நிற்கிறது என்பதை நிரூபித்தது பற்றிச் சென்னை மாகாணம் பெருமையடைய வேண்டியதுதான்.

இந்தியா—சின்ன தேசமா?

ஆனாலும், ஸர் ஏ. ராமசாமி முதலியார் தமது சொற்பொழிவில், இந்தியாவை 'சின்ன தேச'மாகக் குறிப்பிட்டிருப்பதை நினைக்கும்போது நமக்கு என்னமோ ஒரு மாதிரியாகத்தான் இருக்கிறது. இமய மலையிலிருந்து கன்னியாகுமரி வரையில் விரிந்து கிடக்கும் தேசத்தை ஸிரியா, லெபானன், ஹாலந்து, பெல்ஜியம் முதலிய கையகல தேசங்களுடனே சேர்த்துக் கொண்டு, "பெரிய தேசங்களாகிய நீங்கள் எங்களைப் போன்ற சின்ன தேசங்களை அலட்சியம் செய்து விடக் கூடாது!" என்று ஸர் ராமசாமி முதலியார் கெஞ்சிக் கேட்டதைப் படிக்கும்போது, பலத்த கரகோஷத்தில் கலந்துகொள்ள நமக்கு ஆயிரம் கைகள் இல்லாமற் போய்விட்டனவே என்று வருத்தமாயிருக்கிறது!

ஜவாஹர் போயிருந்தால்...?

நியாயமாக மேற்படி ஸான் பிரான்ஸிஸ்கோ மகாநாட்டுக்கு இந்தியாவின் பிரதிநிதியாகப் போயிருக்க வேண்டியவர் இன்று சிறைச்சாலையில் அடைபட்டுக் கிடக்கிறார். பண்டித ஜவாஹர்லால்ஜியைத் தான் சொல்கிறோம். அச்சு நாடுகளின் அக்கிரமங்களைப் பத்து வருஷத்துக்கு முன்னிருந்து கண்டித்து வந்த அந்த வீரர், இந்திய தேசிய சர்க்காரின் பிரதிநிதியாக ஸான் பிரான்ஸிஸ்கோ மகாநாட்டுக்குப் போயிருந்தால், எப்படியிருக்கும்! அவரும் தலை நிமிர்ந்து மார்தட்டிக் கம்பீரமாகப் பேசுவார். இந்தியாவிலே நாமும் தலை நிமிர்ந்து நடப்போம். உலகம் இந்தியாவைக் கௌரவத்துடன் நோக்கும். சமாராதனைக்கு அழைக்கப்படாத விருந்தாளி தெரு வாசலில் நின்று கூச்சல் போடுவதைப்போல் ஜவாஹரின் சகோதரி ஸ்ரீமதி விஜயலக்ஷ்மி இன்று ஸான் பிரான்ஸிஸ்கோ வீதிகளில் கூச்சல் போடும்படியாகவும் நேரிட்டிராது. இவ்வளவு கேடுகளும் இந்தியத் தலைவர்களின் முன்யோசனைக் குறைவினால் ஏற்பட்டவை என்பதை நினைக்கும் போது நமது வருத்தம் பன்மடங்கு ஆகிறது. முன்யோசனையுடன் ராஜாஜி எடுத்துக் கூறி எச்சரிக்கை செய்யும் அந்தக் காலத்தில் அவர்கள் பொருட்படுத்தவில்லை.


மொலடாவ் போட்ட போடு

ஸான் பிரான்ஸிஸ்கோ மகாநாட்டுக்கு ஜவாஹர்லால்ஜி போகாததினாலும் ஸர் ஏ. ராமசாமி முதலியார், முதலிய மும்மணிகள் போனதினாலும் இந்தியாவுக்கு ஏற்பட்ட கஷ்டத்தை ஓரளவு நிவர்த்தி செய்தவர் யார் தெரியுமா? ருஷியப் பிரதிநிதியான மொலடாவ்தான். அர்ஜன்டைன் என்னும் தேசம் ஏற்கெனவே அச்சு நாடுகளுக்குச் சாதகமாயிருந்து கடைசி காலத்தில் பல்டி அடித்த தேசம். அந்த தேசத்தை இந்த மகாநாட்டில் சேர்த்துக் கொள்வது பற்றி மொலடாவ் ஆட்சேபித்தார். அந்த ஆட்சேபம் வெற்றி பெறவில்லை. ஆனால், எந்த நோக்கத்துடன் ஆட்சேபத்தைக் கிளப்பினாரோ, அந்த நோக்கம் நிறைவேறியது.

போலந்தின் உண்மை சர்க்காருக்கு இந்த மகாநாட்டில் பிரதிநிதித்வம் இல்லாத அநீதியை அவர் எடுத்துக் காட்டினார். அதோடு விடவில்லை. "சுதந்திர இந்தியாவின் பிரதிநிதிகள் இந்த மகாநாட்டிற்கு வரவில்லை; பிரிட்டிஷ் சர்க்காரின் பிரதிநிதிகள்தான் வந்திருக்கிறார்கள்" என்பதையும் சுட்டிக் காட்டினார். அதோடும் விடவில்லை. "சுதந்திர இந்தியாவின் உண்மையான குரல் கேட்கப்படும் காலம் சீக்கிரம் வரலாம்" என்று தாம் நம்புவதாகவும் ஒரு போடு போட்டார். இந்தியாவின் சுதந்திரக் கோரிக்கையை இதைவிட நல்ல முறையில் ஒரு அன்னிய நாட்டுப் பிரதிநிதி வெளியிட்டு ஆதரிக்க முடியாதல்லவா?—ஸோவியத் ருஷியாவிடம் நாம் கொண்ட நம்பிக்கையை இவ்விதம் உண்மைப் படுத்தியதற்காகத் தோழர் மொலடாவுக்கு நமது நன்றி.

சென்ற இதழில் வெளியான காலக்ஷேபத் துணுக்குக்கும் பரிசு பெற்றவர்: ஸ்ரீ நாகநாதன், 63, வடக்கு மலைக் கோட்டைத் தெரு, திருச்சி.

வித்தியாசம் இதுதான்!


முதலாளித்வ நாடுகளில் உணவுப்பொருள்கள் விற்பனைக்கு.
ருஷியாவிலோ, உணவுப்பொருள்கள் ஜனங்கள் சாப்பிடுவதற்கு
முதலாளித்வ நாடுகளில் பணம் சிம்மாசனத்தில் வீற்றிருந்து தனியாட்சி செலுத்துகிறது!
ருஷியாவில் மனிதனுக்குப் பணம் குற்றேவல் புரிகிறது!

-உம்மன்



ஆனல் முதலாளித்வ நாடுகளிலோ ஒருவரை யொருவர் அழுக்கப் பார்க்கிருர்கள்.
ருஷியாவிலோ எல்லோரும் சரிநிகர் சமம்தான்.
முதலாளித்வ நாடுகளில் மனித உணர்ச்சி அடைபட்டுக் கிடக்கிறது.
ருஷியாவிலோ அது சுயேச்சையாகவும் ஆனந்தமாக வும் எங்கும் பறந்து செல்கிறது.

புது உலகின் வெற்றி

ஆலாட்ச மணி அடிக்கிறது! வெற்றிச் சங்கு ஒலிக்கிறது! ஜய பேரிகை முழங்குகிறது! வீர முரசு எட்டுத் திக்கு மெட்டக் கொட்டுகிறது!

எல்லாம் புது உலகம் அடைந்த அதிசய வெற்றிக்காகத்தான்!

* * *

வறுமை ஒழிந்த உலகம், அடிமை ஒழிந்த உலகம், கொடுமையும் துயரமும் ஒழிந்த உலகம், அறியாமையும் அநீதியும் நோயும் நொடியும் அகன்ற உலகம், பணக்காரன் ஏழை என்ற வேற்றுமையும் உயர்ந்த சாதி தாழ்ந்த சாதி என்ற வித்தியாசமும் அடியோடு தொலைந்த உலகம், போட்டியும் பொறாமையும் வஞ்சகமும் தந்திரமும் யுத்தபீதியும் இரத்தக்களரியும் இல்லாத உலகம் — இப்படிப்பட்ட புது உலகத்தைக் குறித்து எத்தனையோ ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளாக மகான்களும் முனிவர்களும் ஞானிகளும் மேதாவிகளும் கனவு கண்டு வந்தார்கள்.

உலகிலுள்ள மக்கள் அனைவரும் பகைமையின்றி, துவேஷம் இன்றி, ஏற்றத்தாழ்வின்றி, ஆண்டான் அடிமை என்ற பேதமின்றி சமரச சகோதர பாவத்துடன் வாழும் புது உலகத்தைப் பற்றிக் கவிகள் கனவு கண்டு வர்ணித்தார்கள்.

உணவுக்கும் உடைக்கும் பஞ்சமின்றி, வாழ்க்கைக்கு வேண்டிய பொருள்கள் அனைவருக்கும் கிடைக்கப் பெற்று, எல்லாரும் படித்தவர்களாயும் அறிவாளிகளாயும் திறமைசாலிகளாயும் ஒழுக்கமுடையவர்களாயும் வாழும் புது உலகமானது ஆதிகாலத்திலிருந்து உலகில் தோன்றிய மகா புருஷர்களின் கனவிலே சிருஷ்டிக்கப்பட்டு வந்தது.

அந்தக் கனவை நனவாக்குவதற்கு முதல் முதலிலே பெரிய முயற்சி செய்யப்பட்டது நமது காலத்தில் ருஷியா தேசத்திலேதான். அந்த முயற்சியில் மகத்தான வெற்றி அடைந்ததும் ருஷியா தேசத்திலேதான்.

அத்தகைய புதிய உலகத்தை ருஷியாவில் ஸ்தாபித்த மனிதர்கள் எத்தனையோ குறையுள்ளவர்களாயிருக்கலாம். அவர்களுடைய முயற்சிகளில் எவ்வளவோ பிசகுகள் நேர்ந்திருக்கலாம். ஆயினும், அவர்களுடைய முயற்சி மகா உன்னதமான முயற்சி என்பதில் சந்தேகமில்லை. அதைப் பார்த்து உலகிலுள்ள அறிஞர்கள், மேதாவிகள் எல்லாரும் வியந்து பாராட்டியதில் சிறிதும் வியப்பில்லை.

அப்படிப்பட்ட புது உலக சிருஷ்டிக்கு ஐந்து வருஷத்துக்கு முன்னால் ஒரு பிரமாண்டமான ஆபத்து வந்தது. பழைய உலகத்தின் பிரதிநிதிகள் — ஆவேசமும் ஆற்றலும் உள்ள பிரதிநிதிகள் — அந்தப் புது உலகத்தை அழித்து விடுவதென்று கங்கணம் கட்டிக் கொண்டார்கள். ஹிட்லரின் தலைமையில் ஜெர்மன் நாஜிகளும், முஸோலினியின் தலைமையில் இத்தாலி பாஸிஸ்ட்டுகளும், இன்னும் ஐரோப்பாவின் பல நாடுகளையும் சேர்ந்த பழைய உலகப் பிரதிநிதிகளும் ருஷியாவின் மீது பிரம்மாண்டமான படையெடுப்பைத் தொடங்கினார்கள். ருஷியாவுக்குள்ளே ஆயிரம் மைல் தூரத்துக்கு மேல் முன்னேறினார்கள். முன்னேறிய இடங்களில் எல்லாம் புல்பூண்டு கூட இல்லாமல் சூறையாடிச் சுடுகாடாக்கினார்கள்.

நாஜிப் படைகள் லெனின்கிராட் வாசலிலும் மாஸ்கோவின் வாசலிலும் வந்து நின்று, ஸ்டாலின்கிராட் நகருக்குள்ளேயும் புகுந்தபோது, புது உலகத்தின் கதி சந்தேகத்துக்கு இடமாய்ப் போயிருந்தது. உலகிலே இதுவரை நடந்திருக்கும் உத்தம முயற்சிகள் எத்தனையோ அழிந்து விட்டது போல் இந்தப் புது உலக முயற்சியும் அழிந்து நாசமாகி விடுமோ என்று உலகிலுள்ள நல்லவர்கள் எல்லாரும் பதைபதைத்துக் கொண்டிருந்தார்கள்.

நல்ல வேளையாக அப்படிப்பட்ட விபரீதம் நடைபெறவில்லை.

ருஷிய மக்கள் தங்களுடைய கடைசிச் சொட்டு இரத்தத்தைச் சிந்தியாவது புது உலகத்தைக் காப்பாற்றுவது என்று திரண்டு எழுந்தார்கள். புது உலகத்தின் வீர செஞ்சேனை வீறு கொண்டு எழுந்தது. இரும்பு இரு

தயம் படைத்த புது உலகத் தலைவர்களும் உறுதியுடன் நின்றார்கள்.

எவ்வளவோ தீரப் போராட்டங்களுக்குப் பிறகு, எவ்வளவோ உயிர்த் தியாகங்கள் — பொருட் தியாகங்கள் — சர்வபரித் தியாகங்களின் பயனாக, கடைசியில், புது உலகம் வெற்றி பெற்று விட்டது.

சந்தேகமற வெற்றி பெற்று விட்டது. அதற்கு அறிகுறியாக இன்று பெர்லின் மாநகரம் ருஷிய செஞ்சேனையின் வசப்பட்டிருக்கிறது. ஜெர்மன் ஏகாதிபத்திய அதிகாரத்தின் தலைமை ஸ்தாபனமான 'ரைஷ் ஸ்டாக்' கட்டிடத்தின்மீது ருஷியாவின் செங்கொடி கம்பீரமாகப் பறக்கிறது.

ருஷியாவின் செங்கொடியானது உண்மையில் ருஷிய தேசத்துக்கு மட்டும் உரிய கொடி அல்ல. அது புது உலகத்தின் அற்புதச் சின்னமாகும்.

அந்தக் கொடியிலுள்ள அரிவாளையும், சுத்தியையும் பாருங்கள். அரிவாள், ஆளை வெட்டும் அரிவாள் அல்ல; பயிர் அறுக்கும் அரிவாள். அதாவது உழுது பயிரிடும் குடியானவனின் சின்னம். சுத்தியோ கைப்பாடு பட்டு உழைக்கும் தொழிலாளியின் சின்னம்.

"உழவுக்குந் தொழிலுக்கும்
வந்தனை செய்வோம்!"

என்னும் நமது மகா கவி பாரதியாரின் பணி வாக்கைத்தான் ருஷியாவின் செங்கொடி பிரதிபலிக்கிறது.

அந்தக் கொடியின் வெற்றியானது பாரதியாருடைய தீர்க்கதரிசனத்தின் அரும் பெரும் வெற்றியாகும்.

பழைய உலகத்தின் இரு பெரும் பிசாசுகளான ஏகாதிபத்தியம், முதலாளித்வம் என்பவற்றின் மீது, சுதந்திரம், சமத்வம் என்னும் புது உலக இலட்சியங்கள் அடைந்த மகத்தான வெற்றியாகும்.

புது உலகின் வெற்றியைக் கண்டு நாம் மகிழ்ந்து பூரிக்கிறோம்; அவ்வெற்றியைப் பாராட்டி வாழ்த்துகிறோம்; அதற்குப் பல்லாண்டு கூறுகிறோம்.

முற்றுப் பெற்றது



உலக சரித்திரத்தில் ஒரு முக்கியமான அத்தியாயம் முற்றுப் பெற்றது.

அந்த அத்தியாயத்தில் பிரதான புருஷர்களாயிருந்த இருவர்—முஸோலினியும் ஹிட்லரும் மரணமடைந்தார்கள்.

முஸோலினி அவருடைய சொந்த தேசத்தின் மக்களால்,—அவர் எந்த நாட்டை உலக வல்லரசாக்கி மேன்மைப் படுத்துவதற்காக இருபது வருஷம் பாடுபட்டாரோ அதே நாட்டின் பிரஜைகளால்,—பட்டப்பகலில் பகிரங்கமாகச் சுட்டுக் கொல்லப்பட்டார்.

அடால்ப் ஹிட்லர் தாம் எந்தப் பெர்லின் நகரத்தை ஜெர்மனியின் உலக சாம்ராஜ்யத்துக்குத் தலைநகரமாகச் செய்ய வேண்டுமென்று எண்ணி அல்லும் பகலும் பாடுபட்டாரோ, அதே பெர்லின் நகரத்தில் கடைசிவரையில் நின்று உறுதியுடன் போராடி உயிரை விட்டார்!

ஹிட்லர் எப்படிப்பட்டவர்? முஸோலினி எப்பேர்ப்பட்டவர்? அவர்களுடைய குணாதிசயங்கள் என்ன? அவர்கள் இராவணன் கும்பகர்ணனைப் போன்ற இராட்சதர்களா? அல்லது நல்ல நோக்கத்துடனே உலகைப் பயங்கர யுத்தத்தில் ஆழ்த்தியவர்களா? அவர்கள் வீரர்களா? கோழைகளா? தேசபக்தர்களா? சுயநலக்காரர்களா?

இவற்றையெல்லாம் குறித்து இப்போது சொல்வதற்கில்லை. ஏனெனில் யுத்தகாலப் பிரசாரங்களினால் எல்லாருடைய மனப்பான்மையும் ஓரளவு பாதிக்கப் பட்டிருக்கிறது.

ஆகவே ஹிட்லரையும் முஸோலினியையும் பற்றி — அவர்களுடைய பெருமை சிறுமைகளைப் பற்றி—வருங்கால உலக சரித்திரந்தான் தீர்ப்புக் கூறவேண்டும்.

நம்மைப் பொறுத்தவரையில், சென்ற இருபது வருஷமாக உலக அரங்கத்தின் முன்னணியில் நின்ற இரு பிரமுகர்கள் இத்தகைய அகால மரணமடைந்தது பற்றி வருத்தப்படுகிறோம்.

ஆனால், அவர்களுடைய உலகாதிபத்ய இலட்சியங்களும் துராசைகளும் ஆக்கிரகங்களும் தோல்வியடைந்து மண்ணோடு மண்ணானது குறித்துப் பெருமகிழ்ச்சியடைகிறோம்.

நண்பர்கள் வேண்டாமா?

நாளது 1945-ம் வருஷத்தில் எந்த ஒரு தனி நபரினால் இந்தியா தேசம் அதிக நன்மையை அடைந்திருக்கிறது என்று கேட்டால், இதற்குப் பதில் சொல்லும் விஷயத்தில் இந்தியாவின் ஆண்மக்கள் எல்லாரும் வெட்கித் தலை குனியும்படியாக நேரிடும். ஆனால் இந்தியப் பெண்மணிகள் தலை நிமிர்ந்து நின்று "எங்கள் சகோதரி ஸ்ரீமதி விஜயலக்ஷ்மியினால்தான்!" என்று பளிச்சென்று பதில் சொல்வார்கள். அதை ஆண் மக்களும் ஒப்புக் கொள்ளும்படியாகத் தான் இருக்கும்.

தற்சமயம் ஸ்ரீமதி விஜயலக்ஷ்மி பண்டிட் அமெரிக்காவிலிருந்து செய்துவரும் அற்புதமான தொண்டுகளை இந்தியா தேசம் பார்த்து வியந்து கொண்டிருக்கிறது. ஸான் பிரான்ஸிஸ்கோவில் நாற்பத்தாறு தேச தேசப் பிரதிநிதிகளின் மகாநாடு கூடி வரும்போது அந்நிய நாட்டில் இந்தியாவின் பொம்மைப் பிரதிநிதிகள் வீற்றிருந்து இந்தியாவின் பெயருக்கு அவமானம் விளைவித்துக் கொண்டிருக்கும்போது, ஸ்ரீமதி விஜயலக்ஷ்மி அங்கேயே இருந்து பொதுக் கூட்டங்களில் பிரசங்கம் செய்தும் பத்திரிகைப் பிரதிநிதிகளைக் கண்டு பேசியும் இந்தியாவைப் பற்றிய உண்மையை வெளியிட்டு வருவதை இந்திய மக்கள் ஒருமுகமாகப் பாராட்டுகிறார்கள்.

"இவரை யார் அமெரிக்காவுக்குப் போகச் சொன்னது?" என்றாவது, "இந்தியாவின் சுதந்திரம் அமெரிக்காவிலா இருக்கிறது?" என்றாவது, — இத்தகைய மூடத்தனமான கேள்விகளை யாரும் கேட்பதில்லை. ஏனெனில், அயல் நாடுகளில் இந்தியாவின் கட்சியை எடுத்துச் சொல்லவேண்டிய அவசியத்தையும், அயல் நாட்டாரை இந்தியாவின் சிநேகிதர்களாகச் செய்து கொள்ள வேண்டிய அவசியத்தையும் இப்போது எல்லாரும் உணர்ந்துகொண்டு விட்டார்கள்.

உலகத்தில் எந்தக் காலத்திலும் ஒரு தேசத்தை ஆண்டவர்களும் சரி, ஆள விரும்பியவர்களும் சரி, அயல் நாடுகளில் சிநேகிதர்களைத் தேடி யிருக்கிறார்கள்.

பாரத யுத்தத்தில் இரு கட்சியாரும் நாலா புறமும் தூது அனுப்பிச் சிநேகிதர்களைப் போட்டி போட்டுக்கொண்டு பிடித்தார்கள்.

அதுபோலவே இந்த நாளிலும் ஒவ்வொரு தேசத்தாரும் பிற தேசத்தாரைத் தங்களுடைய சிநேகிதர்களாகச் செய்து கொள்ளப் பார்க்கிறார்கள். இந்த யுத்தத்தில் அமெரிக்காவினுடைய உதவியைப் பெற பிரிட்டிஷார் எவ்வளவு பிரம்மப் பிரயத்தனங்களைச் செய்தார்கள் என்று சொல்ல வேண்டிய தில்லை.

இன்று ஸான்பிரான்ஸிஸ்கோவில் கூடியுள்ள நாற்பத்தாறு தேசங்களின் பிரதிநிதிகளும் தங்களுக்குள் யார் யாரைச் சிநேகம் செய்து கொள்வது என்பதில் போட்டி போட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

இப்படி யிருக்கும்போது இந்தியாவுக்கு மட்டும் அயல் நாடுகளில் சிநேகிதர்களே வேண்டியதில்லை யென்று சொல்வது மடமையே யாகும்.

அயல் நாட்டார் நமக்காகப் போராடிச் சுதந்திரம் கொண்டு வந்து கொடுப்பார்கள் என்று நினைப்பது பெரிய மூடத்தனந்தான்; அதற்கு அடுத்த படியான மூடத்தனம், நமக்கு அயல் நாடுகளில் சிநேகிதர்களே வேண்டாம் என்றும், உலகம் முழுவதையும் நமது விரோதிகளாகப் பாவித்து நடந்து கொள்வதினால் சுதந்திரம் அடைந்து விடலாம் என்றும் எண்ணுவதுதான்.

• • •

அயல் நாட்டுச் சிநேகிதர்கள் இந்தியாவுக்கு வேண்டும் என்று ஏற்பட்டால், அப்படிப்பட்ட சிநேகிதர்களை எந்த தேசங்களில் தேடுவது என்று பார்க்கும்போது, இரண்டு தேசங்களின் பெயர்கள்தான் முன்னால் வருகின்றன. அவை ருஷியாவும், அமெரிக்காவுமேயாகும்.

"ருஷியாவையும் அமெரிக்காவையும் நமக்குச் சிநேகம் செய்து கொள்ள விருப்பம் தான். ஆனால் அவர்கள் நமக்குச் சிநேகம் ஆவார்களா?" என்று கேட்கலாம்.

கொஞ்சம் சாதாரண புத்தியை உபயோகித்து யோசித்துப் பார்த்தோமானால், ருஷியாவும் அமெரிக்காவும் இந்தியாவிடம் சிநேகப்பான்மை கொள்வதற்கும், முக்கியமாக, இந்தியாவின் சுதந்திரக் கோரிக்கையை ஆதரிப்பதற்கும் வேண்டிய காரணங்கள் இருக்கின்றன என்று தெரியவரும்.

முக்கியமாக, சமீபகாலத்தில் சுதந்திரப் போர் நடத்தி விடுதலை பெற்ற தேசங்கள் மற்ற தேசங்களின் விடுதலைப் போராட்டத்தில் அநுதாபங் கொள்வது இயற்கை.

அமெரிக்கா பிலிப்பைன் தீவுகளுக்குச் சுதந்திரம் கொடுக்கும் விஷயத்தில் காட்டும் தாராள மனப்பான்மை உலகம் அறிந்ததாகும். சோவியத் ருஷியாவோ, "உலகில் எல்லாத் தேசங்களிலும் அடிமைத்தனம் நீங்கி வறுமை ஒழிந்தால்தான் எந்தத் தேசமும் நிம்மதியாயிருக்க முடியும்" என்ற கொள்கையைக் கொண்டது. எனவே, இந்தியாவின் சுதந்திரக் கோரிக்கையில் ருஷியாவுக்கு அநுதாபம் இருக்க வேண்டும்.

இந்த இயற்கைக் காரணத்தைக் காட்டிலும் தாற்காலிக செயற்கைக் காரணம் — மிகவும் பலமான காரணம் — ஒன்றும் இருக்கத்தான் செய்கிறது.

வெற்றியடைந்த வல்லரசுகளாகிய பிரிட்டன், அமெரிக்கா, ருஷியா இம்மூன்று தேசங்களுக்குள்ளே பரஸ்பரம் பலப்போட்டி ஏற்படப்போவது நிச்சயம். அதற்கான அறிகுறிகளை இப்போதே காண்கிறோம்.

அப்படிப் பலப்போட்டி ஏற்படும்போது, நாற்பது கோடி ஜனங்களும் எல்லையற்ற இயற்கைப் பொருள் வசதிகளும் உள்ள இந்தியாவை பிரிட்டன் தன் கீழ் ஏகபோகமாக வைத்துக் கொண்டிருப்பது ருஷிய — அமெரிக்கர்களுக்கு உறுத்தாமல் இராது.

இந்தியாவின்மீது விசேஷ அன்போ, அபிமானமோ இல்லாமற் போனாலும், பிரிட்டனுக்கு இந்தியாவினால் ஏற்படும் அதிகப்படி அநுகூலத்தை உத்தேசித்தாவது ருஷியாவும் அமெரிக்காவும் இந்தியாவின் சுதந்திரக் கோரிக்கையை ஆதரிக்கும்படியாக இருக்கும். இந்த மனித இயற்கையைத் தெரிந்து கொண்டு அதை நமக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ளாவிடில், அது இந்தியாவில் இராஜதந்திரம் அடியோடு சூனியமாய்ப் போய்விட்டதற்கே அத்தாட்சியாகும்.

அமெரிக்கர்களும் பிரிட்டிஷாரும் ஒரே ஜாதி, ஒரே இனம், ஒரே பாஷை பேசுகிறவர்கள். ஆகையால், கடைசியில் காரியம் என்று வரும்போது அமெரிக்கர்கள் பிரிட்டிஷ் கட்சியையே ஒருவேளை ஆதரிக்கலாம். ஆனால், ருஷியாவின் விஷயத்தில் அப்படிப் பிரிட்டனோடு அதிகமான உறவு கொண்டாடுவதற்கு எவ்விதக் காரணமும் கிடையாது. இந்தியாவின் விடுதலையை சோவியத் ருஷ்யா நிச்சயமாக ஆதரிக்குமென்றும், இந்தியாவுடன் நிலைத்த நட்புக் கொள்ளக் கூடுமென்றும் எதிர்பார்க்கலாம்.

* * *

இந்தியாவில் சில காலமாக "சோவியத் நண்பர்கள் சங்கம்" என்று ஆங்காங்கு ஏற்பட்டிருப்பது நேயர்களுக்குத் தெரிந்திருக்கும். இதைத் தவிர, பொது உடைமைக் கட்சிக்காரர்கள் அடிக்கடி ருஷியாவைப்பற்றிப் பேசியும் எழுதியும் வருகிறார்கள். இதெல்லாம் பிடிக்காத சில மேதாவிகள், "ருஷியாவில் இந்தியாவுக்கு நண்பர்கள் இருப்பதாகத் தெரியவில்லை; நாம் எதற்காக ருஷியாவிடம் அன்பு செலுத்த வேண்டும்?" என்று கேட்டு வருவதையும் அறிவோம்.

ருஷியாவில் நமக்கு நண்பர்கள் இருந்தாலும் இல்லாவிட்டாலும், அங்கு சிருஷ்டிக்கப்பட்டு வரும் புது உலகத்திலே நம்பிக்கை யிருந்தால், ருஷியாவிடம் அபிமானம் உண்டாவதில் வியப்பில்லை.

அபிஸீனியாவிடமும், ஸ்பானியக் குடியரசுக் கட்சியிடமும் இந்திய தேசிய காங்கிரஸ் அநுதாபம் தெரிவித்தபோது, அங்கெல்லாம் இந்தியாவுக்குச் சிநேகிதர்களா இருந்தார்கள்? இது ஒரு பக்கம் இருக்க.

ருஷியாவில் இந்தியாவுக்குச் சிநேகிதர்கள் இல்லை என்றோ இந்தியா விஷயத்தில் ருஷியர்களுக்குச் சிரத்தை இல்லை என்றோ சொல்வதற்கு என்ன ஆதாரம் இருக்கிறது? அப்படிச் சொல்கிறவர்கள் ருஷியாவுக்குப் போய் நேரில் விசாரித்துக் கொண்டு வந்தார்களா? அல்லது ருஷியப் பத்திரிகைகளையும் பிரசுரங்களையும் சாங்கோபாங்கமாக ஆராய்ந்து விட்டுச் சொல்கிறார்களா? — ஒன்றுமில்லை. நாய்ட்

டர் முதலிய பிரிட்டிஷ் செய்தி ஸ்தாபனங்களின் மூலம் வரும் 'சென்ஸார்' செய்யப்பட்ட செய்திகளின் ஆதாரத்தின் பேரிலேயே அவ்விதம் சொல்கிறார்கள்; அல்லது ஒரு ஆதாரமும் இல்லாமல் மனம் போன போக்காகச் சொல்கிறார்கள்.

இப்படிச் சொல்கிறவர்கள் ஒன்று அரசியல் கிரட்சர குட்சிகளாக இருக்க வேண்டும்; அல்லது 'சமதர்மம்' 'பொது உடைமை' என்றால் பயப் பிராந்தி கொள்ளும் முதலாளிகளின் கைக் கூலிகளாக இருக்க வேண்டும்.

ருஷியாவின் அயல் நாட்டுக் கொள்கைகளை விளக்குவதற்காகவென்று "The War & the Working Class" என்னும் மாதமிரு முறைப் பத்திரிகை சென்ற சில காலமாக வெளியாகி வருகிறது. அது ருஷிய பாஷையிலும் இங்கிலீஷ் பாஷையிலும் வெளியிடப்படுகிறது. இந்த 1945-ம் வருஷம் ஜனவரி 15உ வெளியான மேற்படி பத்திரிகையின் இரண்டாவது இதழில், இந்தியாவைப் பற்றி மிக விரிவான கட்டுரை ஒன்று வெளியாகி யிருக்கிறது. அதைப் படித்தால் ருஷியர்கள் இந்தியாவைப் பற்றி எவ்வளவு நன்றாகத் தெரிந்துகொண்டிருக்கிறார்கள் என்றும், இந்தியாவுக்கு எவ்வளவு முக்கியத்துவம் கொடுக்கிறார்கள் என்றும் நன்கு தெரிய வரும்.

பிரிட்டிஷ் ஆட்சியின்கீழ் இந்தியா விவசாயத்திலும் கைத்தொழிலிலும் எவ்வளவு பிற்போக்கா யிருக்கிற தென்பதை அதில் உதாரணங்களுடன் காட்டி யிருக்கிறது. 90 லட்சம் ஜனங்கள் உள்ள பெல்ஜியத்தைக் காட்டிலும் 40 கோடி ஜனங்கள் உள்ள இந்தியாவில் எஃகு உற்பத்தி குறைவு என்பதை ஒப்பிட்டுக் காட்டியிருக்கிறது. 1930-ல் இந்தியாவில் விவசாயம் ஆன பூமி 22,81,61000 ஏக்கரா என்றும் 1939-ல் அது 20 94,00,000 ஏக்கராவாகக் குறைந்தது என்பதையும், அதிலும் செல்வமான பூமி 7,94,24,000 ஏக்கராவிலிருந்து 6,99,18 000 ஏக்கராவாகக் குறைந்த தென்பதையும். இதனால் உக்காணத்தில் பஞ்சம் சேர்ந்ததையும் எடுத்துச் சொல்லியிருக்கிறது.

இந்தியாவுக்குச் சுதந்திரம் இல்லாததினால் இந்த யுத்தத்தில் இந்தியாவினால் கிடைக்கக் கூடிய பூரண உதவி கிடைக்கவில்லையென்பதைச் சுட்டிக் காட்டி யிருக்கிறது.

இந்திய தேசிய காங்கிரஸ், முஸ்லிம் லீக், ஹிந்து மகா சபை இவற்றைக் குறித்த சரியான விவரங்களும் காணப்படுகின்றன.

ஜனாப் ஜின்னா பாகிஸ்தான் கேட்டது, "சுயநிர்ணய உரிமை கொடுத்தாவது, ஒற்றுமையாகப் போகலாம்" என்று ராஜாஜி சொன்னது, கடைசியாக, காந்திஜி அதற்கு இணங்கி ஜின்னாவைச் சந்தித்தது, அதுவும் பயன்படாமற் போனது.— "மூன்றாம் மனிதன் இல்லாவிட்டால் எங்களுக்குள் சமாதானம் ஏற்பட்டிருக்கும்" என்று காந்திஜி சொன்னது,—எல்லாம் அக்கட்டுரையில் காணப்படுகிறது.

கட்டுரையின் கடைசிப் பாராவில், இந்தியாவின் தொல்லைகளுக்கெல்லாம் முக்கிய காரணம் அரசியல் பிற்போக்குத்தான் என்றும் அரசியல் முன்னேற்றம் ஏற்பட்டால் எல்லாவித முன்னேற்றமும் ஏற்பட்டுவிடுமென்றும் வற்புறுத்தி யிருக்கிறது.

இவ்வளவு விஷயங்களையும் சீர்தூக்கி ஏற்றத் தாழ்வில்லாமல் எழுதி யிருப்பவர் வ. டயாகோவ் என்னும் ருஷ்யர்தான். இதைப் படித்தால், ருஷ்யர்களுக்கு இந்தியா விஷயத்தில் சிரத்தையே யில்லை என்று சொல்வது எவ்வளவு தவறான விஷயம் என்பது நன்கு விளக்கும்.

* * *

இந்தியா இன்னமும் சுதந்திரம் அடைந்த பாடில்லை; பெரிய போராட்டம் நடத்தித்தான் சுதந்திரம் பெற்றாக வேண்டும். இந்த சுதந்திரப் போரில் ருஷியாவின் அநுதாபத்தையும் ஆதரவையும் உதவியையும் இந்தியா விரும்பினால் பெறக் கூடும். இந்தியா சுதந்திரம் அடைந்த பிறகும், ருஷியாவின் சிநேகமானது இந்தியாவுக்கு எத்தனையோ விதங்களில் உபயோகமா யிருக்கும். அத்தகைய ருஷியாவின் சிநேகத்தை அலட்சியம் செய்வதோ, வேண்டாமென்று நிராகரிப்பதோ, அல்லது அதற்குரிய எல்லாப் பிரயத்தனங்களையும் செய்யாம லிருப்பதோ பெரிய அரசியல் பிசகாகும் என்பதில் ஐயமில்லை.

இந்த இதழில் வெளியாகி யிருக்கும் "மந்திரவாதி" "ஓர் இரவு" என்னும் கதைகள் ஸ்ரீ எம். எஸ். சபரிராஜனால் மொழிபெயர்க்கப் பட்ட "ருஷியக் கதைகள்" என்னும் புத்தகத்திலிருந்து எடுத்தது. வெளி யிட்டவர் "சக்தி" காரியாலயம், ராயப்பேட்டை, சென்னை.



மார்ஷல் ஜி. கே. ஷுகாவ்,
உதவி சேனாபதி



மார்ஷல் ஐ. எஸ். கோனீவ்
தரைப் படை தளபதி



மார்ஷல் ஏ. எம். வாஸிலெவ்ஸ்கி

வீர செஞ்சேனை

1941-ல் மாஸ்கோ நகரம் நாஜி சேனைகளால் வளைக்கப்பட்டு, பேராபத்தில் சிக்கிக் கொண்டிருந்த சமயம் தலைவர் ஸ்டாலின் துளிக்கூட கவலைப்படவில்லை.

தமது உதவி சேனாபதி மார்ஷல் ஷுகாவைக் கூப்பிட்டு "மாஸ்கோவை வளைத்துக் கொண்டிருக்கும் ஜெர்மானியரைக் கொஞ்சம் கவனித்து விட்டு வாருங்கள்" என்றார். அவ்வளவுதான்! இரண்டே வாரங்களில் ஜெர்மானியர்களை இருந்த இடம் தெரியாமல் விரட்டினார் ஷுகாவ்.

ஆனால் மறுபடியும் 1912-ல் ஸ்டாலின் கிராட் நகரத்துக்கு ஆபத்து வந்தது.

"கூப்பிடு ஷுகாவை" என்றார் ஸ்டாலின். ஷுகாவ் உடனே ஸ்டாலின் கிராடுக்கு விரைந்து சென்று ஜெர்மன் சைன்யங்களை அதஹதப் செய்து திருப்பி யடித்தார். ஸ்டாலின் கிராட் வெற்றியைக் குறித்துச் சந்தோஷப்படக்கூட ஷுகாவுக்கு ஸ்டாலின் அவகாசம் கொடுக்கவில்லை. அதற்குள் "லெனின் கிராடுக்குப் போகவேண்டும்" என்ற கட்டளை வந்துவிட்டது. அவ்விதமே லெனின் கிராடுக்கும் போய் அங்கிருந்தும் ஜெர்மன் படைகளைத் துரத்தி யடித்தார் ஷுகாவ்.

ஷுகாவ் ஒரு ருஷியக் குடியானவனின் புதல்வர். இவருக்கு வயது 49 ஆகிறது.

1939-ல் ஜப்பானியர்கள் மங்கோலியாமீது போர் தொடுத்தபோது ஷுகாவ் டாங்கிப் படைகளுடன் சென்று மங்கோலியர்களுடன் சேர்ந்து ஜப்பானியர்களை விரட்டியடித்துப் புகழ் பெற்றார்.

மார்ஷல் ஸ்டாலின் இவருடன்தான் அரசியல் இராணுவ சம்பந்தமான விஷயங்களைப் பற்றி விவாதித்து ஒரு முடிவுக்கு வருவது வழக்கம்.

"ஒவ்வொரு செஞ்சேனை வீரனும் பத்து நாஜி வீரனைப்போல் சண்டை செய்யவேண்டும்" என்பது இவர் அடிக்கடி கூறும் வார்த்தையாகும்.

செஞ்சேனை வீரர்களில் ஷுகாவுக்கு அடுத்த படியாக இந்த யுத்தத்தில் பங்கெடுத்துக் கொண்டவர் மார்ஷல் கோனீவ்.

ஸ்டாலினுக்கு ஷுகாவ் வலது கை என்றால் கோனீவ் இடது கை போன்றவர்.

ஹிட்லர் ருஷ்யாவின்மீது படையெடுத்த சமயம் இவர் கோமெல் பகுதியில் சேற்றிலும் சகதியிலும் நின்று ராக்ஷஸப் போர்புரிந்து வெற்றி பெற்றவர். ராம ராவணயுத்தத்தில் "இந்திரஜித்துக்கு இணை இந்திரஜித்துதான்" என்று சொல்லுவதைப்போல் "கோனீவுக்கு இணை கோனீவ்" என்றே சொல்ல

வேண்டும். எந்தெந்த யுத்த முனைகளில் காட்டையும் சேற்றையும் காண்கிறோமோ அங்கெல்லாம் கோனீவையும் கோனீவ் படைகளையும் காணலாம்.

மார்ஷல் வாஸிலாவ்ஸ்கி ருஷிய இராணுவ காரியாலயத் தலைவர். ஸ்டாலினுடன் சேர்ந்து இவர் போடும் யுத்தத் திட்டங்களை தளபதிகளால் நிறைவேற்றி வைக்கப்படுகின்றன.

மார்ஷல் ரொகோஸவ்ஸ்கி ருஷ்யப் போராட்டத்தில் வடக்குப் போர்முனையில் தலைமை வகித்து வெற்றிமேல் வெற்றியாக அடைந்து வருகிறார். இவர் கோனிக்ஸ்பர்க்கைப் பிடிக்க மாதக் கணக்காக மூர்க்கத்தனமான சண்டையில் ஈடுபட்டு ஜெர்மானியர்களைத் தோற்கடித்தார். பிறகு கடற்கரையோரமாக முன்னேறி ஜெர்மனி ஆக்ரமித்துக் கொண்ட சரித்திரப் பிரசித்திபெற்ற டான்ஸிக் பிரதேசத்தைப் பிடித்தார். பிறகு துறைமுகங்களில் முக்கியமான ஸ்டெட்டின் நகரத்திலும செங்கொடியை நாட்டினார். இன்று அவரது படைகள் வடக்குப் பக்கமாக முன்னேறி பெர்லினிலுள்ள ஜூகாவ் படைகளுடன் கலந்து விட்டன.

இந்த நான்கு தளபதிகளைத் தவிர ருஷ்ய செஞ்சேனையில் இன்னும் பல வீரர்களும் இருக்கிறார்கள். ஆகாய விமானப் படைத் தலைவர் நோவிகோவும் கப்பல் படைத் தளபதி குனெட்ஸாவும் ஆகாய மார்க்கமாகவும் கடல் மார்க்கமாகவும் வீரப் போர் புரிந்திருக்கின்றனர்.

இன்று ருஷ்ய செஞ்சேனையிலுள்ள வீரர்கள், ஜெனரல்கள், தளபதிகள் அவ்வளவு பேரும் தங்கள் திறமையினால் பதவிக்கு வந்தவர்கள் தான். இதர அரசாங்கத்தில் போல் ருஷ்ய வீர செஞ்சேனையிடம் பரம்பரை தர்மம், தலைமுறைத் தத்துவம் என்பதே தலைகாட்ட முடியாது.

தளபதிகள் எவ்வளவுதான் கெட்டிக்காரர்களாயிருந்தபோதிலும் அவர்கள் இந்திர ஜால வித்தையினால் ஜயித்துவிட முடியாது. அவர்களுடைய வெற்றிகளுக்கெல்லாம் அடிப்படையான காரணமாயிருப்பது செஞ்சேனை வீரர்களின் தீரமேயாகும். ருஷியாவை ஜார் கொடுங்கோன்மையிலிருந்து விடுவிப்பதற்காக முதன் முதலில் லெனின் ஸ்தாபித்த செஞ்சேனைதான் இப்போது உலகிலேயே மிகப் பெரிய வீர சைன்யமாக வளர்ந்து விசுவரூபம் அடைந்திருக்கிறது.

செஞ்சேனையில் ஒருவருக்கொருவர் உயர்வு தாழ்வு என்ற பாகுபாடு கிடையாது. அதிகாரிகளின் கட்டளைக்காகவும், கேவலம் கூலிக்காகவும் அவர்கள் போர் புரியவில்லை. தங்கள் சொந்த நாட்டுக்காக உழைக்கிறோம், தங்கள் சொந்த சகோதரர்களுக்காகப் போராடுகிறோம் என்ற மனோபாவமே செஞ்சேனை வீரர்களின் உலகம் வியக்கும் தீரத்துக்குக் காரணம்.



மார்ஷல் கே. கே. ரொகோஸாவ்ஸ்கி
தரைப் படை தளபதி



அட்மிரல் என். ஜி. குனெட்ஸாவ்
கடற்படைத் தளபதி.



கர்ம வீரர் ஸ்டாலின்

விதி எத்தனையோ அற்புதமான காரியங்களைச் செய்கிறது.

அற்புதமாக பிடில் வாசிக்கக் கூடியவனைக் குத்துச் சண்டை பயில்வானாக மாற்றுகிறது. குத்துச் சண்டை பயில்வான் ஆக வேண்டியவனை வீணை வாசிக்கச் சொல்லி உலகத்தைக் கேலி செய்கிறது.

ஆனால், ஸ்டாலின் விஷயத்தில் விதி செய்திருக்கும் காரியம் ருஷ்யாவுக்கு மிகமிக நன்மையாகவே முடிந்திருக்கிறது. இல்லாவிடில், இன்று அவர் புது உலகின் சிருஷ்டி கர்த்தாவாக விளங்குவதற்குப் பதிலாக, ஏதாவது ஒரு மூலையில் ஒரு மதகுருவாக இருந்திருப்பார்.

* * *

"ஒரு தேசத்தில் மாத்திரம் பொது உடைமை ஏற்படுத்தினால், யாதொரு பலனும் இல்லை. அது நிலைத்து நிற்காது" என்றார் டிராட்ஸ்கி.

"பலன் உண்டு; நிலைத்தும் நிற்கும்" என்றார் ஸ்டாலின்.

ஸ்டாலின் சொன்னார்; சொன்னபடியே செய்தும் காட்டியிருக்கிறார்.

ஒரு காலத்தில் ஐரோப்பிய வல்லரசுகள் ருஷ்யாவைத் தீண்டத்தகாத நாடாகக் கருதின. போல்ஷ்விஸம் என்றாலே மூக்கைச் சிணுக்கின.

ஆனால், இன்று — இந்த 1945-ம் வருஷத்திலே — என்ன காண்கிறோம்? இன்று ருஷ்யா பிரமாண்டமான வல்லரசாக விளங்குகிறது. ருஷ்யா இல்லாமல் எந்தக் காரியத்தையும் செய்ய ஐரோப்பிய வல்லரசுகள் தயங்குகின்றன. இதற்கெல்லாம் காரணம் யார்? இவ்வளவு பெருமைக்கும் உரியவர் யார்?

லெனின் ருஷ்யப் புரட்சிக்குக் காரண புருஷராயிருந்த போதிலும், சோவியத் அரசாங்கம் ஏற்பட்ட பிறகு அவர் நெடுங்காலம் வரை உயிர் வாழ்ந்திருக்கவில்லை.

அவருக்குப் பிறகு ருஷ்யாவில் அவர் அமைத்த புது உலக சமுதாயத்துக்கு எத்தனையோ அபாயங்கள் நேர்ந்தன; அவ்வளவு அபாயங்களையும் விலக்கி ருஷ்யாவை இப்போதைய மகோன்னத நிலைமைக்குக் கொண்டுவந்த பெருமை ஸ்டாலினுக்கே சேர வேண்டும். அந்தப் பெருமையை நாம் அவருக்குக் கொடுக்கா விட்டாலும் ருஷ்ய மக்களும் ருஷ்ய செஞ்சேனையும் ஸ்டாலினுக்கே அளிக்கிறார்கள்.

லெனின் புரட்சி வீரர். ருஷ்யாவை ஜாரிடமிருந்து விடுவித்து அதை மக்களின் பொதுவுடைமை யாக்கி விட்டுப் போனார். ஸ்டாலின் கர்ம வீரர். காரியவாதி. வலிமை மிக்க திறமை வாய்ந்த புதிய ருஷ்யாவுக்கு அவர் பிதா.

லெனின் அஸ்திவாரம் எழுப்பிவிட்டுப் போனார்; ஸ்டாலின் அந்த அஸ்திவாரத்தை ஆதாரமாக வைத்துக் கொண்டு ஒரு பிரம்மாண்டமான மாளிகையைக் கட்டி முடித்திருக்கிறார்.

* * *


ஸ்டாலினுக்கு இப்போது வயது அறுபத்தாறு ஆகிறது. எளிய குடும்பத்திலே பிறந்தவர். பதினேந்தாம் வயதிலேயே புரட்சியில் சேர்ந்தார். சமுதாய ஜனநாயகக் கட்சியில் சேர்ந்து தொழிலாளர்களுக்குப் பல தொண்டுகள் செய்தார். பதினைந்து வருஷத்திற்குள் ஆறு முறை கைதியாகி அதில் ஐந்து முறை தப்பித்துக் கொண்டார். ருஷ்யப் புரட்சியின் போது லெனினுக்கு வலது கையாக விளங்கினார். 1922-ம் வருஷம் ருஷ்ய பொதுவுடைமைக் கட்சியின் காரியதரிசியானார். இன்னமும் அந்தப் பதவியை அவரே வகித்து வருகிறார்.



1910-ல் ஸ்டாலின்



மார்ஷல் ஸ்டாலின்


1914
சோவியத் ருஷியாவில் அபிவிருத்தி
1940
ஆஸ்பத்திரிகள்
175,500
840,000
ஆரோக்கிய ஸ்தலங்கள்
74,200
1938
555,000
ஓய்வு விடுதிகள்
437,200
1,900,000
பள்ளிக்கூட மாணவர்கள்
1913
1940
கைத்தொழில் மாணவர்கள்
35,800
951,900
சர்வகலாசாலைகள்
716
சர்வகலாசாலை மாணவர்கள்
112,000
700,000
துணி உற்பத்தி
2,360
6,099
எஞ்ஜின்கள்
664
1,620
இரசாயனம்
450
5,944
பெட்ரோல்
1913
1940
34.2
நிலக்கரி
29.1
164.6
இயந்திரக் கருவி
1937
1.5
48.5



லெனின்

புரட்சி வீரர் லெனின்

'பெரிய மனிதர்' என்றாலே கூட்டங்களுக்கு நேரம் கழித்துத்தான் வருவார்கள் என்பது எல்லாருக்கும் தெரிந்த விஷயமே. ஏனெனில் அப்பொழுதுதான் கூட்டத்தில் உள்ள எல்லாரும், பெரிய மனிதர் எப்பொழுது வருவார் என்று வெகு ஆவலாகக் காத்துக் கொண்டிருப்பார்கள். அவர் வந்ததும் கூட்டத்தில் எல்லாரும், 'உஸ்'... வந்து விட்டார்... சப்தம் போடாதீர்கள்" என்று சொல்லிக் கொள்வார்கள்.

புரட்சித் தலைவர் லெனினைப் பற்றி ஸ்டாலின் இப்படித்தான் வெகு காலம் நினைத்துக் கொண்டிருந்தாராம்.

ஆகவே ஒரு சமயம் ஸ்டாலின் ஒரு மகாநாட்டுக்குப் போயிருந்தபோது, லெனின் எல்லாருக்கும் முன்னால் வந்து ஒரு மூலையில் உட்கார்ந்து மற்றப் பிரதிநிதிகளுடன் சர்வ சாதாரணமாகப் பேசிக் கொண்டிருந்ததைப் பார்க்க அவருக்கு வெகு ஆச்சரியமாகப் போய்விட்டதாம்.

போல்ஷிவிக் கட்சிக்கும், சோவியத் அரசாங்கத்துக்கும் மூல புருஷரான விளாடிமிர் இலியிச் லெனின் 1870-ல் பிறந்தார். விளையும் பயிர் முளையிலேயே தெரியும் என்பது போல் பள்ளிக்கூடத்தில் வெகு சூடிக்கையாகப் படித்துத் தங்க மெடல் பரிசு பெற்றார். கல்லூரியில் சேர்ந்ததும் கலாசாலை மாணவர் இயக்கம் ஒன்றில் கலந்து கொண்டார். அதற்காகக் கல்லூரியிலிருந்து விலக்கப்பட்டார். இருந்தும் அதற்காக லெனின் மனம் தளரவில்லை. தனியாகவே படித்து, சட்டப் பரீக்ஷையில் முதல் தரமாகத் தேறியதுடன், ஒழிந்த வேளைகளிலெல்லாம் கார்ல் மார்க்ஸ் புஸ்தகங்களை ஊன்றிப் படிக்கத் தொடங்கினார்.

அதன் பயனாகத் தொழிலாளிகளின் முன்னேற்றத்துக்காக வெகு தீவிரமாக வேலை செய்யத் தொடங்கினார். ஆனால் அதிகாரிகள் இவரைச் சும்மா விட்டு வைக்கவில்லை. 1895-ல் இவரைக் கைது செய்து பதினைந்து மாத காலம் சிறையில் வைத்தனர். சிறையிலிருந்தும், அவர் தம் தொண்டை விடாது செய்ய ஆரம்பிக்கவே அதிகாரிகள் இவரை சைபீரியாவுக்கு நாடு கடத்தினர். 1900-ல் சைபீரியாவிலிருந்து திரும்பி வந்த இவர் ரஷ்யாவை விட்டு வெளிச் சென்று தொழிலாளிகளின் முதல் பத்திரிகையான இஸ்க்ரா (தீப்பொறி) என்னும் பத்திரிகையை ஆரம்பித்தார்.

முதல் புரட்சி இயக்கத்தைத் தாமே நேரில் நின்று நடத்துவதற்காக 1905-ல் லெனின் ரஷ்யா திரும்பினார். ஆனால் அந்த இயக்கம் தோற்று விடவே, 1907-ல் திரும்பவும் ரஷ்யாவை விட்டு வெளிச் சென்று, வெளியில் இருந்து கொண்டே தம் கட்சியைப் பலப்படுத்திக்கொண்டு வந்தார்.

1917-ல் ஸார் அரசாங்கம் வீழ்ச்சியுற்றதும் லெனின் ரஷ்யா திரும்பினார். லெனினும் ஸ்டாலினும் சேர்ந்து இரண்டாவது புரட்சி இயக்கத்தை நடத்தி ரஷ்யாவில் சோவியத் அரசாங்கத்தை ஏற்படுத்தினார்கள். அந்த அரசாங்கத்தின் முதல் தலைவராக லெனின் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

இன்று ஜெர்மானியரை முறியடித்துக் கொண்டிருக்கும் செஞ்சேனையை ஆரம்பித்து வைத்தவரும் லெனின்தான். ரஷ்ய மக்கள் ஒன்று பட்ட சமுதாயமாக விளங்க வேண்டும் என்பதற்காக லெனின் அல்லும் பகலும் உழைத்தார். தொழிலாளர்களும் குடியானவர்களும் ஒன்று சேர்ந்தால்தான் தேசம் உருப்படும் என்பதை லெனின் கண்டறிந்து அப்படியே ரஷ்யாவில் அவர்களை ஒன்று சேர்த்து வைத்தார். அப்படி ஒன்று சேர்ந்த தொழிலாளர்களும் குடியானவர்களும் பரிதவிக்கத் தம்முடைய 54-வது வயதில் அவர் மறைந்தார்.

லெனின் சிரித்தால், உதடுகள் மாத்திரம் அசையாது, உடம்பு முழுவதும் அசையும் என்று அவருடன் நெருங்கிப் பழகியவர்கள் சொல்லுகிறார்கள்.

பொதுவாகப் பெரியவர்களைப் பற்றி அவர்கள் பூதவுடல் மறைந்தாலும் புகழுடல் மறையவில்லை என்று சொல்வார்கள். ஆனால், லெனின் விஷயத்திலோ புகழுடம்பும் மறையவில்லை; பூத வுடலும் மறையவில்லை. அவரிடம் தேவதா விசுவாசம் கொண்டுள்ள மக்கள் அவருடைய உடலை உயர்ந்த ரஸாயன முறையில் கண்ணாடிப் பேழையில் வைத்துப் பாதுகாத்து வருகின்றனர்.

★ அந்த மந்திரவாதியால் எல்லாம் செய்ய முடியும்; அவன் நினைத்தால் ரயில் நிற்கும்; மின்சார விளக்கு நின்று விடும். அவன் நினைத்தால் ரயில் மறுபடி ஓடும், விளக்கு எரியும். அவனுக்கு விருப்பமில்லையென்றால் குழாயில் தண்ணீர் வராது ...... இப்பேர்ப்பட்ட அதிசய மந்திரவாதியாயிருந்தும், அவனை ஏன் தரித்திரமும் பட்டினியும் பீடிக்கின்றன? — தொழிலாளியின் பெருமையையும் அவனுடைய கஷ்டத்தையும் சிறு குழந்தையின் மனப்பான்மை மூலமாக விளக்கும் ஒரு அழகான கதை:

மந்திரவாதி

யூஜேன் சிரிகாப்

நகர முழுவதும் ஒரே குழப்பமாயிருந்தது. வேலை நிறுத்தம் பரவிக் கொண்டிருந்தது. முதலில், தொழிற்சாலைகளில் ஆரம்பம். அப்புறம் நகர முழுவதும் பரவிற்று. ஆயுதந் தாங்கிய போலீசார் தெருக்களில் போய்க் கொண்டிருந்தனர். சிற்சில சமயம், சிப்பாய்கள் முகத்தைச் சிடு சிடு வென்று வைத்துக் கொண்டு, துப்பாக்கி முனைகள் மின்ன, வாத்திய முழக்கத்துடன் வேகமாய்ப் போவார்கள். அவ்வப்போது ஒரு குதிரை வீரன் பைத்தியக்காரன் போல வெகு வேகமாய்ச் செல்வான். அவனுடைய குதிரையின் காலடியில் அகப்பட்டு நசுங்கா திருப்பதற்காக ஜனங்கள் நாற்புறமும் ஓடுவார்கள்.

நகர வாழ்வு எப்போதும்போல நடந்து வந்தது. ராஜ வீதியிலிருந்த கடைகளின் ஜன்னல்கள் ஜொலித்தன. தெருவின் இரு புறமும் மக்கள் கூட்டங் கூட்டமாகப் போய்க் கொண்டிருந்தார்கள். வழக்கம் போல் வாடகை வண்டிகள் வரிசை வரிசையாக நின்றிருந்தன. ஆனால், அவற்றில் ஏதோ ஒரு வகையான அச்சம் கலந்திருந்தது போல் இருந்தது. சாதாரண நிகழ்ச்சி கூடத் திகில் விளைவித்தது. போலீஸ்காரனுடைய ஊதுகுழல் சத்தம், தொப்பி இல்லாத மனிதன் தெருவழியே ஓடுவது, குடிகாரர்கள் சண்டை—இவை கூடப் பீதியை உண்டுபண்ணின. என்ன நடக்கிறது என்பதைப் பார்ப்பதற்காகச் சிலர் விரைந்து செல்வார்கள். மற்றவர்களோ, கடைவாசல்களருகே ஒளிந்து கொள்வார்கள். எதற்காக? யாரிடமிருந்து தப்புவதற்கு? ஒருவருக்கும் தெரியாது.

சிற்சில சமயம், தொழிலாளர்கள் கூட்டம் கூட்டமாகத் தெருவில் போவார்கள். அவர்கள், எதிரே வரும் தோழர்களுடன் குசு குசு வென்று பேசுவார்கள். கிழிந்த உடையணிந்த தங்களைப் பொருட்படுத்தாமல் செல்லும் கனவான்களைப் பொறாமைக் கண்களுடன் நோக்குவார்கள்.

குதிரை வீரர்கள் பாய்ந்து நடிவரும் ஓசையைக் கேட்டதும் நாடோடி நாய்களைப் போல் பல்வேறு திசைகளில் ஓடி ஒளிந்து கொள்வார்கள். இதனால் ஜனங்களுக்கு அச்சம் உண்டாயிற்று.

• • •

“அம்மா, இவர்கள் தொழிலாளர்களா?”

“ஆம் வா, திரும்பிப் பார்க்காதே!”

“அவர்கள் ஏன் அம்மா ஓடுகிறார்கள்?”

“போலீஸ்காரர்களிடமிருந்து தப்பித்துக் கொள்வதற்காக ஓடுகிறார்கள். — வா, வா, பேசாதே!”

“போலீஸ்காரர்களிடமிருந்தா?—ஏன்? அவர்கள் தெருவில் நடக்கக் கூடாதா?”

“ஆம், அனுமதி இல்லை!”

“ஏன் அனுமதி இல்லை?”

“அட, என்னைத் தொந்தரவு படுத்தாதே! என் கையைப் பிடித்துக்கொண்டு வா ...... இல்லாவிடில் .... ஒரு வேளை சவுக்கடி ......”

செர்ஜ் என்ற அந்தச் சிறுவன் தன் தாயின் கையைப் பிடித்துக் கொண்டு நடந்தான். தொழிலாளர் கூட்டம் கலைந்து நாற்புறமும் ஓடியதைக் கண்டு அவன்

பயந்து போனான். ஆனால், என்ன நடக்கிறது என்பதைப் பார்க்கப் பையனுக்கு ஆவல்.

"அவர்கள் கெட்டவர்களா, அம்மா?"

"யார்?"

"இந்தத் தொழிலாளர்கள்."

"எனக்குத் தெரியாது.........நல்லவர்களும் இருக்கிறார்கள், கெட்டவர்களும் இருக்கிறார்கள்......அவர்கள் வேலை செய்வதில்லை."

"சோம்பேறிகளா, அம்மா?"

"ஆமாம், வா, வா!"

"அவர்கள் அசிங்கமானவர்களா, அம்மா?"

அதே சமயம் சில குதிரை வீரர்கள் வேகமாக ஓடி வந்தனர். அவர்களில் ஒருவன் குழல் ஊதினான்; மற்றவன் சவுக்கை எடுத்து வீசினான். செர்ஜின் தாயார் அலறினாள். அவள் பேசாமல், அருகே போய்க் கொண்டிருந்த ஒரு வண்டியில் ஏறி உட்கார்ந்து, "ஓட்டு, சீக்கிரம்!" என்றாள் மிகவும் பதற்றமாக.

"எங்கே போக வேண்டும், அம்மா?" என்று கேட்டான் வண்டிக்காரன்.

"ஓட்டு, நேராக ஓட்டு......சீக்கிரம்!"

"பயப்படாதீர்கள் அம்மா, அவர்கள் நம்மை ஒன்றும் செய்ய மாட்டார்கள்."

வண்டி ஒரு சந்து வழியாகத் திரும்பிய பிறகே அவளுக்கு உயிர் வந்தது.

அவள் வண்டிக்காரனைப் பார்த்து, "இருபது கோபெக்தான் கொடுப்பேன், மறந்து விடாதே!" என்றாள்.

"அது போதாது, அம்மா!" என்றான் வண்டிக்காரன்.

"அப்படியானால் நாங்கள் இறங்கி விடுவோம். திறந்து ...... டிராமில் போய் விடுகிறோம்."

"சரி அம்மா......ஆனால் டிராம் ஓடாதே! இன்னும் கொஞ்ச நேரத்திற்குள் நின்று விடும்."

"யார் சொன்னது?"

"வேலை நிறுத்தம் செய்யப் போகிறார்கள்."

வண்டி ஓடிக்கொண்டிருந்தது. அவள் வண்டிக்காரனைப் பார்த்து, "எதற்காக அவர்களோடு இவ்வளவு தொல்லை? வேலை செய்ய இஷ்டமில்லையானால், வெளியே போகட்டும். பசித்ததும் தாங்களாக வருகிறார்கள்!" என்றாள்.

வண்டிக்காரன் அவளைப் பார்த்து, "ஒரு மிருகத்தைப் பட்டினி போட்டு வசப்படுத்தி விடலாம். மனிதனையும் அந்த முறையிலே பழக்கி விட முடியும். ஆனால், ஏழை மனிதனைக் கஷ்டப்படுத்துவது பாவம், அம்மா!" என்றான்.

பையன் வீடு வந்து சேர்ந்தான். ஆனால் அவன் சந்தேகம் நீங்கவில்லை.

அவன் தன் தங்கையிடம் சென்று இரகசியமாக, "சோனியா, இன்று நாங்கள் சில

முன்னொரு காலத்தில்!

[ஜார் மன்னர் காலத்தில் அரண்மனையில் எவ்வளவு அர்த்தமில்லாத சம்பிரதாயங்கள் அனுஷ்டிக்கப்பட்டு வந்ததென்பதை விளக்கும் ஒரு நிஜ சம்பவம்தான் இது.]

ஜார் அரசரின் மழைக்கால அரண்மனையில் ஒரு அழகிய புல் தரை இருந்தது. அதனருகில் ஒரு விசிப் பலகை இருந்தது. அந்த விசிப் பலகையை இரு வீரர்கள் காவல் காத்து வந்தனர். மூன்று மணி நேரத்திற்கொரு தடவை பாரா மாற்றுவது வழக்கம்.

ஒரு நாள் ஒரு இளம் ராணுவ அதிகாரிக்குச் சந்தேகம் உதித்தது. வெறும் விசிப் பலகை ஒன்றைக் காவல் காப்பதற்கு ஏன் இரண்டு சிப்பாய்களை அனுப்ப வேண்டும் என்பது அவருக்குப் புரியவில்லை.

இதைப் பற்றிப் பலரிடம் விசாரித்தார். யாரும் அவர் சந்தேகத்தைத் தீர்க்கும் வழியாகக் காணோம். கடைசியில் அரண்மனைச் சரித்திரக்காரரான கிழவரைப் பார்த்துக் கேட்டார். கிழவர் சொன்னதாவது:



"ஆமாம்; இதில் ஒரு விசேஷம் இருக்கிறது. சுமார் இருநூறு வருஷங்களுக்கு முன்னால் இந்த விசிப் பலகைக்கு வர்ணம் பூசினார்கள். அதில் மகாராணி தெரியாமல் உட்கார்ந்து விட்டாள். ஆடையில் அழுக்குப் பட்டுவிடுமென்று பயந்து விசிப் பலகையைக் காவல் காக்க அரசர் ஒரு சிப்பாயை நியமித்தார். 1905-ம் வருஷம் புரட்சி வருமோ என்ற பயம் ஏற்பட்டபோது, அரசர் அரண்மனைக் காவல்காரர்களை இரண்டுமடங்காக்கினார். இதனால் விசிப் பலகையைக் காப்பதற்கும் இரண்டு சிப்பாய்கள் ஏற்பட்டார்கள்!"



தொழிலாளர்களைப் பார்த்தோம். நிஜமாக!" என்றான்.

"அவர்களைப் பார்த்தால் எப்படியிருக்கிறது?" என்று கேட்டான் அந்தச் சிறுமி.

"அவர்களா?......அவர்கள் குடியானவர்களைப் போல இருக்கிறார்கள்."

தொழிற்சாலைகளை துறந்துவிட்டு, வேலை செய்ய மனம் இல்லாமல் திரியும் தொழிலாளர்களைப் பற்றிய பேச்சே நாள் தோறும் வீட்டில் நிகழ்ந்து வந்தது. ஆனால் அந்தப் பேச்சிலிருந்து தொழிலாளர்கள் நல்லவர்களா, கெட்டவர்களா என்பதை யாராலும் நிர்ணயிக்க முடியவில்லை.

இரண்டு நாளில் டிராம் நின்றுவிட்டது. பத்திரிகைகள் வெளி வரவில்லை. தெருக்கள் இருளில் மூழ்கிக் கிடந்தன. மேலும் இரண்டு நாள் கழிந்து ரயில் நின்று விட்டது. ரயில்வே ஸ்டேஷன்களில் ஒரே பீதியாக இருந்தது. செய்திப் போக்குவரவு அடியோடு நின்று விடும் போலத் தோன்றியது.

செர்ஜின் தந்தை இதற்குள் வந்திருக்க வேண்டும். ஆனால் வரவில்லை. அவனுடைய தாயார் பொறுமை இழந்து, எல்லோர் மேலும் சீறி விழுந்தாள். வீட்டில் இருந்தவர்கள் அனைவரும் தொழிலாளரைப் பழித்தனர். சிறுவன் ஜன்னலருகே நின்று தெருவில் நடப்பதை ஆவலுடன் கவனித்துக் கொண்டிருந்தான்.

ஒவ்வொரு நாளும் நிலைமை மோசமாயிற்று. அதிகாலையிலிருந்து தெருக்கள் பாழடைந்து கிடந்தன. கடைகள் மூடியிருந்தன. ஜன்னல்களையும் கதவுகளையும் பத்திரமாகச் சாத்தி வைத்திருந்தனர். இரவில் குதிரை வீரரும் போலீசாரும் நகரைச் சுற்றி வந்தனர். சில நாள் செர்ஜ் நள்ளிரவில் எழுந்து, ஜன்னலருகே போய், தெருவில் நடப்பதை ஆவலுடன் பார்த்துக் கொண்டிருப்பான்.

தீப்பந்தங்கள் பிரகாசித்தன. அந்தச் செந்தழல் ஒளியைச் சுற்றிப் போலீசார் காட்டுமிராண்டிகள் போல இங்குமங்கும் அலைந்தனர் ...... இரவிலே தெருக்களில் பயங்கரமான, மர்மமான சம்பவங்கள் நடந்து கொண்டிருப்பதாகத் தோன்றும்... அவனுடைய மெய் சிலிர்க்கும். "அம்மா, அம்மா! பயமாயிருக்கிறது!" என்று அலறிக் கொண்டே ஓடி வருவான். தாயார் விழித்துக் கொண்டு, "தூங்கவில்லையா? ஏன் வெளியே போனாய்?" என்று கேட்பாள்.

"தீ எரிந்து கொண்டே இருக்கிறது, அம்மா! அவர்கள் நம் வீட்டிற்கு எதிரில் நின்றுகொண்டிருக்கிறார்கள்."

"சரி, தூங்கு! ஒன்றும் இல்லை, பயப்படாதே! ...... ஐயோ! அப்பா இன்னும் வரவில்லையே!"

"அம்மா!"

"என்னடா, கண்ணே!"

"அம்மா, எனக்குப் பயமாயிருக்கிறது. உன்னருகே வருகிறேன்."

"என்ன பயம்?"

"அந்த மந்திரவாதிகளைக் கண்டால் பயமாக இருக்கிறது."

"எந்த மந்திரவாதிகள்?"

"வேலை நிறுத்தம் செய்திருக்கிற மந்திரவாதிகள்."

"சரி, இங்கே வா."

செர்ஜ் எழுந்து தன் அம்மாவின் படுக்கையருகே குதித்தோடிச் சென்றான். கொஞ்ச நேரம் கழிந்தது. அவன் தன் அம்மாவின் கையைப் பிடித்துக் கொண்டு, மெல்லிய குரலில் "நினைத்ததை எல்லாம் செய்ய அவர்களால் முடியும்போலிருக்கிறது அம்மா!" என்றான்.

அவள் விரைவில் தூங்கிவிட்டாள். ஆனால் சிறுவனோ, போர்வையை அகற்றிவிட்டு, நகரைப் பார்த்தான். தெருவில் எரிந்து கொண்டிருந்த சொக்கப்பனையின் பிரதிபிம்பங்கள் அங்கு தோன்றின. கதைகளில் படித்திருந்த நல்ல மந்திரவாதிகள், கெட்ட

மந்திரவாதிகள் ஞாபகம் வந்தது அவனுக்கு. தொழிலாளர்கள் என்று கூறப்படும் மக்களைப் பற்றி அவன் சிந்தித்துப் பார்த்தான். அவர்கள் யார்? நல்லவர்களா, கெட்டவர்களா?

* * *

ஒரு நாள் காலையில் சாப்பிடும்போது நல்ல ரொட்டி இல்லை. சிறுவன் சமையல்காரியை நோக்கி, "வேறு ரொட்டி கொடு!" என்றான்.

"இந்த ரொட்டியாவது கிடைத்தது உங்களுடைய அதிர்ஷ்டம்" என்றாள் சமையல்காரி.

அவன் அம்மாவிடம் போய், "என்ன அம்மா, இது! நல்ல ரொட்டி இல்லையே!" என்றான்.

"கண்ணே, நல்ல ரொட்டி எங்கே வாங்குவது? எல்லாக் கடைகளும் மூடியிருக்கிறதே?" என்றாள் தாயார்.

"ஏன்?"

"தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்திருக்கிறார்கள்."

மீண்டும் அந்தத் தொழிலாளர்களின் தொல்லைதான்! செர்ஜ் தலையைச் சொறிந்து கொண்டே, "இந்த ரொட்டியை வைத்துக் கொண்டு என்ன செய்வது?" என்றான்.

"எப்படியாவது சமாளித்துக்கொள்ள வேண்டியதுதான்."

"கவர்னர்கூட அவர்களை வேலை செய்யும்படி பண்ண முடியாதா?"

"முடியாது, அவர்கள் யாருக்கும் பயப்படுவது இல்லை."

சிறுவனுக்குத் திகைப்பும் குழப்பமும் உண்டாயிற்று. கவர்னருக்கோ அல்லது வேறு யாருக்கோ பயப்படாத, ஆனால் போலீசாரைக் கண்டு பயந்தோடும் இந்த விநோதமான பேர்வழிகள் யாராயிருக்க முடியும் என்று அவன் அதிசயித்தான். தொழிற்சாலைகளையும், டிராம்களையும், ரயில்களையும், பத்திரிகைகளையும் நிறுத்த அவர்களால் முடியும். ரொட்டி கிடைக்காமல் கூடப் பண்ண முடியும். ஆனால், அவர்களை ஒன்றும் பண்ண முடியாது...... பல்வேறு மோகினிக் கதைகளில் படித்திருந்த மந்திரவாதிகளின் நினைவு மீண்டும் அவனுக்கு வந்தது.



ருஷ்யாவிலுள்ள கூட்டுப் பண்ணைகளில் நவீன இயந்திரங்கள் உபயோகிக்கப்படுகின்றன. விதை விதைப்பதற்கு ஆகாய விமானத்தை உபயோகிக்கிறார்கள்.

* * *

தெருக்களில் நிகழ்ந்து கொண்டிருந்த குழப்பம், யாருக்கும் புலனாகாதவாறு மெதுவாக நுழைந்து வந்து சுகவாசிகளின் வீடுகளிலும் புகுந்து கொண்டது. அதனால் அவர்கள் தங்களுடைய பழக்க வழக்கங்களையும் நடைமுறைகளையும் தினசரி வாழ்க்கையையும் மாற்றிக் கொள்ள வேண்டியதாயிற்று. இன்பமும் கோலாகலமும் மறைந்தன. சிரிப்போ பரிகாசமோ காணோம். வாழ்க்கை இன்பம் குலைந்தது. அதற்குப் பதிலாக அச்சம், இதுவரை அனுபவித்தறியாத ஒருவகை அச்சம், தினசரி அதிகரிக்கலாயிற்று. பெரிய வீடுகளின் கதவுகள் அதிகாலையிலிருந்து பூட்டியிருந்தன. அவற்றின் வாசல்களிலே ஆயுதந் தாங்கிய வேலைக்காரர் காவல் புரிந்தனர்.

ஒரு நாள் செர்ஜின் வீட்டில் மின்சார விளக்கு எரியவில்லை.

"விளக்கில் ஏதோ கோளாறு இருக்கிறது, அம்மா!" என்றான் செர்ஜ்.

"அந்த விளக்கு எரியவில்லையானால் வேறொரு விளக்கு ஏற்று" என்றாள் தாய்.

கொஞ்ச நேரம் கழிந்தது.

"அதுவும் எரியவில்லை, அம்மா!" என்றான் சிறுவன்.

"ஓ! மின்சாரத் தொழிற்சாலையிலும் வேலை நிறுத்தமா!......"

வீடு இருட்டாயிருந்தது. பிரகாசமான மின்சார விளக்குகளுக்குப் பதிலாக ஆங்காங்கு மெழுகு வர்த்திகள் எரிந்தன.

இதற்குள் வேலைக்காரி வந்து, "நாளை தண்ணீர் கிடைக்காதாம். இறைச்சிகூடக் கிடைக்காதாம். இன்னும் ஒரு வாரம் இந்த மாதிரி இருந்தால் ஊரில் பஞ்சம் உண்டாகி விடும்" என்றாள்.

செர்ஜ் மிகவும் பீதியுடன் அந்தச் செய்தியைக் கேட்டான். அவனுக்குத் தொழிலாளி மிகப் பெரிய மனிதனாகத் தோன்றினான். 'தொழிலாளி ஒரு மந்திரவாதி; அல்லாவு

நீள் வைத்திருந்தானே ஒரு விளக்கு. அந்த மாதிரி விளக்கு ஒன்று அவனிடம் இருக்கிறது' என்ற எண்ணம் அந்தச் சிறுவன் சிந்தையிலே தோன்றியது.

அந்த மந்திரவாதியால் எல்லாம் செய்ய முடியும். அவன் நினைத்தால் ரயில் மறுபடி ஓடும்; அப்பா வந்துவிடுவார்; மின்சார விளக்கு எரியும். ஆனால் அவனுக்கு விருப்பமில்லையோ, குழாயில் தண்ணீர் வராது; குளிக்க முடியாது. தேநீர் சாப்பிட முடியாது. அவனுக்கு — அந்த மந்திரவாதிக்கு யாரிடமும் கொஞ்சங்கூடப் பயம் கிடையாது!

அவன் நினைத்தது போலவே, இரண்டு வாரங்கழித்து ஒரே நாளில் பல அற்புதங்கள் நிகழ்ந்தன. டிராம் மீண்டும் ஓடியது; மின்சார விளக்கு எரிந்தது; பத்திரிகைகள் பிரசுரமாயின; தபால் போக்குவரவு ஆரம்பமாயிற்று. தேநீரும் நல்ல ரொட்டியும் கிடைத்தன. அப்பாவும் வந்து சேர்ந்தார்!............ஒரே சமயத்தில் பல நல்ல காரியங்கள்......குடும்பத்தினர் அனைவரும் தந்தையுடன் தெருவழியே போய்க் கொண்டிருந்தனர். அப்போது அந்த மந்திரவாதிகள் கூட்டங்கூட்டமாகக் கூடி, கையில் கொடிகளுடன் உற்சாகமாய்ப் பாடிக்கொண்டு குதூகலமாகச் சென்றதை அவர்கள் பார்த்தனர். இப்போது அவர்களை யாரும் கலைக்கவில்லை. அவர்களும் பயந்து ஓடவில்லை.

• • •

பல மாதங்கள் கழிந்தன. வீட்டில் எல்லா வேலைகளும் வழக்கம்போல நடந்து வந்தன. குதூகலமும் சிரிப்பும் முன்போலத் தோன்றின. அச்சம் ஒழிந்தது. அந்த பயங்கரமான சம்பவத்தை அனைவரும் மறந்து போனார்கள். ஒரு நாள் அந்தச் சிறுவனின் பெற்றோர் நாடகத்திற்குச் சென்றிருந்தனர். சிறுவன் தனியாக இருந்தான். அவனுக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை. புதிய சமையல்காரியைப் பார்க்கலாம் என்று சமையலறைக்குப் போனான். ஆனால் அங்கிருந்த வேலைக்காரி அவனை உள்ளே விடவில்லை.

"நான் தனியாக இருக்கிறேனே!" என்றான் செர்ஜ்.

"ஆனால் சமையலறையில் என்ன இருக்கிறது?" என்றாள் வேலைக்காரி.

"அங்கே பேச்சுக் குரல் கேட்கிறது போல இருக்கிறதே!"

"சமையல்காரியின் புருஷன் வந்திருக்கிறான்."

"அப்படியா!......"


"ஏன் ஆச்சரியப்படுகிறீர்கள், எசமான்? அவன் சாதாரண மனிதன், தொழிலாளி."

"ஓ மந்திரவாதி மனிதனா?......சரி, நான் உள்ளே போகிறேன், விடு!"

"ஊஹூம், நீங்கள் போகக் கூடாது ... அம்மா வந்ததும் சொல்லி விடுவேன்."

சிறுவன் வேலைக்காரியுடன் சண்டை போட்டுப் பார்த்தான். ஆனால் உள்ளே போக முடியவில்லை. முன் ஒரு முறை இதற்காக அம்மா அவனைக் கோபித்திருக்கிறாள். ஆனால், ஆவலும் பரபரப்பும் அதிகமாயிற்று.

நல்ல வேளையாக, வேலைக்காரி வெளியே சென்றாள். அவள் போனதும் செர்ஜ் கொஞ்சம் கொஞ்சமாகக் கதவைத் திறந்தான். உடனே ஓடிப் போய் உள்ளே பார்க்க அவனுக்குத் துணிவு இல்லை. ஒன்றிரண்டு நிமிஷம் சும்மா பார்த்தவாறு இருந்தான். அப்புறம் தைரியத்தை வரவழைத்துக் கொண்டு எட்டிப் பார்த்தான். அழுக்குப் படிந்த உடைகளை அணிந்த ஒரு மனிதன் மேஜையருகே உட்கார்ந்து சாப்பிட்டுக் கொண்டிருந்தான். அவன் தன்னுடைய உணவை யாராவது பிடுங்கிக் கொண்டு போய் விடுவார்களோ என்று பயந்தவன் போல, உணவுத் தட்டை ஒரு கையால் பிடித்துக் கொண்டு நாலாபுறமும் பார்த்துக் கொண்டிருந்தான்.



மாஸ்கோ நகரிலுள்ள ருஷ்ய மகாகவி புஷ்கினின் சிலை.
(சோவியத் ருஷ்யாவில் கவிகளும் ஆசிரியர்களும் போற்றப்படுகிறார்கள்.)

ஆனால், மந்திரவாதி எங்கே? சிறுவன் உற்று நோக்கினான். சமையல்காரியையும் அந்த மனிதனையும் தவிர வேறு யாரும் இல்லை. அவன்தான் மந்திரவாதியோ?

சேர்ஜ் சமையலறைக்குள்ளே போய்ப் பார்த்தான். மந்திரவாதி நாற்காலியிலிருந்து குதித்தெழுந்தான். அவன் கையிலிருந்த கரண்டி நழுவிக் கீழே விழுந்தது.

"ஒன்றும் இல்லை, சாப்பிடுங்கள்! சின்ன எசமான் ஒன்றும் சொல்லமாட்டார்" என்றாள் சமையல்காரி. தன் புருஷனிடம்.

"என்ன? என்ன?" என்று கேட்டான் சிறுவன்.

"சமையலறையில் ஒருவன் சாப்பிட்டுக் கொண்டிருக்கிறான் என்று அம்மாவிடம் சொல்லாதீர்கள், எசமான்!"

"சரி."

"அவர் ரொம்பப் பசியாக இருக்கிறார், எசமான்!"

"இவர் யார்?"

"என் புருஷன்."

"உன் புருஷனா?"

சிறுவன் நாற்காலியில் உட்கார்ந்திருந்த அந்த மனிதனைப் பார்த்தான். அவன் மாயாவி யானதாலே தன்னுடைய உருவத்தை அவ்விதம் மாற்றிக் கொண்டிருக்க வேண்டும் என்று அவன் கருதினான்.

"நீ மந்திரவாதிதானே, எனக்குத் தெரியும்!" என்றான்.

"யார் மந்திரவாதி?" என்று கேட்டான் சமையல்காரியின் புருஷன், மிகவும் பணிவாக.

"நீதான், நீயேதான்."

"நான் தொழிலாளி, எஜமான்! வேலை கிடைக்காமல் அலைகிறேன்"

"இல்லை, எனக்குத் தெரியும். நீ மந்திரவாதிதான். நினைத்ததை எல்லாம் செய்ய முடியும் உன்னால். ரயிலையும் டிராமையும் நிறுத்தியது நீதான் ...... இனிமேல் அந்த மாதிரி வேலை எல்லாம் பண்ணாதே. நல்ல ரொட்டி கிடைக்காவிட்டால் எனக்கு எவ்வளவு கஷ்டமாயிருக்கிறது, தெரியுமா?"

"எனக்கு ஒன்றும் தெரியாது, எசமான்! நான் இப்போதே போய்விடுகிறேன்."

"உன்னைப் பார்த்தால் பயங்கரமாக இல்லையே!......நீ யானைபோலப் பருத்திருப்பாய் என்றல்லவா நினைத்தேன்?"

"சாப்பாட்டிற்கு வழி இல்லாததால் பரிகாசம் பண்ணுகிறீர்களா? பரிகாசம் செய்வது பாவம்!"

மந்திரவாதி தன்னை வெருட்டினால் இலகுவில் தப்பித்துக் கொள்வதற்காக சேர்ஜ் வாசலருகே நின்று ஓட்டம் பிடிப்பதற்குத் தயாராக இருந்தான். ஆனால் அத்தகைய சம்பவம் எதுவும் நிகழவில்லை. திரும்பிப் பார்த்தான். யார் அழுவது? அவனே! அவனே!

"நீ மந்திரவாதி! அப்படி இருந்தும் அழுகிறாய்! உம், உனக்கு வேண்டும், நன்றாக!......நீ டிராமை ஏன் நிறுத்தினாய்? ரயிலை ஏன் ஓட்டவில்லை? மின்சாரத்தை ஏன் நிறுத்தினாய்?......கடவுள் நன்றாகத் தண்டித்து விட்டார்!......"

சேர்ஜ் வெற்றியும் கர்வமும் தோன்ற, வீடு முழுவதும் கேட்கும்படியாகப் பலமாக இரைத்து கொண்டு செல்லுகையில் வேலைக்காரி எதிரில் வந்தாள். சேர்ஜ் அவளைப் பார்த்து "அவனிடம் எனக்கு இப்போது பயம் இல்லை ...... கொஞ்சங் கூடப் பயம் இல்லை!" என்றான்.

ஜெர்மன் படைகள் ருஷ்யாவுக்குள் அதிவேகமாய் முன்னேறிக் கொண்டிருந்த சமயம், முக்கியமான ருஷ்ய சைனியம் பின்வாங்கியபோதிலும், ஆங்காங்கு ருஷ்ய கொரில்லாப் படைகள் ஒளிந்திருந்து திறமையாகச் சண்டை போட்டன. அதே சமயம் ருஷ்யாவின் பொது ஜனங்கள் எப்படியெல்லாம் கொரில்லாப் படைகளுக்கு உதவி புரிந்தனர் என்பதைப் பாருங்கள் :—

ருஷ்யாவில் ஒரு முக்கிய வீதி. கொரில்லாக்கள் மறைந்து போர் புரிகின்றனர். ஒரு தெருவில் மொச்சைக் கொட்டை விற்றுக் கொண்டிருக்கிறாள் ஒரு கிழவி. அந்தப் பக்கம் ஜெர்மன் சோல்ஜர்கள் ஒரு டெலிபோன் கட்டடத்தை நாசம் செய்வதற்காக ஓடிச் செல்லுகின்றனர். வழியில் கிழவி உட்கார்ந்திருப்பதை அவர்கள் பொருட்படுத்தவில்லை.

ஜெர்மனியர்கள் போன பிறகு அவ்விடம் வந்த ருஷ்ய கொரில்லாப் படைக்கு எத்தனை ஜெர்மன் வீரர்கள் ஓடிச் சென்றார்கள் என்ற விவரம் தெரியவில்லை. மொச்சைக் கொட்டை விற்றுக் கொண்டிருந்த கிழவியை அணுகி "எத்தனை பேர்கள் போனார்கள் தெரியுமா?" என்று கேட்டனர்.

கிழவி தனியாக வைத்திருந்த மொச்சைக் கொட்டைகளை எடுத்து அவர்களிடம் கொடுத்து "இதில் எத்தனை கொட்டைகள் இருக்கின்றனவோ அத்தனை சோல்ஜர்கள் போனார்கள். எனக்கு எண்ணத் தெரியாததனால் ஒவ்வொரு சோல்ஜர் என்னைத் தாண்டியதும் ஒவ்வொரு கொட்டையை எடுத்து வைத்தேன். இப்படியே இந்தப் பக்கம் ஓடிப் போன அத்தனை சோல்ஜர்களுக்கும் அத்தனை கொட்டையை எடுத்து வைத்தேன்" என்றாள்!



பெட்லியாகாவ் (2)




டுபோலைவ் (5)




இலியூஷின் (3)




யாகோவ்லவ் (4)



லவோச்கின் (6)



யாகோவ்லவ் (4)



இலியூஷின் (3)



இந்த யுத்தத்திலே ருஷ்யர்கள் வெற்றி பெறுவதற்கு ருஷ்ய விமானப்படை ஒரு முக்கிய காரணமாகும். அது ஆபத்துக் காலத்திலே அருமையான உதவியைச் செய்திருக்கிறது. ஜெர்மன் சேனை, 1942-ம் வருஷக் கோடை காலத்திலே ஸ்டாலின்கிராடை நோக்கி வெகு வேகமாக வந்தபோது அதைத் தடுத்து நிறுத்தி யுத்தத்தின் போக்கை மாற்றிய பெருமை அந்த விமானப் படையையே சேரும். ருஷ்யத் தொழிலாளர்களும் பொது ஜனங்களும் தங்கள் வருமானத்தில் சிறு சிறு பகுதியை நன்கொடையாக அளித்ததன் மூலமே இன்றைய ருஷ்ய விமானப்படை உருவகமாகி யிருக்கிறது. ஒரு வகையில், அதைப் 'பாட்டாளி மக்கள் விமானப்படை' என்று சொல்லலாம்.

ருஷ்ய விமானப்படைக்குக் காரண கர்த்தர்களாகவும் நிபுணர்களாகவும் விளங்கும் எழுபேருடைய உருவப் படங்களை மேலே காணலாம். அவர்களுடைய பெயர்களாவன: (1) அலெக்சாண்டர் மிகுலின். (2) விளாடிமிர் பெட்லியாகாவ். (3) செர்கய் இலியூஷின். (4) அலெக்சாண்டர் யாகோவ்லைவ். (5) ஆண்ட்ரு டுபோலாவ். (6) செமன் லவோச்கின். (7) நிகோலஸ் பொலிகார்பாவ். ருஷ்ய விஞ்ஞானிகள் புது முறையில் பிரத்யேகமாகக் கண்டு பிடித்து அமைத்த சில விமானங்களின் மாதிரிகள் மேலே தரப்பட்டிருக்கின்றன.



பாக்யங்களுள்

சிறந்ததும், பூஷணங்களுள் முதன்மையானதுமான கூந்தலைக் காலதாமதமின்றி, கேசவர்த்தினியைக் கொண்டு பெறுங்கள்.

மூக்கையும் மோவாய்க் கட்டையையும் மாற்ற முடியாது. ஆனால் கூந்தலையோ விதவிதமாயும் விசித்திரமாயும் பலவாறு ஜோடிக்கலாம்.

கூந்தலை ஜோடிக்கு முன்னர், கேசவர்த்தினியின் உதவியால் அபரிமிதமான கூந்தலைப் பெறுங்கள். கருத்து அடர்ந்த கூந்தலினால் முக அழகையும், கேசவர்த்தினியினால் கூந்தலையும் அழகு படுத்திக் கொள்ளுங்கள்.

கேசவர்த்தினி

கூந்தலைப் பாதுகாப்பது, விருத்தி செய்வது, அழகு படுத்துவது

விலை அணா 12

(மேற் செலவு வேறு)

எல்லாக் கடைகளிலும் கிடைக்கும்

தயாரிப்பவர்:

தென் இந்திய ரஸாயன சாலை

ஆர். எஸ். புரம், கோயமுத்தூர்.



பற்கள் ஆடுகின்றனவா?

ஆனால் அவைகளுக்கு

தைமோஸின்

சிகிச்சை அளியுங்கள்.

ப்ரோச் பல் வைத்தியர் Dr. C. M. தேசாய், L. D. S. அவர்களின் மருந்து முறைப்படி தயாரித்தது. டூத் பிரஷ் அல்லது விரலினால் சில துளிகள் உபயோகித்தால் போதும். மாயமாக பற்களின் காவியை அகற்றி சொத்தை விழுவதைத் தடுத்து, பற்களை ஆரோக்யமாயும் வெண்மையாயும் செய்து, பயோரியா, ஈறு சம்பந்தமான வியாதிகள், வாய் வெக்காடு மற்றும், தொண்டை உபாதைகள் இவற்றைத் தடுக்கும்.

2 அவுன்ஸ் புட்டி விலை ரூ. 2/8

தபால் பாக்கிங் சார்ஜ் தனி.

டெண்டல் இன்ஸ்டிடியூட்

ஸேவா ஆஸ்ரமம், ப்ரோச்

பிரபல மருந்து வியாபாரிகளிடமும் கிடைக்கும்.

ஏஜண்டுகள்:

T. M. தாகூர்

அண்டு கம்பெனி

1-10 ஸ்டிரிங்கர் தெரு,

ஜி. டி., மதராஸ்.



THYMOCIN

OBTAINABLE EVERYWHERE

குழந்தைக்கு என்ன?

பெட்யா ஒரு சிறு பையன். வயது நான்கு ஆகியிருந்தது. இருந்தாலும் அவனுடைய தாயார் அவனை ஒரு சின்னஞ்சிறு குழந்தையாகவே பாவித்தாள் தானே அவனுக்கு ஆகாரம் ஊட்டுவாள்; தானே அவனுக்கு ஆடை உடுத்தி அலங்கரிப்பாள்; தானே அவன் கையைப் பிடித்து வெளியே அழைத்துப் போவாள்.

ஒரு நாள் பெட்யா படுக்கையை விட்டு எழுந்ததும் அவனுடைய தாயார் அவனுக்குச் சட்டையும் நிஜாரும் போட்டாள். போட்டு, அவனைத் தரையில் நிற்க வைத்ததும் அவன் 'தொபுகடீ'ரென்று கீழே விழுந்தான். முதலில் அவள் பையன் விளையாடுகிறான் என்று நினைத்து அவனை எடுத்துத் தூக்கி நிறுத்தினாள். மறுபடியும் அவன் கீழே சாய்ந்தான்.

தாயார், "ஐயோ, குழந்தைக்கு என்னவோ!" என்று ஓரேயடியாய்ப் பயந்து விட்டாள். உடனே அவள் ஆபீஸில் வேலைசெய்து கொண்டிருந்த தன்னுடைய புருஷனுக்கு டெலிபோன் செய்தாள்.—

"உடனே வீட்டுக்கு வாருங்கள். குழந்தைக்கு என்னவோ தெரியவில்லை. நிற்க முடியாமல் கீழே கீழே விழுகிறான்."

பெட்யாவின் தகப்பனார் இதைக் கேட்டதும் வீட்டுக்கு ஓடி வந்து பார்த்தார். "இது என்ன வேடிக்கை? நம் பெட்யா அழகாய் நடப்பானே? அவனுக்கு என்ன வந்து விட்டது? ஏதோ தெரியவில்லை!" என்று கையைப் பிசைந்தார்.

பெட்யாவைத் தூக்கிப் பிடித்து நிறுத்தி எதிரே இருந்த விளையாட்டுப் பொம்மைகளைப் போய் எடுக்கச் சொன்னார். ஆனால் பெட்யா மறுபடியும் மறுபடியும் கீழே தான் விழுந்தான்.

"உடனே டாக்டரை வரவழைத்து வைத்தியம் செய்ய வேண்டும். பெட்யா ஒரு வேளை அதிகமாய் எதையாவது சாப்பிட்டிருப்பான்" என்று கூறி டாக்டரை வரவழைத்தார் அவன் தகப்பனார்.

டாக்டர் மூக்கில் கண்ணாடியையும், மார்பில் 'ஸ்டெதாஸ்கோப்'பையும் மாட்டிக் கொண்டு வந்து சேர்ந்தார். பெட்யாவைப் பரிசோதித்து விட்டு "உனக்கு என்னடா உடம்பு?" என்று அவனையே கேட்டார்.

பெட்யா, "என்னவோ தெரியவில்லை. நடந்தால் கீழே கீழே விழுகிறேன்" என்றான்.

பெட்யாவின் தாயாரை டாக்டர் கூப்பிட்டு அவனுடைய சட்டை.. நிஜார் இரண்டையும் அகற்றச் சொன்னார். அவள் அப்படிச் செய்த பிறகு டாக்டர் குழந்தையின் உடம்பை நன்றாகப் பரிசோதித்து விட்டு "குழந்தைக்கு ஒரு வியாதியுமில்லை. ஆனால் ஏன் கீழே விழுகிறான் என்றுதான் புரியவில்லை. மறுபடியும் சட்டை நிஜார் இரண்டையும் போட்டு விடுங்கள். பார்க்கலாம்" என்றார்.


தாயார் மறுபடியும் பெட்யாவுக்கு நிஜார், சட்டையைப் போட்டாள். டாக்டர் மூக்குக்கண்ணாடியைச் சரிப்படுத்திக் கொண்டு பையன் எப்படி விழுகிறான் என்பதை உற்றுக் கவனித்தார். ஆனால் காரணம் புரியவில்லை.



டாக்டர், ஒன்றும் புரியாமல் விழித்

துக் கொண்டிருக்கும் சமயம் பெட்யாவின் விளையாட்டுத் தோழன் கோலியா அங்கே வந்து சேர்ந்தான். டாக்டர் அவனைப் பார்த்து "பயலே! நீ ரொம்ப கெட்டிக்காரனாச்சேடா! உன் தோழன் பெட்யாவுக்கு என்ன உடம்பு என்று உன்னால் சொல்ல முடியுமா?" என்று கேட்டார்.

கோலியா பெட்யாவைப் பார்த்து, "அவனைச் சரியாய்ப் பாருங்கோ, டாக்டர்! அவன் நிஜாரைக் கவனியுங்கோ. ஒரு நிஜார்க் காலில் அவன் இரண்டு கால்களையும் சேர்த்து அடைத்திருக்கும்போது அவன் கீழே விழாமல் என்ன செய்வான்?" என்று சிரித்துக்கொண்டே கேட்டான்.



சிறு வயதிலிருந்தே சேர்ந்து வேலை செய்ய ருஷியக் குழந்தைகளுக்குப் பயிற்சி அளிக்கப்படுகிறது.

எல்லோரும் ஆச்சரியத்துடன் பெட்யாவின் கால்களைக் கவனித்தனர். "அம்மா தான் எனக்கு நிஜார் போட்டாள்!" என்றான் பெட்யா. கோலியா "எனக்கு நானேதான் 'டிரஸ்' செய்து கொள்வேன். ஆனால், இந்தமாதிரி இரண்டு கால்களையும் ஒரு நிஜார்க் காலில் விட்டுக் கொள்ள மாட்டேன். கீழே விழவும் மாட்டேன்!" என்றான். "இனிமேல் நானும் அப்படித்தான் செய்யப் போகிறேன்" என்றான் பெட்யா. அன்று முதல் பெட்யா தனக்குத் தானேதான் உடை உடுத்திக் கொண்டான்.

[மைக்கேல் ஜோஷெங்கோ எழுதிய ஒரு ருஷ்யக் கதையின் மொழிபெயர்ப்பு.]

காலத்துக்குத் தகுந்த கோலம்

ஒரு பெரிய பட்டணம். ஒவ்வொரு தெருவிலும் கப்பிக் கல்லால் பாதை அமைத்திருந்தார்கள். ஒரு நாள் ஒரு வண்டி வேகமாகப் போனபோது, ஒருகல் பெயர்ந்து கொண்டது. அப்போது அந்தக் கல் தனக்குள்ளாகச் சொல்லிக்கொண்டது: "நான் ஏன் மற்றக் கற்களோடு சேர்ந்து அவதிப்படவேண்டும்? தனியாகப் போய் வாழ்கிறேன்."

அப்போது அந்த வழியாக ஒரு பையன் போனான். அவன் அந்தக் கல்லைக் கையில் எடுத்தான்.

அப்போது அந்தக் கல் சொல்லிக் கொண்டது: "நான் எங்காவது பிரயாணம் பண்ண வேண்டும் என்று நினைத்தேன். இப்போது பிரயாணம் பண்ணப் போகிறேன். எனக்கு நல்ல காலம்!"

பையன் அந்தக் கல்லை ஒரு வீட்டின்மேல் விட்டெறிந்தான். அப்போது கல் சொல்லிற்று: "பறக்கவேண்டும் என்று நினைத்தேன், பறக்கிறேன். நல்ல காலம்!"

கல் அந்த வீட்டுக் கண்ணாடி ஜன்னல்மேல் விழுந்தது. கண்ணாடி சுக்குச் சுக்காயிற்று! அது கல்லைப் பார்த்து, "போக்கிரிப் பயலே, என்ன வேலை செய்தாய்?" என்றது.

"நான் என்ன செய்வது? நான் வருவதைப் பார்த்து நீ விலகிப் போயிருக்க வேண்டும்? எனக்கு யாராவது இடைஞ்சலாக இருந்தால், நான் அவர்களுக்கு இடைஞ்சலாகப் போவேன்!" என்று சொல்லிக்கொண்டே உள்ளே போய், அருகே இருந்த மெத்தையில் விழுந்தது. அப்போது அது: "களைப்புத் தீர இந்த மெத்தையில் கொஞ்சம் ஓய்வு எடுத்துக் கொள்கிறேன்" என்று சொல்லிக் கொண்டது.

வீட்டுக்குள்ளே இருந்து ஒரு வேலைக்காரன் வந்தான். அவன் படுக்கையிலிருந்த கல்லை எடுத்து வெளியே வீசி எறிந்தான். அது முன்போலப் பாதையில் வந்து விழுந்தது. அப்போது அது தன் நண்பர்களைப் பார்த்துச் சொல்லிற்று: "சகோதரர்களே, அதோ, அந்தப் பெரிய வீட்டுக்கு விஜயம் செய்திருந்தேன். ஆனால், பணக்காரர்களை எனக்குப் பிடிக்கவில்லை. ஏழைகளை நினைத்து என் மனம் ஏங்கிற்று. ஆகையால், மறுபடியும் இங்கேயே திரும்பி வந்திருக்கிறேனே!"

[சுய காரியார்த்தமாகச் 'சமதர்ம வாதம்' பேசும் வேஷதாரிகளைக் குறித்து எச்சரிக்கும் ருஷியக் கதை.]

அதிசய இலக்கியம்

★ ★ ★

ஹிட்லர் செய்த முட்டாள்தனத்திலே பெரிய முட்டாள்தனம் ஒன்று இருக்கிறது.

அது என்ன?

அவர் கதை எழுதவில்லை!

ருஷ்ய செஞ்சேனையையும் உலோகப் பொருள்களையும் பார்த்து ஹிட்லர் மோகங் கொண்டார். ருஷ்ய செல்வாக்கு உலகத்தில் பரவி வருவதைப் பார்த்து அவர் பொருமை கொண்டார்.

அவர் கொஞ்சம் நிதானித்திருக்க வேண்டும். ருஷ்யாவுக்குப் புகழ் அளிப்பது எது என்பதைச் சிந்தித்திருக்க வேண்டும்.

சேனையும், கடற்படையும், உலோகங்களும் அழியலாம். ஆனால், மனிதனுடைய கற்பனையிலே பிறந்த செல்வம் — இலக்கியம் நிலையாக நிற்கும்.

ருஷ்ய இலக்கியம் இன்று உலக இலக்கியத்தின் முன்னணியிலே நிற்கிறது. ருஷ்யா அழிந்த போதிலும், ருஷ்ய செஞ்சேனை மண்ணோடு மண்ணாகப் போனபோதிலும், ருஷ்ய இலக்கியம் நிலைத்து நிற்கும்.

ஹிட்லர் அதைக் கவனிக்கவில்லை. ருஷ்யாவின் மேல் போர் தொடுத்து ஜெர்மனிக்கு சர்வநாசம் விளைவித்ததற்குப் பதிலாக, நல்ல கதைகளாகவோ நாவல்களாகவோ நான்கு எழுதி ஜெர்மனிக்குப் பெரும் புகழும் வாங்கிக் கொடுத்திருக்கலாம். அதன் மூலம் ருஷ்யாவையும் இலக்கியத் துறையிலே வென்றிருக்கலாமல்லவா?

• • •

அரசியலிலே ருஷ்யா எவ்வளவு வேகமாக முன்னேறியிருக்கிறதோ அதைப் போல இலக்கியத்திலும் அதிசயமாக முன்னேறியிருக்கிறது. 'அதிசயமாக முன்னேறியிருக்கிறது' என்று சொன்னால் போதாது; இலக்கியத்திலே மாயா ஜாலம் பண்ணியிருக்கிறது! பத்தொன்பதாம் நூற்றாண்டிலே ருஷ்ய இலக்கியம் என்பதாகவே எதுவும் இல்லை. ஆனால், இன்று, இந்த இருபதாம் நூற்றாண்டிலே ருஷ்ய இலக்கியத்துக்கு என்ன புகழ், செல்வாக்கு, மகிமை! ஒரு நூற்றாண்டிலே என்ன மாறுதல்! கற்பனையைக் கூடச் சம்மட்டியால் அடித்து அரிவாளால் இழுத்துக் கொண்டுவர முடியுமென்று ருஷ்ய ஆசிரியர்கள் நிரூபித்து விட்டார்கள்!

• • •

ருஷ்ய எழுத்தாளர்களுக்குள்ளே யார் மிகவும் சிறந்தவர்கள் என்பதைச் சொல்லுவது கஷ்டம். ஆனால், வெளிநாடுகளிலே ருஷ்ய இலக்கியத்தின் பெருமையைப் பரப்பிய பெருமை ஒரு சிலருக்கே சேரும். அவர்கள் டர்ஜனீவ், டாஸ்டாவ்ஸ்கி, டால்ஸ்டாய், செகாவ், கார்க்கி என்பவர்கள். இவர்களுடைய நவீனங்களும் கதைகளும் பரவாத இடம் பூலோகத்திலேயே இல்லை.

இவர்கள் ஏறக்குறைய சமகாலத்தவர்கள் என்று சொல்லலாம். இதில் அதிசயம் என்னவென்றால், இவர்கள் வெறும் ஆசிரியர்களாக மாத்திரம் இருக்கவில்லை. அரசியலிலும் புரட்சியிலும் கலந்து கொண்டு புதிய ருஷ்ய சமுதாயம் அமைப்பதில் கண்ணும் கருத்துமாய் இருந்தார்கள். அதன் காரணமாக, டால்ஸ்டாயைத் தவிர மற்றவர்கள், கடுந் தண்டனை அனுபவித்தார்கள். இந்த எழுத்தாளர்கள் அரசியல் வாதிகளாகவும் சமூகச் சீர்திருத்தவாதிகளாகவும் இருந்ததால் இவர்களுடைய எழுத்துக்களிலும் அவற்றின் சாயை நன்றாகப் படிந்திருந்தது. புதிய ருஷ்யாவின் நிர்மாணத்துக்கு இவர்களுடைய இலக்கியங்கள் மிக்க உதவியாயிருந்தன.

ஐவான் டர்ஜனீவ் (1818 — 1883) உயிரோடிருந்த காலத்திலேயே அவருக்குப் புகழும் மதிப்பும் இருந்தது. பிளாபர்ட், எமிலி ஸோலா, அல்பான்ஸே தொதே போன்ற பேராசிரியர்கள் பலரும் இலக்கிய சம்பந்தமாக டர்ஜனீவைக் கலந்து ஆலோசிப்பது உண்டாம். "டர்ஜனீவைத் தவிர வேறு யாரும் நாவல் அமைப்பைத் தெரிந்து கொள்ளவில்லை" என்று பிரபல ஆங்கில ஆசிரியரான ஆர்னல்ட் பென்னட்



செகாவ்



கார்க்கி



டால்ஸ்டாய்

கூறுகிறார். இவர் பல நாவல்களும் சிறு கதைகளும் எழுதியிருக்கிறார்.

மனோ தத்துவத்தை ஆதாரமாகக் கொண்டு கலையழகுடன் நவீனங்கள் எழுதிய முதல் ஆசிரியர் டாஸ்டாவ்ஸ்கி. (1822—1881) இவர் சிறந்த தேச பக்தர். அரசியலிலே சட்ட விரோதமான காரியங்களிலே ஈடுபட்டார் என்பதற்காக ஜார் சர்க்கார் இவருக்கு மரண தண்டனை விதித்தார்கள். பின்பு அது சைபீரிய சிறை வாசமாக மாறிற்று. ஒன்பது வருஷ காலம் சிறையிலிருந்த பிறகு வெளி வந்து மீண்டும் இலக்கியத் துறையிலே புகுந்தார். இவர் எழுதிய நவீனங்களில் "குற்றமும் தண்டனையும்," "காரமஸாவ் சகோதரர்கள்" இரண்டும் முக்கியமானவை.

டால்ஸ்டாயைப் பற்றி நாம் என்ன சொல்வது? அவர் ருஷ்ய இலக்கியத்திலே வானமும் பூமியுமாக வளர்ந்து நிற்கிறார். அவருக்கு இலக்கியத்திலே என்ன ஸ்தானம் கொடுப்பதென்று தெரியாமல் எல்லோரும் திகைக்கிறார்கள்.

'சிறு கதை மன்னன்' என்று புகழ் பெற்றவர் செகாவ். (1860-1904) அவர் சிறு கதைக்கு மன்னராக இருப்பதால், தாங்கள் மந்திரியாகவாவது வர முடியாதா என்று நினைத்துக்கொண்டு, பலர் தமிழ்நாட்டிலே அவரைப் பின்பற்றப் பார்க்கிறார்கள். சிலர் அவர் மீதுள்ள அபிமானத்திலே, 'செகாவ் எழுதினாலென்ன, நாம் எழுதினால் என்ன ?' என்று நினைத்துக்கொண்டு செகாவ் எழுதிய கதைகளையே தமிழ்ப்படுத்தியிருக்கிறார்கள். இதிலிருந்து தமிழர்களுக்கு இவரை நன்கு தெரிந்திருக்கலாம். இவர் பல அற்புதமான நாடகங்களையும் எழுதியிருக்கிறார். பெர்னார்ட் ஷா, தாம் இவருக்கு மிகவும் கடமைப் பட்டிருப்பதாகச் சொல்லுகிறார்.

ருஷ்யப் புரட்சிக்கு லெனின் மூல காரணராக விளங்கியதுபோல, புரட்சி இலக்கியத்துக்கு மாக்ஸிம் கார்க்கி காரண புருஷராக விளங்குகிறார். பாமர மக்களின் இன்ப துன்பங்களையும் தினசரி வாழ்க்கையையும் இவரைப் போல வேறு யாரும் அவ்வளவு உருக்கமாகவும் அழகாகவும் எழுதவேயில்லை என்று சொல்லலாம்.


இவர்களைத் தவிர, சிறு கதைகளைத் திறம்படக் கையாண்டு பெரும் புகழ் பெற்ற ஆசிரியர்கள் பலர் இருக்-

கிறார்கள். அவர்களில் கோகோல், கார்ஷின், குப்ரின், ஆண்ட்ரீவ், ஜோசெங்கோ முதலியோரைக் குறிப்பிடலாம்.



இப்போது உயிருடனிருக்கும் எழுத்தாளர்களுக்குள்ளே இருவர் பிரபலமாய் விளங்குகின்றனர். அவர்கள் மிகேல் ஷோலகோவ், இலியா எரென்பர்க் ஆவர். மைகேல் ஷோலகோவ் "டான் நதி மெதுவாகச் செல்லுகிறது" என்ற நாவல் எழுதி உலகப் புகழ் பெற்றவர். இலியா எரென்பர்க் "பிரான்ஸின் வீழ்ச்சி" என்ற நாவல் எழுதி ஸ்டாலினுடைய நன்மதிப்புக்குப் பாத்திரமானவர். இவர் தற்போது நடக்கும் யுத்தத்தில், வீராவேசம் ததும்பும் பல கட்டுரைகளை இடைவிடாமல் எழுதி, ருஷ்ய மக்களுக்கு உற்சாகத்தை ஊட்டி வந்திருக்கிறார்.

• • •



ருஷ்யக் கவிதையைப் பற்றி நமக்கு அதிகமாகத் தெரியவில்லை. அலெக்சாண்டர் புஷ்கின் என்பவர் ருஷ்யாவின் மகாகவி என்று சொல்லப்படுகிறார். தற்போதிருக்கும் கவிகளிலே மாயகாவ்ஸ்கி சிறந்தவர். இவர் புதிய சோவியக் சமுதாயத்தைப் பற்றிப் பல கவிதைகள் புனைந்திருக்கிறார். அதில் ஒன்றில், சோவியத் வீரனுடைய இரும்பு இருதயத்தை வர்ணித்து விட்டு, அவன் எதற்காகவோ தேம்பி அழுவதாகக் கவியை ஆரம்பிக்கிறார். "சோவியத் வீரன் அழுவதா? கண்ணீர் விடுவதா? இதென்ன ஆச்சரியம்?" என்றெல்லாம் வியந்து விட்டுப் பிறகு காரணத்துக்கு வருகிறார்: "நேற்றிரவு ஏழடிக்கப் பத்து நிமிஷத்திற்குத் தோழர் லெனின் இறந்து போனார்!"




பிறகு, மேற்படி செய்தியினால் தேசத்தில் ஏற்பட்ட மாறுதல்களை வர்ணிக்கிறார். எங்கெங்கும் ஒரே சோகம் ததும்புகிறது. சாவை எதிர்த்து நின்றவர்களும் செத்தவர்கள் போலாகிறார்கள். உயிரற்ற பொருள்களும் துக்கத்தின் அறிகுறியாக உருமாறுவது போலத் தோன்றுகின்றன.

கடைசியில், கவியைப் பின்வருமாறு முடித்திருக்கிறார் :—

"அன்றிரவு குழந்தைகள் பெரியவர்களைப் போல் அமைதியாகவும் சாந்தமாகவும் இருந்தார்கள்; அமைதியாகவும் சாந்தமாகவும் இருந்த பெரியோர்களோ குழந்தைகளைப் போலத் தேம்பித் தேம்பி அழுதார்கள்!"






இந்தப் போராட்டத்தில் பெருமித வெற்றிகள் பெற இந்திய மக்கள் பெருமளவு உதவினார்கள். மங்கலாயுள்ள பகுதி விடுவிக்கப்பட்ட பிரதேசத்தைக் காண்பிக்கிறது.

சகிப்புத் தன்மையின் வெற்றி

1944-ம் வருஷம் மிகவும் கவலைக்கிடமா யிருந்த மே, ஜூன் மாதங்களில் வெளியான செய்திகளிலிருந்த இம்பால், கோஹிமா, பிஷன்பூர், டிட்டிம் என்னும் பெயர்கள் உங்களுக்கு ஞாபகமிருக்கின்றனவா? இன்று நமது போர் வீரர்களின் பிடிவாதமான முயற்சிகளின் பயனாக அந்தப் பெயர்களுக்குப் பதிலாகப் புதுப் பெயர்களை நாம் கேள்விப் படுகிறோம். அவை வருமாறு:—போர்ட் வைட், காலிமியோ, காலிவா, யூ, அக்யாப், ஷ்வேபோ. படத்தைப் பாருங்கள். அப்போது அதன் அர்த்தம் விளங்கும். பர்மாவில் 80,000 சதுர மைல்களுக்கு மேல் (அந்நாட்டில் மூன்றில் ஒரு பாகம்) விரோதிகளிடமிருந்து விடுவிக்கப் பட்டுள்ளது. இதுவரை ஜப்பானியர்களில் ஒரு லக்ஷத்திற்கு மேற்பட்டவர்களுக்குச் சேதமேற்பட்டிருக்கிறது.

இந்த வெற்றி யடைய உதவியவர்கள் இந்தியாவின் ஒவ்வொரு பாகத்திலிருந்தும், மாகாணங்களிலிருந்தும் வந்திருக்கின்றனர். அவர்கள் எல்லா ஜாதிகளையும், மதங்களையும் சேர்ந்தவர்கள். [illegible] பாடுபடும் அவர்கள் இந்த வெற்றி பெறுவதற்கு எவ்வளவு சகிப்புத் தன்மையோடு போராடினார்கள் என்று நாம் அனுமானிக்கத்தான் முடியும். அதனால் நமக்கு அமைதியும் பாதுகாப்பும் நிச்சயமாக ஏற்படும் என்னும் உறுதி நம் உள்ளங்களில் பதியச் செய்கிறது. ஆனாலும் ஜப்பானை அடியோடு நிச்சயமாய்த் தோற்கடித்தாலொழிய இந்தியா அவர்கள் அக்கிரமங்களுக்குத் தப்பியிருக்க முடியாது. ஆகையால் நாம் எல்லோரும் எதிரியைத் தாக்க உதவுவோமாக.



இவ்வளவு சிரமமான பாகம் எந்தப் போர் முனையிலும் இதுவரை கையாளப்பட்டதே கிடையாது. இதை பிரிட்டிஷ் எதிரியை கடக்கும் போரும் கப்பல்களும் இந்திய இராணுவ இஞ்சினியர்களால்.

முடிவான வெற்றிபெற முந்துங்கள்

AAA-101

இந்திய சர்க்கார் தகவல், பிரசார இலாகா வெளியீடு.

நதியின் அக்கரையில் காவல் புரிந்த ஜெர்மன் வீரர்கள் பொழுது விடியும் நேரத்தில் ஒரு அதிசயமான காட்சியைக் கண்டார்கள். அவர்களால் தங்கள் கண்களையே நம்ப முடியவில்லை. பூதம் போன்ற பெரிய பெரிய ருஷிய டாங்கிகள் ஆற்று வெள்ளத்தின் மேற்பரப்பைக் கிழித்துக் கொண்டு வேகமாய் முன்னேறிவந்தன! — இந்த மகேந்திர ஜாலம் எப்படி நடந்தது? ஒரு ருஷிய என்ஜினீயரின் மூளை இரவெல்லாம் வேலை செய்ததினால்தான்!

மறைந்த பாலம்

[கே. ஸிமோனுவ்]

இலையுதிர்காலம் முடியப்போகிறது. பனியினால் செடி கொடிகள் காய்ந்து காட்டில் அங்கங்கே இடைவெளிகள் தோன்றுவது உண்டு. அப்படிப்பட்ட இடைவெளி ஒன்றில், ருஷிய வீரர்கள் சிலர் மிக விநோதமான அமைப்பு ஒன்றை நிர்மாணித்துக் கொண்டிருந்தார்கள். அங்கே ஒரு ஆறு இருந்திருந்தால் அந்த அமைப்பை ஒரு வகைப் பாலம் என்றே நினைத்துக்கொண்டு விடலாம். அதுதான் ஒரு காடாயிற்றே!

எனினும், பூமியிலிருந்து முளைத்தது போலிருந்த ஏழு ஜோடி மரக் குவியல்களும் பாலம் போடுவதற்கு ஆற்றில் அமைக்கப்படும் அஸ்திவாரம் போல் தோன்றின. அந்தக் குவியல் ஒவ்வொன்றுக்கும் மத்தியில் மூன்று கஜ தூர முள்ள இடைவெளி இருந்தது. இதைவிட ஆச்சரியமான விஷயம் மேற்படி பாலத்தினருகில் டாங்கிகள் கொண்டு வந்து நிறுத்தப்பட்டிருந்ததுதான்.



"இயற்கை யிடமிருந்து நாம் வரங்கள் எதிர் பார்க்கலாகாது; வற்புறுத்திப் பெற்றுக் கொள்ள வேண்டும்" என்ற கொள்கையுடைய பிரபல ருஷிய தாவரசாஸ்திரி இவான் மிசூரின். கனி மரங்களின் வளர்ப்பில் விசேஷ அபிவிருத்திகள் செய்தவர்.

டிவிஷன் என்ஜினீயர் ஜோஸ்னெங்கின் என்பவரும் டாங்கி கமாண்டர் எவ்லெவ் என்பவரும் அந்தக் குவியல்களைக் கவனமாகப் பரிசீலனை செய்து கொண்டே வந்து கொண்டிருந்தார்கள். எவ்லெவ் மிகவும் திருப்தியடைந்தவராகத் தோன்றினார். ஏனெனில், டாங்கியை அந்தக் குவியல்களுக்கு மேல் செலுத்தும்படி உடனே கட்டளையிட்டார். மிகவும் கனமான டாங்கி ஒன்று முதல் குவியலில் ஏறிற்று; பிறகு அதிலிருந்து இரண்டாவது குவியலுக்குத் தாவிற்று. இடையிலிருந்த மூன்று கஜ தூரமுள்ள இடைவெளியை டாங்கியின் அடியிலுள்ள சங்கிலிப் பல் சக்கரம் கடந்து அப்பால் சென்றது. இவ்விதமாக, ஒவ்வொரு குவியலாகத் தாண்டிக்கொண்டே அது சாதாரணப் பாலங்களைக் கடப்பது போலவே அந்த மரக்கட்டைப் பாலத்தையும் கடந்து சென்றது.

இதெல்லாம் ரொம்ப வேடிக்கையாக இருந்தது. காட்டிலே மரக் குவியல்களை நட்டு வைத்திருக்கிறார்கள்! இந்த யுத்த காலத்திலே வேறு வேலை இல்லாதது போல் பெரிய பெரிய டாங்கிகள் இந்தக் குவியல்களில் ஏறித் தாண்டிக் கொண்டிருக்கின்றன!

எல்லாவற்றையும் விட மிக வேடிக்கையான விஷயம், ஜோஸ்னெங்கினும் எவ்லெவ்வும் இன்னும் மற்ற 'ஸாப்பர்'களும் டாங்கிக்காரர்களும் இந்த அசாதாரணமான வேலையில் ரொம்பவும் கர்ம சிரத்தையாக ஈடுபட்டிருந்ததுதான். மேலும் அவர்கள் ஏதோ பெரிய காரியம் கைகூடி விட்டதுபோல் சந்தோஷப்பட்டுக் கொண்டிருந்தார்கள். என்ஜினீயரை எவ்லெவ் முதுகில் தட்டிக் கொடுத்து விட்டு



மே தினக் கொண்டாட்டத்தின்போது ருஷியப் பெண்மணிகள் தெரு வீதிகளில் ஆனந்தமாக ஆடிக் கொண்டும் பாடிக் கொண்டும் போகும் காட்சி.

மகிழ்ச்சி நிறைந்த குரலில் 'சபாஷ்!' என்றார். போனும் அவர், "நீங்கள் உங்கள் வேலையைச் சரிவர எப்படிச் செய்து முடித்து விட்டீர்களோ அப்படியே நாங்களும் செய்து விடுவோம். நிச்சயம்!" என்றார்.

அக்டோபர் மாதத்தின் இறுதி. போர் முனையில் அமைதி நிலவியது. ஆனால் காட்டிலிருந்து அவ்வப்பொழுது கிளம்பிய பீரங்கிச் சத்தம் யுத்தத்தை ஞாபகப்படுத்திக் கொண்டிருந்தது.

சிறிது காலமாகச் சலனமின்றி இருந்து வந்த இந்த மத்தியப் போர் முனையில், ருஷியப் படைகளுக்கும் ஜெர்மன் படைகளுக்கும் மத்தியில் ஒரு ஆறு ஓடிக் கொண்டிருந்தது. எதிரியைத் தாக்கி முறியடிக்க வேண்டுமானால் ருஷ்யப் படைகள் இந்த ஆற்றைக் கடக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டிருந்தது.

எதிரியைத் தாக்குவதற்குத் தயார் செய்து கொள்ளும்படி ஜெனரல் ரூகினுக்கு உத்தரவு வந்ததும் அவர் தம் சைன்யத்தின் என்ஜினீயரான ஸோஸ்னாவ்ஸ்கியைக் கூப்பிட்டார்.

"நமது டாங்கிகள் நதியைத் தாண்டிச் செல்வதற்கு நீங்கள் உடனே ஏற்பாடு செய்யவேண்டும். முதலாவதாக, தாக்குதல் ஆரம்பிக்கு முன்னமேயே பாலம் கட்டும் வேலையை முடித்து விட வேண்டும். எப்பொழுது நாம் ஆற்றைக் கடக்கப் போகிறோமென்று எதிரிக்குத் தெரியக் கூடாது. நாம் ஆற்றைக் கடக்க நினைத்திருப்பதுகூட எதிரிக்குத் தெரியக் கூடாது" என்று கட்டளையிட்டார்.

இருபத்திநான்கு மணி நேரத்தில் பதிலளிப்பதாகச் சொல்லிவிட்டுத் திரும்பினார் என்ஜினீயர். அவருக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை. அவர் எவ்வளவோ அநுபவசாலிதான். ஆனால், இம்மாதிரி தர்மசங்கடத்தில் அவர் இதுவரை மாட்டிக் கொண்டதில்லை. அந்த இருபத்திநான்கு மணி நேரத்தில் எத்தனையோ விதமான திட்டங்களைச் சிந்தித்தார். ஆனால் அவை நடக்கக்கூடாத விஷயமென்று அவருக்குத் தோன்றிற்று. இரவெல்லாம் ஸிகரெட்டைப் பற்றவைத்துக்கொண்டே யோசித்தார். காலை நேரத்தில் வலி வெடுத்துப் போன அவரது விரல்கள், கையிலிருந்த நூறாவது ஸிகரெட்டைச் சுற்றிக் கொண்டிருந்த போது பளிச்சென்று மின்னலைப் போல் ஒரு யோசனை உதித்தது. ஆஹா! அது எவ்வளவு சுலபமான யோசனை! வர்ணிக்க முடியாதபடி அவ்வளவு சுலபம். ஆனால் அது எவ்வளவு சுலபமோ அதைச் செய்து முடிக்க அவ்வளவு அசாத்திய தைரியமும் துணிச்சலும் அல்லவா வேண்டியிருக்கிறது?

ஸோஸ்னாவ்ஸ்கி உடனே ஜெனரலிடம் சென்று தாம் ஒரு வழி கண்டுபிடித்து விட்டதாகத் தெரிவித்தார். "நான் பாலம் கட்டி விடுவேன். ஆனால், அதில் இரண்டே இரண்டு விசேஷங்கள் இருக்கின்றன. முதலாவதாக, நான் கூறும் பாலம் தொடர்ச்சியாக இராது. அதில் இடைவெளிகள் இருக்கும். இரண்டாவதாக, இந்தப் பாலம் ஜலத்தின் மேல் இருக்காது. ஜலமட்டத்திற்குள்ளேதான் இருக்கும். பாலத்தின் ஒவ்வொரு அமைப்புக்கும் மத்தியில் மூன்று கஜமுள்ள இடைவெளிகள் இருக்கும். காலாட்படை பாலத்தைக் கடக்க முடியாது. ஆனால் டாங்கிகள் சுலபமாகக் கடக்கலாம்" என்றார்.

ஸோஸ்னாவ்ஸ்கியின் யோசனை உடனே அங்கீகரிக்கப்பட்டது. அதற்கான வேலைகளும் துரிதமாக ஆரம்பமாயின. இது சம்பந்தமாக நடந்த பூர்வாங்க சோதனையைத்தான் ஆரம்பத்தில் நாம் பார்த்தோம்.

* * *

ஆற்றங்கரையில் எந்த இடத்தில் பாலம் அமைக்க வேண்டுமோ அந்த இடத்திற்கு எதிரே ஸோஸ்னாவ்ஸ்கியின்

தமது வேலையைத் துவக்கினர். இந்தக் கேந்திர ஸ்தானத்தில் இருந்துகொண்டு என்ஜினியர் நிலைமையை வெகு கவனமாகக் குறித்துக் கொண்டார். ருஷியப் படைகள் பிடித்துக் கொண்டிருந்த ஆற்றங்கரை, சற்றுச் சரிவாகவும் அதிக உயரமில்லாமலும் இருந்தது. ஆனல் ஜெர்மானியர் கைவசமிருந்த ஆற்றின் வலது கரையோ உயரமாகவும், செங்குத்தாகவும் இருந்ததினல், பகல் வேளையில் ஜெர்மானியர் அங்கிருந்தபடியே ருஷிய அரண்களில் நடப்பவைகளை வெகு சுலபமாகக் கவனித்துக் கொள்ள முடிந்தது.

மரங்களை ஜெர்மானியருக்குத் தெரியாமல் எப்படி வெட்டி ஆற்றங் கரைக்குக் கொண்டு வந்து சேர்ப்பது? லோஸ்னுவ்வின் இந்தப் பிரச்னையை எப்படித் தீர்ப்பதென்று தீவிரமாக வெகு நேரம் யோசனை செய்தார். கடைசியில் நல்ல யோசனை ஒன்று தோன்றியது. அக்கரை உச்சியிலிருந்து இக்கரையில் நடப்பதைப் பார்க்க ஜெர்மானியருக்கு முடிந்தாலும், அவர்கள் இருக்கும் செங்குத்தான கரைக்கு நேர் கீழே நடப்பதை அவர்களால் பார்க்க முடியாதல்லவா?

ருஷியர்கள் இறங்கியிருந்த இடத்துக்குச் சற்று தூரத்தில் ஆற்றில் ஒரு வளைவு இருந்தது. அந்த வளைவுக்கு அருகாமையில் மரங்களைக் கொண்டு போய் ஜெர்மானியர் கரைப் பக்கமே தள்ளிவிட்டால், அவை பாலம் கட்ட வேண்டிய இடத்திற்கு வந்து சேர்ந்து விடும். இதை இரவில் செய்தால் ஜெர்மானியர்களால் கவனிக்க முடியாது. இப்படித்தான் செய்யவேண்டும்.

பாலத்திற்கு வேண்டிய கட்டைகளைத் தயார் செய்வதற்கு 'ஸாப்பர்'களுக்கு இரண்டு நாட்கள் பிடித்தன. சாதாரணமாகக் கட்டைகளைப் பிளக்கும்போது சத்தம் ஏற்படத்தான் செய்யும். ஆனல், இந்தச் சந்தர்ப்பத்தில் சத்தமே செய்யக் கூடாது. எனவே இந்த வேலையைச் சத்தமே இல்லாமல், திருகாணிகளைக் கொண்டே முடித்துவிட வேண்டும் என்று லோஸ்னுவ்வின் உத்தரவிட்டார். ருஷிய தச்சு வேலைக்காரர்கள் இவ்வேலைகளில் மகா நிபுணர்கள். அவ்வாறே செய்து முடித்து விட்டார்கள்.

நவம்பர் மாத ஆரம்பம். எங்கும் கும்மிருட்டு. மூன்ருவது இரவு, லோஸ்னுவ்வின் தமது சிப்பந்தி ஒருவருடன் பாலத்தைக் கட்ட ஆரம்பித்தார். குளிர் அசாத்தியமாயிருந்ததால் ஆற்று ஜலம் உறைய ஆரம்பித்திருந்தது. இந்த நிலையில் மரங்களை எடுத்துக் கொண்டு போய் அக்கரை சேர்த்து ஆற்றோடு தள்ளுவதென்பது மிகவும் கஷ்டமான காரியம். பதட்டமில்லாமல் செய்ய வேண்டிய காரியம். சிறிது சலசலப்பு ஏற்பட்டாலும் எதிரிக்குத் தெரிந்து காரியமே கெட்டுப் போய்விடும்.

சிலர் ஆற்றில் கட்டைகளைத் தள்ளினார்கள். அவற்றைக் குறித்த இடத்தில் அடித்து நிறுத்தி ஜலத்திற்குள் பலமாகப் பொருத்துவதற்காக வேறு சிலர் எதிரியின் கரையோரமாகக் கூழாங்கற்களை எடுத்துச் செல்லவேண்டியிருந்தது. இதற்கு எவ்வளவோ முன்னெச்சரிக்கை தேவை. ஒரு சிறு கூழாங்கல் தண்ணீரில் விழுந்து சத்தம் ஏற்பட்டுவிட்டாலும் ஆபத்தேயல்லவா?

முதல் நாள் இரவு இரண்டு ஜோடி மரக் கும்பல்களை ஜலத்திற்குள் அமைத்தாகிவிட்டது. மறுநாள் பகலில் அவை ருஷ்யர்களுக்கோ ஜெர்மானியருக்கோ

ருஷியப் போராட்டத்தில் மையஸ் போர்முனையில் நடந்த ஒரு உண்மைச் சம்பவம். ருஷியரின் வீர தீரத்தையும், சகோதரபாவத்தையும், ஆவேச சக்தியையும் விளக்கும் சம்பவம்:—

தாக்குதலை ஆரம்பிக்கும் முன்னல் ஸார்ஜண்ட் மேஜர் ரூபானுக்கு விமான ஓட்டியான அவர் சகோதரனிடமிருந்து ஒரு கடிதம் வந்தது. அதில், டன்பாஸ் நகரைப் பிடிப்பதற்காக யுத்தம் நடக்கும்போது, தான் ஆகாச மார்க்கத்தில் வந்து உதவி செய்வதாக எழுதியிருந்தார்.

யுத்தம் ஆரம்பமாயிற்று. ருஷியர்கள் ஜெர்மானியருடன் கைகலந்து மூர்க்கப் போர் செய்தனர். இரு சைன்யங்களுக்கும் மத்தியிலுள்ள இடைவெளி மிக மிகச் சொற்பமே. ஆயினும் ருஷிய விமானிகள் குறி தவருமல் எதிரிகள்மீது குண்டைச் சொரிந்தனர்.

ஒவ்வொரு தடவையும் ருஷிய விமானம் ஒன்று தலைக்கு மேலே பறந்து செல்லும்போதும் ஸார்ஜண்ட் மேஜர், "தம்பி! இதோ நான் இருக்கிறேன்......எங்கே கொஞ்சம் கைகொடு!" என்று கூவினர். இந்த கோஷமானது போர்முனை யெங்கும் எதிரொலி செய்து, வீரர்கள் மனத்தில் சொல்லமுடியாத தேச பக்தியையும் ஆவேசத்தையும் தூண்டிற்று.



ருஷிய இரும்பு ஆலை ஒன்றில் வேலை செய்யும் தொழிலாளி.

கண்ணுக்குத் தெரியவில்லை. அன்று இரவு இன்னும் இரண்டு ஜதைகளும் மூன்றாவது நாள் இரவு கடைசி மூன்று ஜதைகளும் பொருத்தப்பட்டன.

ஒவ்வொரு நாளும் குளிரோ அதிகமாகிக் கொண்டு வந்தது. ஆற்று ஜலத்தின் மேல் உறைய ஆரம்பித்திருந்த பனிக்கட்டி கூரிய கத்தியின் முனையைப் போல் கையை வெட்டிற்று. குளிரால் சிப்பாய்கள் உடம்பு நடுங்கிற்று: அங்கங்கள் அசைய மறுத்தன. இப்படியிருந்தும், மூன்றாவது நாள் இரவுக்குள் ருஷியர்கள் ஆற்றுக்குள் கற்களைப் போட்டு அழுத்தமாக, பலமாக, ஏழு மரக் குவியல்களையும் நட்டு விட்டார்கள் — ஒருவருக்கும் தெரியாமல் காதும் காதும் வைத்தாற் போல் வேலையை முடித்து விட்டார்கள். கடைசி நாள் அன்று தாங்கமுடியாத குளிர். ஆறு முழுதுமே பனிக்கட்டிகள் மிதக்கத் தொடங்கி விட்டன. என்ஜினியர், "பிழைத்தோம்! இன்னும் ஒன்று அல்லது இரண்டு நாள் தாமதித்திருந்தால் காரியமே குட்டிச் சுவராகியிருக்கும்" என்று கூறிப் பெருமூச்சு விட்டார்.

இந்த வேலை நடக்கும் போதெல்லாம், மாமூல்படி ஜெர்மானியர் ருஷியப் படை இருந்த கரையை நோக்கி அவ்வப்போது குண்டு போட்டுக் கொண்டிருந்தார்கள். ஸாப்பர்களில் அநேகம் பேர் காயம் அடைந்தார்கள், உயிரிழந்தார்கள். எனினும் பொறுக்க முடியாத குளிரில் அந்த வேலை பூர்த்தி செய்யப்பட்டது. நதியின் ஜலம் உறைந்து கொண்டே வர, ஜலமட்டம் தாழ்ந்து கொண்டே வந்தது. இதையெல்லாம் எதிர்பார்த்தே ஸோஸ்னுவ்கின் திட்டம் போட்டு வைத்திருந்தார். இயற்கையின் விசித்திரப் போக்கை யார் கண்டார்கள்? எப்பொழுதுமே இல்லாதபடி நீர்மட்டம் தாழ்ந்து போய்விட்டால் என்ன செய்வது? அதற்கும் ஸோஸ்னுவ்கின் வழி கண்டு பிடித்து வைத்திருந்தார். அது என்னவென்றால், பாலத்தின் உச்சியை சிறிது வெட்டி விட்டால் சரியாய்ப் போய் விடும். ஒரே இரவில் அந்தக் காரியத்தைச் செய்து விடலாம். ஆனால் அதற்கு அவசியம் நேரிட வில்லை.

மறுநாள் பொழுது விடியும் நேரத்தில் ருஷிய டாங்கிகள் ஆற்று ஜலத்தின் மீது இயற்கை நியதிக்கு விரோதமாக மிதந்து வருவதை ஜெர்மன் வீரர்கள் ஆச்சரியத்துடன் பார்த்தார்கள்! அந்த பூதாகாரமான டாங்கிகளுக்கு முன்னால் வழி காட்டிக் கொண்டு கட்டைக் குட்டையான மனிதர் ஒருவர் காக்கி உடை அணிந்து வந்தார். அவர்தான் ஜலத்திற்குள்ளே மறைந்த பாலத்தை அமைத்துக் கொடுத்த டிவிஷன் என்ஜினியர் ஸோஸ்னுவ்கின்!

அந்த ஆச்சரியமானது, கண்களால் நம்பமுடியாத காட்சியானது, ஜெர்மானியருக்கு ஒரே திகைப்பையும் பயத்தையும் உண்டுபண்ணி விட்டது. அவர்கள் அந்தப் பிரமிப்பில் இருக்கும்போதே ருஷிய டாங்கிகள் அக் கரைக்குச் சென்று விட்டன. பிறகு ஏற்பட்ட சண்டையில் ருஷியர்கள்தான் வெற்றி பெற்றார்கள் என்பதைச் சொல்ல வேண்டியதில்லை யல்லவா? *

---

* மேற்படி சம்பவம் நடந்த சில நாளைக்கெல்லாம் உலகத்திலுள்ள எல்லாப் பத்திரிகைகளிலும், பின்வரும் செய்தி வெளியாகியிருந்தது:—"ருஷியர்கள் ஜலத்தில் படகைப் போல் மிதந்து செல்லக் கூடிய புதிய வகை டாங்கி ஒன்றைக் (Amphibious tank) கண்டு பிடித்திருப்பதாகத் தெரிகிறது. சமீபத்தில் மேற்படி டாங்கிகளை உபயோகித்து ஒரு ஆற்றைக் கடந்து அக் கரையிலிருந்த ஜெர்மன் படைகளை ருஷியர்கள் தாக்கினார்களாம்!" —ஆசிரியர்.

★ மெடிகல் கிராடுயேட்டுகள் ★

யுத்தம் நடந்து கொண்டிருக்கிறது

அதனால் தடுக்கமுடியாதபடி சர்ஜனாவிகள் ஏற்படுகின்றன. அவர்களை திரும்ப நல்லதேக நிலைக்குக் கொண்டுவர வேண்டும். நூற்றுக் கணக்கான ஆர்மி டாக்டர்கள் தங்கள் தொழிலில் புது அக்கறையை காண்கிறார்கள். அவர்கள் சண்டையில் வீழ்ப்பட்டவர்களுக்கு வைத்தியம் செய்வதில் சாதாரணமாக பொது வைத்திய வேலையில் பெற முடியாத அனுபவத்தையும் பயிற்சியையும் அடைவதை கண்டுகொண்டார்கள். இன்னும் I.A.M.C.யில் வேலை செய்ய டாக்டர்கள் அவசரமாய் தேவையாய் இருக்கிறது.

யோக்யதாம்சங்கள்

யுனைடெட் கிங்டத்தில் ரிஜிஸ்டர் செய்து கொள்ள லாயக்கான மெடிகல் பட்டம் அல்லது இந்திய மெடிகல் கௌன்சலால் அங்கீகரிக்கப்பட்ட மெடிகல் பட்டம் பெற்றிருக்கவேண்டும். D.M.S. (மதுரை) L.M. & S. (ஸ்டேட் மெடிகல் பாகல்டி பஞ்சாப்) M.C.P. & S. (பம்பாய்) M.M.F. (பெங்கால்) M.S.M.F. (யு.பி. பஞ்சாப்) அல்லது M.B.B.S. (மைசூர். உஸ்மானியா) அல்லது அங்கீகரிக்கப்பட்ட மேல் நாட்டு பட்டம் பெற்று ரிஜிஸ்டர் செய்துகொண்டுள்ள வைத்தியர்களும் லாயக்குள்ளவர்கள். விண்ணப்பதாரிகள் மிலிடரி சேவைக்கு லாயக்கானவர்களாயும் சாதாரணமாய் 45 வயதுக்குள்ளும் இருக்க வேண்டும். தேர்ந்தெடுக்கப்படுகிறவர்கள் I.M.S.க்கு நியமிக்கப்பட்டு உடனேயே I.A.M.C.க்கு ஆமோதிக்கப்படுவார்கள். அவர்கள் I.M.S. ஆபீசர்களுக்கு ஏற்பட்ட எல்லா உரிமைகளையும் வைத்துக்கொள்ளுவார்கள்.

சம்பளம்

லெப்டினெண்டாக ரூ. 450ல் ஆரம்பித்து, லெப்டினெண்ட் கர்னலாக ரூ. 1350 வரை உயரும். அங்கீகரிக்கப்பட்ட நிபுணர்களாக நியமிக்கப்படுகிறவர்களுக்கு மேஜரின் ஆக்டிங் ராங்கும் அதற்கான சம்பளமும் அத்துடன் மாதம் ரூ. 100 நிபுணத்துவ சம்பளமும் கொடுக்கப்படும். கிரேடட் ஸ்பெஷலிஸ்டுகள் ஆக்டிங் ராங்கு இல்லாமல் மாதம் ரூ. 10 நிபுணத்துவ சம்பளம் பெறுகிறார்கள். குறிப்பிட்ட உத்தியோகங்களுக்கு சார்ஜ் அல்லது காமாண்ட் சம்பளம் மாதம் ரூ. 30 முதல் ரூ. 240 வரை. உத்தியோகமானதும் உடுப்பு முதலிய சாமான்களுக்காக ரூ. 733ம் சம்பளத்தில் அட்வான்ஸ் ரூ. 300 வரையிலும் கொடுக்கப்படும். தற்சமயம் இருக்கும் விதிகளின் படி அலவன்சுகள்: கடல் கடந்த சேவைக்கு மாதம் ரூ. 150 முதல் ரூ. 400 வரை. பிரயாணவிஷய விடுமுறை சலுகை இரண்டும் மற்ற இந்திய ஆர்மி ஆபீசர்களுக்கு உள்ளது போல. கிராஜுவிடி, முதல் வருஷத்திற்கு ரூ. 2,000 அல்லது ரூ. 1,000 (ஆபீசர் 1940 வருஷம் ஜனவரி 1-தேதிக்கு முன்னேயோ பின்னேயோ தேவையான யோக்யதாம்சத்தை பெற்றது என்பதை பொருத்தது). அதற்கு பிறகு பூர்த்தியான ஒவ்வொரு வருஷ சேவைக்கும் ஒருமாத சம்பளமும் அளிக்கப்படும். அங்கஹீனம், குடும்ப, விதவைக்கான பென்ஷன், குழந்தைகளின் படிப்புத் தான அலவன்சுகள் இந்திய மெடிகல் சர்வீசுக்கு ஏற்பட்டிருப்பதுபோல் அளிக்கப்படும்.

ஆர்மி சேவையின் நலன்கள்

மிகவும் புதிதாக கண்டுபிடித்த சாதனங்களுடன் திக்கான சகல வழிகளிலும் வேலை செய்துகொண்டு I.A.M.C.யில் சேவை புரிகிறவர்கள் சண்டை முடிந்ததும் சிவில் பிராக்டீசுக்கு நன்கு சித்தமடைந்திருப்பார்கள். பூரா விவரங்களும் மாகாண வைத்திய இலாகா தலைவர் (சர்ஜன் ஜெனரல் அல்லது சிவில் ஆஸ்பத்திரிகள் இன்ஸ்பெக்டர் ஜெனரல்) அல்லது டில்லியிலிருக்கும் இந்திய மெடிகல் சர்வீஸ் டைரக்டர் ஜெனரல் அல்லது இந்திய மிலிடரி ஆஸ்பத்திரிகள் காமாண்டிங் ஆபீசர்கள் அல்லது டில்லி G.H.Q. மெடிகல் சர்வீசஸ் டைரக்டரிடமிருந்தாவது பெறலாம்.

Indian Army Medical Corps

AAA 19ATM

சிரஞ்சீவிக் கலை

1917-ம் வருஷம் ருஷியாவில் ஏற்பட்ட ஜனப் புரட்சியானது ஸார் சக்கரவர்த்தியை விரட்டியடித்து விட்டது; அரசாங்கத்தைக் கவிழ்த்து விட்டது; வறுமையை ஒழித்து விட்டது;—இன்னும் எவ்வளவோ அற்புதங்களைச் சாதித்து விட்டது. ஒரே ஒரு விஷயத்தில் மட்டும் அது ஒரு மாறுதலையும் செய்ய முடியவில்லை. அதாவது 'ரஷ்ய பாலட்' என்ற 'நாட்டிய நாடகத்தை' மட்டும் அது பாதிக்கவேயில்லை.

ஸார் மன்னர்களின் காலத்தில் அது எவ்வளவு ஆடம்பரமாக, தடபுடலாக, விமரிசையாக நடந்து வந்ததோ, அவ்விதமே இன்னும் நடந்து கொண்டிருக்கிறது.

நாட்டிய நாடகத்தின் பழைய சம்பிரதாயம், பத்ததி — எல்லாம் இன்னும் மாறாமல் இருந்து வருகின்றன. நாடகத்தின் கதை அமைப்பிலேதான் புரட்சிக்குப் பிறகு மாறுதல் ஏற்பட்டிருக்கிறது. ஜனசக்தியைப் பெருக்கவும், புரட்சிக் கொள்கைகளையும் மக்களின் அபிலாஷைகளை வெளியிடவும், நாடகங்களை இப்பொழுது உபயோகித்து வருகிறார்கள்.

நாடகமும் நாட்டியமும் ருஷியனின் ரத்தத்தில் வேரூன்றியிருக்கின்றன. நாட்டுப் பாட்டும், கூத்தும் அவனுக்கு மூச்சுக் காற்று.

வெகு காலமாகவே ஒவ்வொரு ருஷ்ய கிராமத்திலும் ஒரு நாடகசபை இருந்து வந்ததாகத் தெரிகிறது. இவற்றைத் தவிர ஊர் ஊராகச் செல்லும் எவ்வளவோ நடன நாட்டிய சபைகள் இருக்கின்றன. நகரங்களிலோ கேட்க வேண்டியதில்லை. முஸ்லிம்களுக்கு மெக்கா எவ்வளவு முக்கியமோ அவ்வளவு முக்கியம் மாஸ்கோ நாடக ரஸிகர்களுக்கு. அந்த நகரத்தில் மட்டும் 26-நாடக சாலைகள் இருக்கின்றனவாம்.

யுத்த முனைகளுக்கு அவ்வப்பொழுது நாடகக் கம்பெனிகள் சென்று நாடகங்கள் நடத்தி வருகின்றன. யுத்தம் ஆரம்பித்ததிலிருந்து இதுவரை 10 000 நாடகங்கள் யுத்த முனையில் நடந்து விட்டனவாம்.

ருஷிய நாட்டிய நாடகத்தில் முன்பெல்லாம் கதாநாயகியை உயர்த்தி வைத்தே கதைகள் தயாரிப்பார்களாம். இப்பொழுது கதாநாயகனுக்கும் முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறதாம். இவ்விதம், புரட்சி வந்ததின் பலனாக ருஷியாவில் ஆண்களுக்கும் சம உரிமை கிடைத்திருக்கிறது!

கலை அபிவிருத்தி விஷயத்தில் ருஷியர்கள் குறுகிய மனப்பான்மை காட்டவில்லை. பிற தேசங்களின் நல்ல கலை அம்சங்களைத் தாராளமாய் எடுத்துக் கொள்கிறார்கள். உதாரணமாக, பிரதி வருஷமும் லண்டனில் நடிக்கப்படும் ஷேக்ஸ்பியர் நாடகங்களைவிட அதிகமான ஷேக்ஸ்பியர் நாடகங்களை மாஸ்கோவில் நடிக்கிறார்களாம்.

இன்றைக்கும் ருஷிய நடிகர்களுக்கு 'இங்கே வா! அங்கே வா!' என்று உலகெங்குமிருந்து அழைப்பு வருகிறதாம். அலக்ஸாண்டிரா டானிலோவா, இரினா பாரனேவா, பால் பெட்ராவ் முதலிய நடிகை நடிகர்கள் உலகத்தின் கவனத்தையே கவர்ந்திருக்கிறார்கள்.

ருஷிய நடன நாடகக் கலை சிரஞ்சீவித் தன்மைபெற்று விட்டது. மக்களின் இதய பாவத்தை உண்மையாக எடுத்துச் சொல்லும் அருங்கலையை யார்தான் அழிக்கமுடியும்?

நாடகக் கலையில் ருஷ்யர்களுக்குள்ள அபார அனுபவம் இன்று சினிமாக் கலைக்கும் பெரிதும் பயன்பட்டிருக்கிறது. ருஷியாவில் இன்று நூதன முறையில் பல சினிமாப் படங்கள் தயாராகியிருக்கின்றன. தங்கள் கொள்கைகளையும் லட்சியங்களையும் பிரசாரம் செய்வதற்குச் சினிமாவையும் ஒரு முக்கிய கருவியாக ருஷியர்கள் உபயோகப்படுத்தி வருகிறார்கள்.



ஒரு ருஷிய நாட்டியக்காரி.

ருஷ்ய விஞ்ஞானிகள்



அலக்ஸாண்டர் ஸ்காச்சிங்ஸ்கி
எஞ்ஜினீயரிங்



அப்ராம் ஜாப்பீ
அணு சாஸ்திரம்



நிக்கோலாய் ஸிட்ஸின்
தாவர சாஸ்திரம்



அலக்ஸாண்டர்
போகோமோலெட்ஸ்
சரீர தத்துவம்



பீட்டர் கபிட்ஸா
பௌதிக சாஸ்திரம்



விளாடிமிர் வெர்னட்ஸ்கி
கிரக ஆராய்ச்சி



ஆன்ட்ரீ கால்மொகோரவ்
கணித சாஸ்திரம்



அலக்ஸாண்டர்
பொரைகோவிட்ஸ்
இரசாயனம்

நவீன விஞ்ஞான ஆராய்ச்சியினால் உலகத்துக்கு நன்மையா? தீமையா?—இந்தப் பிரச்னை சில அறிஞர்களால் விவாதிக்கப்படுவது உண்டு. விஞ்ஞானத்தினால் இயந்திரங்கள் பெருகுகின்றன. இயந்திரப் பெருக்கத்தினால் ஒரு பக்கத்தில் பணம் குவிகிறது. மற்றொரு பக்கத்தில் வேலையில்லாத் திண்டாட்டமும் தரித்திரமும் பெருகுகின்றன. இதையெல்லாம் பார்க்கும் போது, நாம் விஞ்ஞானத்தையே கோபித்துக் கொள்ளத் தொடங்குகிறோம்.

ஆனால், உண்மையில் விஞ்ஞானமோ விஞ்ஞானிகளோ குற்றவாளிகள் அல்ல. முதலாளித்வ நாடுகளில் விஞ்ஞானமும் இயந்திரங்களும் சில முதலாளிகளின் கையில் சிக்கிக் கொண்டு விடுவதால் அவர்கள் லாபத்தைக் கருதியே இயந்திரங்கள் ஓட்டப்படுகின்றன; தேச மக்களின் தேவையைக் கருதி ஓட்டப்படுவதில்லை. இதன் விளைவாக முதலாளித்வ நாடுகளில் கிர் மூடத்தனமான பல காரியங்கள் நடக்கின்றன.

தென் அமெரிக்காவில் உள்ள சில்லி என்ற மாகாணத்தில் ஐந்து லட்சம் ஆடுகள் யாருக்கும் உபயோகமின்றிக் கொளுத்தப்பட்டன. அமெரிக்காவில் அறுபது லட்சம் மாடுகள் அழிக்கப்பட்டன. இருநூற்று அறுபது லட்சம் காப்பி மூட்டைகள் கடலில்

ஒருவருக்கும் பயன்படாமல் தள்ளப்பட்டன. ஒரு தடவை இங்கிலாந்து நோக்கி வந்து கொண்டிருந்த ஒரு கப்பல் ஆரஞ்சுப் பழங்கள் கடலில் கொட்டப்பட்டன. இவ்வளவும் அத்தர்த சாமான்களின் விலை குறையக் கூடாது என்பதற்காகத்தான்! அதாவது முதலாளிகளின் கொள்ளை லாபத்துக்காகத்தான்!

ஆனால் சோவியத் ருஷ்யாவிலோ ஜனங்களுக்காகத்தான் பொருள் உற்பத்தி நடக்கிறது. அதனால் விஞ்ஞான ஆராய்ச்சியும் உற்பத்தியும் அதிகரிக்க அதிகரிக்க ஜனங்களுக்கு நன்மையே உண்டாகிறது. இதை அறிந்தே லெனின் விஞ்ஞானிகளை வெகுவாக ஆதரித்து நாட்டுக்கு நலன் தரும் வகையில் உழைக்கச் செய்தார். அவரைப் பின்பற்றி ஸ்டாலினும் வெகுவாக விஞ்ஞானிகளை ஆதரித்து வருகிறார்.

அரசாங்க ஆதரவு அதிகம் இருப்பதால் ருஷ்யாவில் விஞ்ஞானிகளின் தொகை அதிகரித்துக்கொண்டே போகிறது. முன்பு ஐந்து விஞ்ஞான ஆராய்ச்சிச் சாலைகள் இருந்த நாட்டில் இன்று ஆயிரம் விஞ்ஞான ஆராய்ச்சிச் சாலைகள் இருக்கின்றன. முன்பு மூவாயிரம் விஞ்ஞானிகள் இருந்த இடத்தில் இப்பொழுது ஐம்பது ஆயிரம் விஞ்ஞானிகள் இருக்கின்றனர்.

விஞ்ஞானிகளும் விஞ்ஞான ஆராய்ச்சிச் சாலைகளும் மேலும் மேலும் அதிகரிப்பதற்காக வேண்டி ருஷ்யாவில் ஒவ்வொரு வருஷமும் நூற்றுக்கு மேற்பட்ட விஞ்ஞானிகளுக்கு ஸ்டாலின் பரிசுகளும், மெடல்களும் அளிக்கப்படுகின்றன. ஒரு ஸ்டாலின் பரிசின் மதிப்பு பத்தாயிரம் பவுன்.

முதலாளித்துவ நாடுகளில் உள்ளதுபோல் ருஷ்ய விஞ்ஞானிகளுக் கிடையில் போட்டி கிடையாது. போட்டியினால் ஏற்படும் கால விரயமும் பண விரயமும் கிடையாது.

ருஷ்ய விஞ்ஞானிகள் ஆராய்ந்து கண்டு பிடித்த புதிய புதிய சாதனங்களின் மூலமாகத்தான் மாஸ்கோ வரையில் முறியடிக்கப்பட்டு ஓடிய ருஷ்ய செஞ்சேனை இன்று பெர்லின் நகரில் வீர கர்ஜனையும் வெற்றி முழக்கமும் செய்து கொண்டிருக்கிறது. ருஷ்யர்கள் இன்று உலகத்தில் வெற்றி மாலையுடன் விளங்குவதற்கு அவர்களின் பெயர்பெற்ற யுத்தத் தலைவர்கள், போர் வீரர்கள் மட்டுமல்லாமல் புகழ்பெற்ற விஞ்ஞானிகளும் காரணம் என்று சொன்னால் மிகையாகாது.

புதிய ருஷ்ய நிர்மாணத்திற்கு ருஷ்ய விஞ்ஞானிகள் சிறந்த சேவை செய்திருக்கிறார்கள். அவர்கள் ஒவ்வொரு துறையிலும் புதிய உண்மைகளைக் கண்டுபிடித்துத் தேசத்துக்கு உதவி செய்கிறார்கள். உதாரணமாக, ஒட்ரூஷேவ் என்பவர் சைபீரியாவை ஆராய்ந்து அங்கு கிடைக்கும் உலோகப் பொருள்களை விளக்கியிருக்கிறார். வெர்னாட்ஸ்கி எஃகு உற்பத்தியிலே பல நுட்பங்களைக் கண்டு பிடித்து, யூரலில் ஒரு பெரிய எஃகுத் தொழிற்சாலை நடத்தி வருகிறார். பீட்டர் கபிட்ஸா என்பவர் தாவர சாஸ்திரத்திலே பல உண்மைகளைக் கண்டு பிடித்து, விவசாயத்திற்கு அரும் தொண்டு செய்திருக்கிறார். கால்மொகோரால், ஸ்காச்சிங்கி முதலியோர் பௌதிக சாஸ்திரத்திலே இதுவரை வெளிவராத பல உண்மைகளைக் கண்டு பிடித்திருக்கிறார்கள். இவர்களைத் தவிர இன்னும் சிலர் கணிதத்திலும் வைத்தியத்திலும் நிபுணர்களாக விளங்குகிறார்கள்.

இப்படி ருஷ்யாவில் விஞ்ஞான ஆராய்ச்சி செய்து புதிய புதிய உண்மைகளையும் கருவிகளையும் கண்டுபிடித்து உதவிய விஞ்ஞானிகள் சிலருடைய படங்களை இரு பக்கங்களிலும் காணலாம்.



கிரகரி ஷாயின்
வானசாஸ்திரம்



டிமிட்ரி பிரியானிஷ்னிகாவ்
இரசாயனம்



நிக்கோலே செமியானுவ்
இரசாயனம்



இவான் பார்டின்
உலோக ஆராய்ச்சி

ருஷிய ஆசிரியர்கள் சாதாரண மக்களுடைய வாழ்க்கையைப் பற்றி உள்ளது உள்ளபடி எழுதினார்கள்; உணர்ச்சியுடன் எழுதினார்கள். அதுதான் உண்மையான இலக்கியம் என்றும் கருதினார்கள். அத்தகையவர்களில் தலைசிறந்த ஒருவர் மாக்ஸிம் கார்க்கி. அவர் கவிதை ரூபத்தில் எழுதிய கதை ஒன்றை ஸ்டாலின், மொலடாவ், வொரோஷிலாவ் ஆகியவர்களுக்குப் படித்துக் காட்டிக் கொண்டிருக்கும் காட்சியை இன்னொரு பக்கத்தில் காணலாம்.

ஓர் இரவு

மாக்ஸிம் கார்க்கி

அன்று மனதிலே மகிழ்ச்சி இல்லை. கையிலே பணமில்லை. ஊருக்கு நான் புதியவன். தங்கியிருக்கவோ இடம் கிடைக்கவில்லை. தெரிந்தவரும் இலர்.

கையிலிருந்த துணிமணிகளை விற்றுவிட்டு உஸ்தே என்ற இடத்திற்குச் சென்றேன். அங்கு ஒரு துறைமுகம் உண்டு. கப்பல் போக்குவரத்துக் காலத்திலே, அந்த நகரத்தில் ஒரே அமளியாயிருக்கும். ஆனால் இப்போதோ, அமைதியாக, பாழடைந்தது போல இருந்தது. அக்டோபர் கடைசிக் காலம்.

ஆடி அசைந்து கொண்டு மெதுவாக நடந்து போனேன். 'சாப்பாட்டிற்கு ஏதாவது கிடைக்காதா?' என்று அவ்வப்போது நாலாபுறமும் பார்த்தேன். 'வயிறு நிறைய உணவு கிடைத்தால் எவ்வளவு நன்றாயிருக்கும்!' என்று எண்ணியவாறு வெறுங் கட்டிடங்கள் - கடைகள் வழியாக அலைந்தேன்.

மெல்ல மெல்ல வந்து கொண்டிருந்தது அந்திப் பொழுது. மழையும் பெய்தது. வடக்கே இருந்து புயல் காற்று வேறு. கடைகள், கட்டிடங்களிலுள்ள சாளரக் கதவுகள் படாரென்று மூடிக் கொண்டன. காற்று மிகுதியால் நதியில் நுரை பெருகிற்று. அதன் அலைகள் இரைந்து வந்து கரைமீது மோதின. அவை ஒன்றன்மேல் ஒன்றாகக் குதித்துக் கொண்டு வந்தன. நதியானது, பனிக் காலம் வருவதை உணர்ந்து அதன் பிடியிலிருந்து தப்பித்துக் கொள்வதற்காக அஞ்சி ஓடியதுபோலத் தோன்றியது. வானத்திலே கரு மேகங்கள் அடர்ந்து தோன்றின. விடாமல் தூற்றல். வேரோடு வீழ்ந்த இரண்டு மரங்களும், அவற்றிற்கருகே குப்புறக் கவிழ்ந்து கிடந்த ஒரு படகும், நாற்புறமும் என்னைச் சூழ்ந்திருந்த இயற்கையின் கோரத்தை எடுத்துக் காட்டுவது போலிருந்தன.

வானம் இடைவிடாமல் கண்ணீர் உகுத்துக் கொண்டேயிருந்தது. சுற்றிலும் ஒரே பாழ் வெளி. மயானத்தையொத்த இந்தப் பூமியிலே நான் ஒருவன் மாத்திரம் உயிர் வாழ்வது போலவும் என்னைக் கொல்வதற்குக் கூட எமன் காத்துக் கொண்டிருந்தது போலவும் தோன்றியது.

அப்போது எனக்கு வயது பதினேழு; இன்பமான இளம் பருவம்.

ஈர மண்ணிலே நடந்து போய்க் கொண்டிருந்தேன். பசி மிகுதியாலும் குளிரின் கொடுமையாலும் பற்கள் கிட்டிக் கொண்டன. இவ்விதம் உணவிற்காக வீண் முயற்சி செய்து கொண்டிருந்தபோது, திடீரென்று ஒரு கடைப் பக்கமாகப் போனேன். பெண்ணுடையணிந்த ஓர் உருவம், கடையின் ஒரு பக்கத்தில் தரையில் குனிந்து கொண்டிருந்ததைக் கண்டேன். அப்பெண்ணின் உடைகள் மழையால் நனைந்திருந்தன. அவளருகே பின்புறமாய் நின்றவாறு, அவள் என்ன செய்து கொண்டிருக்கிறாள் என்பதை அறிய முயன்றேன். பூட்டிக் கிடந்த கடைக்குள்ளே நுழைவதற்காக அவள் கையால் மணலைத் தோண்டிச் சுரங்க வழி செய்து கொண்டிருந்தாள் எனத் தோன்றியது.

"எதற்காக மணலைத் தோண்டுகிறாய்?" என்று நான் கேட்டேன்.

சட்டென்று அவள் எழுந்தாள். அச்சம் நிறைந்த தன் கண்களை அகல விரித்து என்னை நோக்கினாள். என் வயதுப் பெண்; காண்போரைக் கவரக் கூடிய முகம். ஆனால், துரதிர்ஷ்ட வசமாக, அந்த அழகிய முகத்திலே மூன்று பெரிய காயங்கள். மூன்றும் ஒரே



ருஷியாவில் வெளியாகும் ஸ்டாம்புகளில் சில. தேகப்பயிற்சியின் முக்கியத்தை இவற்றில் வற்புறுத்தி யிருப்பதைக் காணலாம்.

அளவாயிருந்த போதிலும், அவை முக அழகைக் கெடுத்தன. கண்ணிற்குக் கீழே சம அளவான இரு காயங்கள்; நெற்றியிலே மூக்கிற்கு அருகிலே ஒரு பெரிய காயம். மங்கையரின் முக அழகைக் கெடுப்பதில் கைதேர்ந்த ஒரு கலைஞனின் திறமையைப் புலப்படுத்தின இந்தக் காயங்கள்.

அந்தப் பெண் என்னைப் பார்த்தாள். கண்களில் தோன்றிய அச்சம் கொஞ்சங் கொஞ்சமாக மறைந்தது......அவள் தன் கையில் ஒட்டிக் கொண்டிருந்த மணலை உதறி விட்டுச் சொன்னாள் :

"உனக்கும் பசியாயிருக்கிறதா ?... தோண்டு. என் கை வலி எடுக்கிறது. அதோ, (கடையைச் சுட்டிக் காட்டிய வாறு)...அங்கே ரொட்டி இருக்கும்..."

நான் தோண்டலானேன். அவள் என்னைப் பார்த்தவாறு கொஞ்ச நேரம் பேசாமலிருந்தாள். அப்புறம் என் னருகே உட்கார்ந்து எனக்கு உதவி செய்தாள்.

நாங்கள் மௌனமாக வேலை செய் தோம். அப்பொழுது கிரிமினல் சட்டமோ, ஒழுக்கமோ, சொத்துரிமை யைப் பற்றிய எண்ணமோ என் சிந்தையி லிருந்ததா என்று இப்போது ஞாபகம் இல்லை. இதை யெல்லாம் வாழ்க்கையில் ஒவ்வொரு நிமிஷமும் நினைவிலேயே வைத்துக் கொண்டிருக்க வேண்டும் என்று அறிஞர்கள் சொல்லி யிருக்கிறார்கள். நான் ஒப்புக் கொள்ளுகிறேன் : அப்போது கடைக்கு அடியிலே குழி தோண்டுவதிலேதான் நான் ஈடுபட்டிருந்தேன். கடையிலே என்ன கிடைக்கும் என்பதைத் தவிர, மற்ற விஷயங்களை ஒரேயடியாக மறந்து விட்டேன்.

மாலை வந்தது. எங்களை இருள் சூழ்ந்தது. ஒரே ஈரம், குளிர். அலைகளின் ஓசை ஓரளவு குறைந்ததுபோலத் தோன்றியபோதிலும், மழை விடவில்லை.

"இந்தக் கடைக்குக் கீழ்த்தளம் இருக்குமா, இராதா ?" என்று மெல் லிய குரலில் அப்பெண் கேட்டாள். அவள் என்ன சொன்னாள் என்பது எனக்குப் புரியவில்லை. ஆகையால் நான் ஒரு பதிலும் சொல்லாமல் இருந்தேன்.

"உன்னைத்தானே ! இந்தக் கடைக் குத் தளம் இருக்கிறதா, இல்லையா ? தளம் இருந்தால் நமது வேலை எல்லாம் வீண்தான். நாம் பெரிய குழியாகத் தோண்டுகிறோம் என்று வைத்துக் கொள். அப்புறம் கனமான பலகை இருந்தால் என்ன செய்வது ?......... பூட்டை உடைப்பதுதான் சரி......அது ஒரு பூட்டா என்ன ?"

பெண்களுடைய மூளையிலே நல்ல யோசனை உதயமாவது அபூர்வம். ஆனால் பாருங்கள், சில சமயம் உதயமாகத் தான் செய்கிறது !

பூட்டைப் பிடித்துப் பலமாக இழுத் தேன். கதவு திறந்தது. உடனே அவள் உள்ளே புகுந்தாள். "நல்ல வேலை செய்தாய் !" என்ற வார்த்தைகள் அவள் வாயிலிருந்து வெளிவந்தன. பிரசங்கிகள் அனைவருடைய திறமையும் ஒருங்கே வடிவெடுத்து வந்தது போன்ற புகழ்மொழியைக் காட்டிலும், ஒரு மங்கை பாராட்டிச் சொல்லும் இரண் டொரு வார்த்தைகளே சிறந்தவை என்பது இப்போது என் கருத்து. ஆனால், அந்தக் காலத்திலே எனக்கு ரசிக உணர்ச்சி கிடையாது. ஆகவே, அவளுடைய புகழுரையைக் காதில் போட்டுக் கொள்ளாமல், பரபரப்புடன் "கடையில் ஏதாவது இருக்கிறதா ?" என்று கேட்டேன்.

அவள் வரிசையாகச் சொல்ல ஆரம் பித்தாள் : "ஒரு கூடைப் போத்தல், காலிச் சாக்கு, குடை, வாளி"—இவை

சாப்பிடத் தக்கவை அல்லவே! இவ்வளவு கஷ்டமும் வீணு? — என்று நான் கருதினேன்... இந்தச் சமயத்தில் அவன் திடீரென்று "ஓ, இருக்கிறது!" என்றான்.

"என்ன?" என்று கேட்டேன்.

"ரொட்டி ஒரு துண்டு... கொஞ்சம் நனைந்திருக்கிறது. அவ்வளவுதான். எடுத்துக்கொள்!"

ரொட்டி என் காலருகே உருண்டு ஓடி வந்தது. அதன் பின் அவனும் ஓடி வந்தான். நான் இதற்குள்ளாக ரொட்டியில் ஒரு பகுதியைப் பிய்த்து வாயில் போட்டு மென்றேன்.

"எனக்குக் கொஞ்சம் கொடேன்!... இங்கிருந்து சீக்கிரமாய்ப் போய்விட வேண்டும். ஆனால், எங்கே போவது?"

மழை கொட்டிக் கொண்டிருந்தது. அந்த இருட்டிலே அவன் நாலாபுறமும் உற்று நோக்கினான்.

"அதோ, அங்கே ஒரு படகு கவிழ்ந்து கிடக்கிறது. அங்கே போவோமா?"

"சரி."

திருடின பொருளைப் பிய்த்துப் பிய்த்து வாயில் திணித்தவாறு நாங்கள் நடந்தோம். மழை பலமாகப் பெய்தது; நதியோ ஒரே ஆரவாரம் செய்தது. காற்று பயங்கரமாக ஊளையிட்டது. என் மனதிலே வேதனை உண்டாயிற்று.

"உன் பெயர் என்ன?" என்று கேட்டேன். அவன் ரொட்டியை மென்றவாறு, "நடாஷா" என்றான். நான் அவளைப் பார்த்தேன். துக்கம் நெஞ்சை அடைத்தது. எங்கள் முன்னாலே தோன்றிய அந்தகாரத்தை நோக்கினேன். தலைவிதி என்னை நோக்கிப் பயங்கரமாக நகைப்பது போலிருந்தது.

ஓய்வு ஒழிவு இல்லாமல் படகின் மீது மழை பெய்தது. மழை ஓசையினால் என் மனதில் பல துயரமான சிந்தனைகள் தோன்றின. படகின் அடிப் பக்கம் ஓட்டை. அந்த ஓட்டையின் வழியாகக் காற்று சீறிக்கொண்டு வந்தது. அலைகள் ஒன்றன்மீது ஒன்றாக விழுந்து கரையை மோதின. அதனால் விளைந்த பேரொலி ஒரே மாதிரியாகவும் நம்பிக்கை யற்றதாகவும் இருந்தது. அயர்ச்சி மிகுந்த ஒரு விஷயத்தைச் சொல்வதுபோலிருந்தது அந்த ஒலி.

கவிழ்ந்த படகிற் கடியிலே நாங்கள் தங்கியிருந்தோம். படகு நனைந்து இற்றுப் போயிருந்தது. அடிப் பக்கத்து ஓட்டை வழியாகக் குளிர்ந்த மழைத் துளிகளும் காற்றும் வந்தவாறு இருந்தன. நாங்கள் இருவரும் மௌனமாய் உட்கார்ந்திருந்தோம். குளிரின் மிகுதியால் நடுங்கினோம். தூங்க விரும்பினேன் என்று ஞாபகம். அவள் படகின் புறமாகச் சாய்ந்து கொண்டு, சிறு பந்தைப் போல் உடம்பைச் சுருக்கிக் கொண்டாள். முகவாய்க் கட்டையை முழங்கால் மீது வைத்தவாறு கண்களை விரித்து நதியை நோக்கினாள். கொஞ்சங் கூட அசையவில்லை. அவளுடைய மௌனத்தைக் கண்டு எனக்கு ஒரு வகையான அச்சம் உண்டாயிற்று. அவளுடன் பேச விரும்பினேன். ஆனால், எப்படி ஆரம்பிப்பது என்றுதான் தெரியவில்லை.


முதலில் பேசியது அவளே.

"என்ன வாழ்வு இது!" என்றாள் அவள்.


அது வெறும் சிணுங்கல் அல்ல. அவளுடைய குரலிலே அலட்சியம் தோன்றியது. வாழ்க்கையைப் பற்றி அவள் பல முறை சிந்தித்து ஒரு முடிவுக்கு வந்தவள் போலக் காட்டிற்று அவ் வாக்கியம். அதை மறுக்க என்னால் முடியவில்லை. ஆகவே, பேசாமல் இருந்தேன். அவள் என்னைக் கவனிக்காதவள் போல் ஆடாமல் அசையாமல் உட்கார்ந்திருந்தாள்.

நடாஷா மீண்டும் பேசலானாள். இம் முறை அவளுடைய குரல் மிக்க அமைதியாக இருந்தது.

வாழ்க்கையைப் பற்றிய அவள் கூறிய விஷயம், சொல்ல வொண்ணாத ஒரு



ருஷியாவில் தொழிலாளரின் அரிய சேவையைப் போற்றிப் பாராட்டுவதற்காக விசேஷப் பதக்கங்கள் பரிசளிக்கிறார்கள். அவற்றில் சில மேலே காணலாம்.



மாஸ்கோ நகரத்திலுள்ள பிரசித்தி பெற்ற லெனின் லைப்ரரி: ஒரு கோடிப் புத்தகத்துக்கு மேல் இந்தப் புத்தகசாலையில் இருக்கின்றனவாம்.

வகை வேதனையை உண்டாக்கிற்று. இன்னும் பேசாமல் இருந்தால், அழுகை வந்து விடும் போலிருந்தது.

"உன்னை யார் அடித்தது?" என்று கேட்டேன் நான்.

"பாஷ்கா பண்ணின வேலை" என்றான் அவன்.

"அது யார், பாஷ்கா?"

"என் காதலன்!...ரொட்டிக் கடைக்காரன்."

"அடிக்கடி இப்படி அடிக்கிறானா?"

"குடிக்கிற போதெல்லாம் அடிக்கிறான்."

திடீரென்று அவன் என்னருகே நகர்ந்து வந்து தன்னைப் பற்றியும் பாஷ்காவைப் பற்றியும், இரண்டு பேருக்கு மிடையே இருந்து வந்த உறவைப் பற்றியும் பேசத் தொடங்கினான். "தறிதலைப் பயல், என்னை மிகவும் துன்புறுத்துகிறான். நேற்று முன் தினம் 'கொஞ்ச தூரம் வெளியே போய் விட்டு வருகிறேன்' என்று சொல்லி எஜமானியம்மாளிடம் உத்தரவு வாங்கிக்கொண்டு வீட்டிற்குப் போனேன். அவன் நன்றாகக் குடித்து விட்டு உட்கார்ந்திருந்தான். நான் 'டேய்! போக்கிரி, வஞ்சகா' என்று அவனைத் திட்டினேன். அவன் எழுந்து வந்து அடி அடி என்று அடித்தான்; உதைத்தான்; தலை மயிரைப் பிடித்து இழுத்தான். இன்னும் பல இம்சைகள் செய்தான். அதை எல்லாம் பொருட்படுத்துபவள் அல்ல நான். ஆனால், என் துணி மணிகளைக் கிழித்து விட்டான்! இப்போது நான் என்ன செய்வது? எஜமானி அம்மாள் முன்பு எவ்வாறு போவது?......புத்தப் புதிசு......தெய்வமே! என் கதி என்ன ஆகும்?"

காற்று இரைந்தது. குளிர் வர வர அதிகமாயிற்று. பற்கள் கிட்டிக் கொண்டன. குளிரின் மிகுதியால் அவனுடைய மெய் சிலிர்த்தது. அவன் என்னருகே நெருங்கி வந்து உட்கார்ந்தான். அந்த இருளிலே கூட, அவனுடைய கண்ணின் ஒளி தோன்றியது.

"ஆண்களாகிய நீங்கள் அனைவரும் போக்கிரிப் பயல்கள். காலடியிலே போட்டு உங்களை மிதிப்பேன். யாராவது வாயைத் திறந்தால் கொஞ்சங்கூட இரக்கமில்லாமல் காறித் துப்புவேன். அயோக்கிய, அற்பப் பதர்கள்! நீங்கள் வாலை ஆட்டுகிறீர்கள். ஆனால், முட்டாள்களாகிய நாங்கள் ஒரு முறை உங்கள் அருகே வந்தால் போதும், அதோடு எங்கள் கதி அதோகதி தான்! நீங்கள் நன்றாக எங்களை ஏமாற்றித் துன்புறுத்துகிறீர்கள்...... அயோக்கியர்கள்!"

அவன் நிறைய வைதான். ஆனால் அந்த வசவுக்குப் பயனில்லை. நான் அறிந்த வரையில் இந்த 'அயோக்கியர்' மீது அவளுக்கு வெறுப்போ விரோதமோ இல்லை. அவன் மிக்க அமைதியோடு பேசினான். ஆனால், அந்த வயதில் நான் படித்தும் கேட்டுமிருந்த புத்தகங்கள், பிரசங்கங்கள் எல்லாவற்றையும் விட அவன் கூறிய விஷயம் என் மனதிலே நன்றாகத் தைத்தது. சாவைப் பற்றி எவ்வளவுதான் செயற்கையாகவும் பொருத்தமாகவும் வருணித்த போதிலும் உண்மையான மரண வேதனை தான் இயற்கையாக இருக்குமல்லவா?

மெதுவாகப் பெருமூச்செறிந்தேன்.

திடீரென்று, இரண்டு சில்லென்ற சிறிய குளிர்ந்த கரங்கள் என்னைத் தொடுவதை உணர்ந்தேன். அவற்றில் ஒன்று கழுத்திலே படிந்தது. மற்றொன்று முகத்தை அணுகியது. அதே சமயம் மெல்லிய, அன்பு மிகுந்த ஒரு குரலையும் கேட்டேன்.

"என்ன விஷயம்?"

இந்த மாதிரி கேட்டது நடாஷா அல்ல, வேறு யாரோ என்று கருத விரும்பினேன். ஆண்கள் அனைவரும் போக்கிரிகள் என்றும், அவர்கள் அழிந்து போவதைத் தான் காண விரும்புவதாகவும் அவன் கொஞ்ச நேரத்

திற்கு முன்னால் சொன்னேனே! ஆனால் இப்போது பேசியதும் அவளேதான்.

"என்ன விஷயம், குளிருகிறதா?... அட, என்ன அபூர்வ மனிதனா யிருக்கிறாய் நீ! ஆந்தையைப் போலப் பேசாமல் உட்கார்ந்திருக்கிறாயே! குளிருகிறது என்று ஏன் சொல்லக் கூடாது?"

அவள் என்னைத் தேற்றினாள்......உற்சாக மூட்டினாள்... நான் நாசமாய்ப் போக! — அச் சமயம் மனித குலத்தின் தலையெழுத்தைப் பற்றியே தீவிரமாக எண்ணிக் கொண்டிருந்தேன். சமூகப் புனரமைப்பு, அரசியல் குழப்பங்கள் முதலியவை சம்பந்தமாகக் கனவு கண்டு கொண்டிருந்தேன். இங்கு, வாழ்க்கையிலே ஒரு வித நிலையுமின்றி ஒன்றுக்கும் பயனற்று, பலராலும் துரத்தி வேட்டையாடப்பட்ட ஒரு துர்ப்பாக்கியவதி தனது உடம்பிலுள்ள சூட்டின் மூலம் என் குளிரைப் போக்கிக் கொண்டிருந்தாள். இவையெல்லாம் ஒரு கனவில், அபத்தமான பயங்கரமான கனவில், நிகழ்கிறது போலும் என்று கருத விரும்பினேன்.

ஆனால், அந்தோ! அவ்வாறு கருத முடியவில்லையே! குளிர்ந்த மழைத் துளிகள் என் மீது விழுந்து கொண்டிருந்தன. ஒரு பெண்ணின் கைகள் என்னைத் தழுவியவாறு இருந்தன. கதகதவென்றிருந்த அவளுடைய மூச்சு என் முகத்திலே பட்டது. அந்த மூச்சிலே 'ஓட்கா' மதுநாற்றம் வீசிற்று. காற்று இரைந்தது. படகின் மேல் மழை கொட்டிற்று.

அன்பாகவும் அனுதாபத்துடனும் அவள் பேசிக்கொண்டே இருந்தாள். அம்மாதிரி பேசுவதற்குப் பெண்களால்தான் இயலும். நேயம் மிகுந்த அந்த எளிய வார்த்தைகள் என் மனத்திலே ஒரு சிறு நெருப்பை மூட்டின. அந்த நெருப்பு என உள்ளத்திலே இருந்த ஏதோ ஒரு பொருளை உருக்கியது.

என் கண்களிலிருந்து நீர் பெருகலாயிற்று. இதற்கு முன்னால் மனத்திலே குவிந்து கிடந்த அழுக்கும், பாசமும் அந்தக் கண்ணீர் மூலம் கரைந்து மறைந்தன.

அவள் என்னைத் தேற்றிக்கொண்டிருந்தாள்.

"கண்ணே, போதும், ஏன் நடுங்குகிறாய்?......கடவுள் அருளால் எல்லாம் சரியாய்ப் போகும்......இன்னொரிடத்தில் வேலை கிடைக்கும் ...... போதும், நடுங்காதே, உனக்கு நாளைக்குப் போக்கிடம் இல்லையானால் நான் ஒத்தாசை செய்கிறேன்."

மெல்லிய குரலில் அவள் கூறிய இந்த வார்த்தைகள் கனவிலே யாரோ சொல்லியது போல இருந்தன.

விடிந்ததும், படகிலிருந்து வெளி வந்து, நகரத்திற்குப் போனோம். அப்புறம் அவளைச் சந்திக்கவே இல்லை. ஆறு மாதம் வரை அவளுக்காக அந்தப் பட்டணமெல்லாம் அலைந்து பார்த்தேன். அவளைக் காண முடியவில்லை.

அவள் முன்னமே இறந்து போயிருந்தால், (அப்படியானால் அவளுக்கு நல்லதுதான்) அவளுடைய ஆன்மா சாந்தி பெறுவதாக. இன்னும் அவள் உயிரோடிருந்தால், அவளுடைய வாழ்க்கை அமைதி பெறுவதாக.

கனவில் கிடைத்த பதவி

சில நாட்களுக்கு முன்னால் ரூஸ்வெல்ட், ஸ்டாலின், சர்ச்சில் மூவரும் சந்தித்தது பற்றி லியனார்ட் லியான்ஸ் என்னும் ஓர் அமெரிக்க எழுத்தாளர் வேடிக்கையாக ஒரு கதை சொல்லுகிறார்:

"யுத்தம் முடிந்து விட்டதாகவும் சர்வதேச சங்கத்தின் தலைவனாக என்னை நியமித்து விட்டதாகவும் நான் நேற்றிரவு ஒரு கனாக் கண்டேன்" என்றார் ரூஸ்வெல்ட்.

"நானும் ஒரு கனாக் கண்டேன். அதில், யுத்தம் முடிந்து விட்டதாகவும் நான் சர்வதேச சங்கத்தின் பிரதம மந்திரியாயிருப்பதாகவும் கண்டேன்" என்றார் சர்ச்சில்.

"மேற்படி பதவிகள் இரண்டுக்கும் நான் யாரையும் நியமித்ததாக எனக்கு ஞாபகம் இல்லையே!" என்றார் ஸ்டாலின். —நியூயார்க் போஸ்ட்

தொழில் வளர்ச்சியா? இந்திரஜாலமா?

எப்படி யிருந்த தேசம் எப்படியாகி யிருக்கிறது! — சுமார் இருபது வருஷ காலத்திற்குள் ருஷியாவில் ஏற்பட்டுள்ள மகத்தான தொழில் வளர்ச்சியைப் பார்க்கப்போனால் ஏதோ இந்திரஜால வித்தை போலவே தோன்றும்.

ருஷியா உலகத்திலேயே ஆறில் ஒரு பங்கு ஜனத்தொகை கொண்ட தேசம். 20 கோடி ஜனங்கள் இருக்கிறார்கள். இயற்கைச் செல்வமோ அபாரமாயிருக்கிறது. எண்ணெய், நிலக்கரி, இரும்பு, மாங்கனீஸ் எல்லாம் இருக்கின்றன.

ஆனால் இவ்வளவு எல்லாம் இருந்தும், ஜார் மன்னர் அரசாண்ட காலத்தில், ருஷியாவில் ஜனங்கள் வறுமையினாலும் நோயினாலும் உயிர் துறந்தார்கள். முக்கால்வாசிப் பேர்களுக்கு எழுதவோ படிக்கவோ தெரியாது. கட்டிக் கொள்ளத் துணி இல்லை; வசிக்க வீடு இல்லை. ஆயிரம் ஆயிரமாக பிச்சைக்காரர்கள் நகரங்களில் திரிந்து கொண்டிருந்தார்கள். "எலிகள் சாக்கடையில் வாழ்கின்றன என்றால் ஜனங்கள் தெருக்களில் வாழ்கிறார்கள்" என்று ஒரு ஆசிரியர் எழுதினார்.

இதெல்லாம் இப்பொழுது பழைய கதை. 1917-ம் வருஷம் ஜனப் புரட்சி தோன்றி ஸோவியத் ஆட்சி ஏற்பட்ட பிறகு புது உலகம் சிருஷ்டிக்கப் பட்டு விட்டது. தொழில்கள் சர்க்கார் வசமாகி விட்ட பிறகு நிலைமை அடியோடு மாறிவிட்டது. பஞ்சமும் வறுமையும் நாட்டை விட்டு மறைந்து விட்டன. ஜார் அரசாண்ட காலத்தில் இந்தியாவைப் போல் விவசாய நாடாக மட்டும் இருந்த ருஷியா, இப்பொழுது தொழில் வளர்ச்சியில் ஈடு இணையற்று விளங்குகிறது. ஆகாய விமானங்கள் முதல் ரசாயனப் பொருள்கள் வரை எல்லாம் ருஷியாவிலேயே தயாராகின்றன. இப்பொழுது ருஷியாவிலுள்ள இயந்திரங்களைப்போல் நவீனமானவை வேறு எங்கும் கிடையாது. ருஷியாவில் தயாராகாத சாமான் வேறு எங்கும் இல்லை.

பொருள் உற்பத்தியில் ருஷியா இன்று உலகத்திலேயே அமெரிக்காவுக்கு அடுத்தபடியாக இரண்டாவது ஸ்தானத்தை வகிக்கிறது.

இந்த அதிசயமான முன்னேற்றம் எப்படி ஏற்பட்டது? ஸோவியத் சர்க்கார் கொண்டு வந்த மூன்று ஐந்து வருஷத் திட்டங்கள்தான் இதற்கெல்லாம் காரணம். அவற்றின் பலனாக முன்பு ஒரு கோடியா யிருந்த தொழிலாளர்களின் எண்ணிக்கை மூன்று கோடியாக ஆயிற்று. பொருள் உற்பத்தியோ ஒன்றுக்கு மூப்பது பங்காக வளர்ந்தது.

உலகத்தில் உற்பத்தியாகும் தானியத்தில் கால்வாசி இப்போது ருஷியாவில் விளைகிறது. மிகவும் நவீனமான விவசாயக் கருவிகளை உபயோகித்துக் கூட்டு முறையில் நிலத்தைச் சாகுபடி செய்கிறார்கள்.

ருஷியா தொழில் வளர்ச்சியிலும் பொருள் உற்பத்தியிலும் முன்னணியில் நிற்பதற்கு நாட்டின் இயற்கைச் செல்வமும் மக்களின் பண்பாடும் மட்டும் காரணம் அல்ல; 1917-ம் வருஷப் புரட்சியால் கிடைத்த அரிய சமூக அமைப்புத்தான் மூல காரணம். மனிதர் ஒருவரை ஒருவர் சுரண்டுவதற்கு இந்த அமைப்பு இடங் தரவில்லை. ஆகவே ஒவ்வொரு மனிதனின் உழைப்பின் பலனும் உற்பத்தியின் லாபமும் பிரஜைகள் எல்லாருக்குமே சமமாகப் போய்ச் சேருகின்றன. எனவே, தேசத்தில் பொருள் உற்பத்தியும் சுபிட்சமும் நாளுக்கு நாள் பெருகுவதில் ஆச்சரியம் என்ன?



1932-ல் நீப்பர் நதியில் கட்டப்பட்ட இந்த அணைக்கட்டினால் அபரிமிதமான மின்சார சக்தி உற்பத்தியாகி வந்தது. ஜெர்மானியர் படையெடுப்பின்போது, அவர்களுக்கும் பயன் படக்கூடாதென்று அதை ருஷ்ய மக்களே தகர்த்தெறிந்து விட்டார்கள்!



2 முனைகளிலும் சேவை

யுத்த சமயம் யுத்தத்தில் ஈடுபடாதவர்களுக்கும் சரி யுத்தத்தில் ஈடுபட்டவர்களுக்கும் சரி வாழ்க்கை மிகவும் கஷ்டமானதே. விடுமுறைநாட்கள் குறைவு. வேலைகடுமை. ஓய்வு நேரமோ அரிது. ஆகையால் அதை சரியானபடி உபயோகிப்பது மிக அவசியம். புஸ்தகம் அல்லது பத்திரிகை படித்துக்கொண்டு நன்கு தயாரித்த புத்துயிர் அளிக்கும் டீ அருந்துவதைவிட வேறு என்ன நல்லவழி இருக்கிறது.

டீ உங்களுக்கு உற்சாகமூட்டுகிறது. அத்துடன் கவலைகளை மறக்கச்செய்கிறது. டீ ஒருவிதத்திலும் கெடுதலளிக்காமல் சுறுக்கைக்கொடுக்கிறது. டீ வெயில்காலங்களில் குளிர்ச்சியளித்தும் குளிர்காலத்தில் உஷ்ணத்தையும் தருகிறது. டீயை உங்கள் ஆப்த நண்பன் போல் கருதி உங்கள் ஓய்வுநேரத்தை அவனுடன் அனுபவித்து சந்தோஷியுங்கள்.

இந்தியன் டீ

களைப்படையும் சமயம் டீ அருந்துங்கள்

இந்தியன் டீ மார்க்கெட் எக்ஸ்பான்ஷன் போர்டாரால் வெளியிடப்பட்டது.

IK 234 TM



இந்தியத் தேயிலையில்

மிகச்சிறந்தது

மிக நேர்த்தியான மணமும், நல்ல நிறமும், குறைந்த விலையும் உள்ள



லிப்டன்ஸ் வெள்ளை லேபில் தேயிலைகள் இதர தேயிலைகளை விட சிறந்தவை.

லிப்டன்ஸ்

வெள்ளை லேபில்

நேர்த்தியான இந்திய தேயிலை

LTK 84 W

எழுந்தது ஜனசக்தி!

★

1. “நாஜிகள் நாங்களே வீரர்கள்
நானிலம் அனைத்தையும் ஆளுவோம்
சுற்றி வளைத்துத் தாக்குவோம்
சுவஸ்திக் கொடிதனை நாட்டுவோம்!

2. எதிரி எவனா யிருந்தாலும்
எங்கள் எல்லையில் கால்வைத்தால்
சின்னா பின்ன மாக்கிடுவோம்
சிதறி ஓடச் செய்திடுவோம்

3. இறுதி வெற்றி ஜெர்மனிக்கே
இல்லை தோல்வி எங்களுக்கே!”
என்றார் ஹிட்லர் அப்போது
எரியுது பெர்லின் இப்போது!

4. செஞ்சேனை கண்டு நடுநடுங்கி
செத்தோம் பிழைத்தோம்’ என்றலறி
ஜெர்மன சேனை ஓடுதடா!
செங்கொடி வானில் பறக்குதடா!

5. பாட்டாளி மக்கள் படைகண்டு
பாஸிஸ பூதம் பதுங்குதடா!
என்றும் இல்லா அதிசயமாய்
ஏகாதி பத்தியம் ஏங்குதடா!

6. ஜனசக்தி திரண்டு எழுந்ததடா!
சாவைச் சிரித்துச் சென்றதடா!
மின்னல் தோன்றி மறைவதுபோல்
மின்னல் தாக்குதல் மறைந்ததடா!

7. வெற்றிக்குக் காரணம் இதுவன்றோ?
வெறும் இயந்திரம் வெல்லுவதும் உண்டோடா?
உண்மை இதுவென்று சொல்லுவோம்;
உலகத்தைப் பின்பற்றிச் செல்லுவோம்!

8. இந்திய நாட்டினில் என்றுதான்
இந்த ஜனசக்தி இயங்குமோ?
எல்லோரும் மன்னர்க ளாவமோ?
ஏழை படுந்துயர் நீங்குமோ?

—விந்தன்

சந்தனம் —
குளிர்ந்த மணம்

ஆதிகாலந்தொட்டு சந்தனத்தின் விலையற்ற குணங்களில் ஒன்று அதன் குளிர்ச்சியளிக்கும் தன்மையே. ஈரந்தாவேற்படும் தாபத்தை தணிப்பதற்குரிய [illegible] சோர்வுற்ற அவயவங்களுக்குப் புத்துயிர் அளிப்பதற்கும் உபயோகப்படுகின்றது. குறைவற்ற தன்மையை முன்னோர்கள் சந்[illegible]திற்கு ஒப்பிடுவார்கள். அதே சந்தனம் இன்[illegible] சந்தன சோப் என்னும் வாசனை உ[illegible] சரீரத்தின் குளிர்ச்சிக்கும், சோர்வையகற்[illegible] பயன்பட்டு வருகிறது.

மைசூர்
சந்தன சோப்

சந்தனம் குறிப்பது குற்றமற்ற குணமே

[illegible] இந்தியாவுக்கு ஏக ஏஜண்டுகள் – பெஸ்ட் & கம்பெனி, லிமிடெட், சென்னை

B·I·Tm

காலக்ஷேபம்

என்ன பிரமாதம்!

ராமு (போலீஸ் இன்ஸ்பெக்டர் மகன்):—என்னுடைய தகப்பனாரைப் பார்த்தால், எல்லாரும் பயந்து 'சலாம்' செய்வார்களே!

சோமு (பில் கலெக்டர் மகன்):—இது என்ன பிரமாதம்! என்னுடைய தகப்பனாரைப் பார்த்தால் எல்லாரும் பயந்து ஓடி ஒளிந்து கொள்வார்களே!

—எம். எஸ். ரங்கராஜன்

★

வராத காரணம்!

தகப்பனார்:—அம்பிப் பயல் விஷமம் பண்ணுகிறானென்று கூடத்து அறையில் தள்ளிக் கதவைச் சாத்திவிட்டேன். இப்போது கூப்பிட்டால் வெளியே வரமாட்டேனென்கிறானே!

தாயார்:—அட பாவமே! அந்த அறையில்தானே மைசூர்ப் பாகையெல்லாம் மூடி வைத்திருக்கிறேன்!

—டி. கே. சுப்ரமண்யன்.

★

நல்ல முறை

கடிகாரம் ரிப்பேர் செய்பவர்:—கடிகாரம் ரிப்பேர் செய்ததற்கு நீங்கள் இன்னும் பணம் கொடுக்கவில்லையே!

கடிகார சொந்தக்காரர்:—நான் எந்தக் காரியத்தையும் வரிசைக் கிரமமாகச் செய்கிறவன். கடிகாரம் வாங்கியதற்குப் பணம் கொடுத்த பிறகுதான் உமக்குக் கூலி கொடுப்பேன்! —சி. எஸ். சோர்ணமூர்த்தி.

★

தெய்வ பக்தி

ஒருவர்:—நான் இப்பொழுதெல்லாம் கோவிலுக்குப் போகத் தவறுவதில்லை.

மற்றவர்:—ஏன், தெய்வபக்தி அதிகமாய் விட்டதோ?

ஒருவர்:—இல்லை, ஸார், அங்கேயாவது சப்பாத்தியில்லாமல் நல்ல பிரசாதம் சாப்பிடலாம் என்றுதான்! —ஏ. பெரியநாயகி.

அதிகம் பழகாதவன்!

ஸர்க்கஸ் பார்க்கச் சென்ற ஒருவர், சிங்கத்தின் அருகில் நின்று கொண்டிருந்த ஒருவனைப் பார்த்து, "என்ன, நீ மிகவும் தைரியசாலியாக இருக்கிறாயே! சிங்கத்துடன் அதிகம் பழகுவாயோ?" என்று கேட்டார்.

"இல்லை; அதற்கு வேறு ஆசாமி இருக்கிறார்; நான் சும்மா சிங்கத்தைக் குளிப்பாட்டித் தீனி வைப்பேன், அவ்வளவுதான்!" என்றான். —ஜி. முத்துகிருஷ்ணன்.

★

முதல் பையன்!

தகப்பனார்:—ஏண்டா! 'இயற்கைப் பாடத்தில் நான்தான் முதல் பையன்' என்றாயே, 'நீர்ப்பறவைக்கு மூன்று கால்கள்' என்று பரீக்ஷையில் எழுதியிருக்கிறாயே?

பையன்:—நான்தான் அப்பா மூன்று கால்கள் என்று குறைத்து எழுதினேன்; ஒவ்வொருவன் ஏழு, எட்டு என்றெல்லாம் எழுதியிருந்தானே!

—ஆர். ராமசுப்ரமண்யன்.

★

அவருக்குத் தோன்றியது!

ஒருவர் (தம் நண்பரிடம்):—இன்றைய ரேஸுக்குக் கட்டாயம் போகப்போகிறேன்; என்ன ஆனாலும் ஒரு கை பார்த்து விட்டுத்தான் வரப்போகிறேன். இதோ பார்த்தீரா, நம்ம செலக்ஷன்?

நண்பர்:—ஆஹா! பார்த்தேன்.



ஒருவர்:—உமக்கு என்ன தோன்றுகிறது?

நண்பர்:—எதற்கும் நீங்கள் 'ரிடர்ன் டிக்கட்' வாங்கிக் கொள்வதே நல்லதென்று தோன்றுகிறது!

—டி. எம். பார்த்தசாரதி.


குளிர்ச்சியுடன் இருக்கச் செய்கிறது!
நான் களைப்படையாமல் இருக்கிறேன்!
விநோலியா அதிக சுகத்தைக் கொடுக்கக் கூடிய சோப். அதை உபயோகிப்பதனால் ஒவ்வொரு ஸ்நானமும் குளிர்ச்சியையும், உத்ஸாகத்தையும் உண்டு பண்ணுகிறது. இந்த சோப்பின் வாசனை களைப்படைந்த நரம்புகளுக்கு சோர்வை போக்கி சுகத்தைக் கொடுக்கிறது.
உத்ஸாகத்தைக் கொடுக்கிறது!
VINOLIA White Rose Soap
விநோலியா
ஒயிட் ரோஸ் ஸோப்பு
VWR. 16-60 TM
VINOLIA CO. LIMITED, LONDON, ENGLAND

ஈறுகளில் ரத்தம் கசியக் கூடாது


—முன் ஜாக்கிரதையாக இருங்கள்!



உடனே கவனிக்க வேண்டும் — ரத்தம் கசியும் ஈறுகள் பற்சொத்தைக்கு ஆரம்பம். கிப்ஸ் "எஸ். ஆர்." டூத் பேஸ்ட் ஈறு வியாதிகளையும் பயோரியா ஜின்ஜிவிடிஸ் முதலிய பல் வியாதிகளையும் தடுத்து கட்டுப் படுத்துகிறது. இவ் வியாதியின் பற்களை நாசமாக்குவதுடன் அவைகளை சிறுக்காலிட்டு தேக ஆரோக்யத்தையே பாழாக்கும். அதில் உள்ள சோடியம் ரெஸினோலியேட் ஈறு உபாதைகளுக்கு பல் வைத்தியர்களின் சிகிச்சை. பற்களையும் ஈறுகளையும் ஆரோக்கிய... வைத்திருக்க கிப்ஸ் "எஸ். ஆர்." வழக்கமாக உபயோகியுங்கள்.

Gibbs

"S.R." TOOTHPASTE



GSR. 17-33 TM — D & W. GIBBS LTD., LONDON, ENGLAND



உங்கள் மனதிற்குகந்த நறுமணம் தொண்டைக்குக் கெடுதல் செய்யாது

டிலக்ஸ் டெனுர் சிகரெட்டின் உண்மை மணத்தை நீங்கள் விரும்புவீர்கள். உயர்ந்ததும், அவசியமானதுமான பண்டங்கள் கிராக்கியாய் விற்கும் இந்நாளில் கூட இந்த சுகம் நிறைந்த சிகரெட்டுகள் நம்மில் பலர் வாங்கக்கூடிய விலைக்கே விற்கப்படுகின்றன. உத்தரவாதமுள்ள 100% வர்ஜீனியா புகையிலையிலிருந்து தயாரிக்கப்பட்டது டெனுர் சிகரெட்டுகள்.

டி லக்ஸ் டெனுர் சிகரெட்டு
ஜேம்ஸ் கார்ல்டன் லிட், லண்டன்

Tenor is *truly* a de Luxe Cigarette

JAMES CARLTON LTD. LONDON.

கல்கி



KALKI மே 6, 1945 **4** அணா



கேசரி குடீரம் லிமிடெட், மதராஸ்

தமிழ் நாடு ஏஜெண்டுகள் :

சீதாராம ஜெனரல் ஸ்டோர்ஸ்

மேலக் கோபுர வீதி மதுரை

கோடை காலத்திற்குத் தகுந்த குளிர்ந்த பானங்கள்

கும்பகோணம் டி. எஸ். ஆர்.

கம்பெனியின்


குங்குமப்பூ, நன்னாரி, ரோஸ்

ஆரஞ்சு முதலிய சர்பத்துகள்

மதராஸ் ஸிடி ஏஜெண்டுகள் :
புஷ்பவனம் ஸ்டோர்ஸ்,
திருவல்லிக்கேணி.

ஸ்டாக்கிஸ்டு :
B. பாலபட்டாபி,
வைசியாள் தெரு, கோயமுத்தூர்

Regd. No. M. 4892



SRVS LTD

ரயிலிலிருந்து, பாஸஞ்சர், லக்கேஜுகள் பார்ஸல்கள், கூட்ஸ்கள் முதலிய சாமான்களை எடுத்து வரவோ, அல்லது வெளியூர்களுக்கு அனுப்பவோ நீங்கள் சிரமப்பட வேண்டாம்.

விவரங்களுக்கு எழுதுங்கள் :

ஸ்ரீ ராம விலாஸ் சர்வீஸ் லிமிடெட்

மதராஸ் & தென் மராட்டா ரயில்வேக்கு லோகல் டெலிவரி கண்ட்ராக்டர்கள்

202-3, மவுண்டு ரோடு :: போன் : 8536 :: மதராஸ்

Edited, Printed and Published by R. Krishnamurthy at the "Kalki" Press
116-119, Sladens Garden, Poonamallee High Road, Kilpauk, Madras.